REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி


පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 16 | மே யூன் 2009 | பக்கம் 16 | விலை 20/= | சுழற்சி 123



# இந்தியாவின் இரட்டை வேடம்!



அண்மையில் இந்தியப் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விருப்பத்தையும் விதத்தையும் இலங்கை அரசாங்கம் வெளிப்படையாக கூறவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேவேளை இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது என்பது இலங்கைக்குரிய விடயம். அது குறித்து இந்திய அரசாங்கம் எந்த வொரு அழுத்தத்தையும் கொடுக்காது என்று இந்திய வெளியுறவுச் செயலாளர், சிவசங்கர் மேனன் அண்மையில் தெரிவித்தார். இவ்விரண்டு நிலைப்பாட்டில் எது இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடாகும். இது இரட்டை வேடம் காட்டி நிற்கும் ஒரு நிலையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டத்தை ஒடுக்க இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா பூரணமான உதவிகளை செய்திருந்தது இலங்கையின் பேரினவாத சிங்களத் தேசியம் குறைந்த பட்ச அரசியல் தீர்வைக் காண்பதற்கு தயாரில்லாத சூழ்நிலை தொடர வேண்டும் என்பதும் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமல் இழுத்தடிக்கப்படுவயுமே இந்திய மேலாதிக்கம் விரும்புகிறது. அதனால் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று சொல்வதும் அரசியல் தீர்வில் இந்தியாவிற்கு அக்கறை இல்லை என்று சொல்வதும் ஒரே உள் நோக்கத்தை கொண்ட பிராந்திய மேலாதிக்க நிலைப்பாடேயாகும். அதனிடம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு இடமே இல்லை. ஆனால் இலங்கைத் தமிழர்களுக்காகப் பரிந்து பேசுவது போன்று இடையிடையே பேசிக் கொள்ளப்படும். அதனை நம்பவும் துதிபாடவும் தமிழரிடையே தலைவர்கள் எனப்படுவோரும் ஊடகங்களும் இருக்கின்றன.

தமிழ் இளைஞர் இயக்கங்களை அன்று சுதந்திரமாக இயங்க இந்தியா இடமளிக்கவில்லை. ஏறக்குறைய எல்லா இயக்கங்களுக்கும் ஆயுதப்பயிற்சி கொடுத்ததுடன் அவை மேற்கொண்ட பல தாக்குதல்களுக்கு பின்னால் இந்தியா ஆலோசனை இருந்துள்ளன என்பதும் இரகசியங்களல்ல.

1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையை செய்து கொண்டமையினால் இலங்கை அரசையும் தமிழ் மக்களையும் ஒரேவிதத்தில் இந்திய மேலாதிக்கப் பிடிக்குள் கொண்டு சென்றது. அதனடிப்படையிலான அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டமும் மாகாணசபை முறைமையும் பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை என்பதைப் பற்றியோ இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டமை பற்றியோ கண்டு கொள்ளாதது இந்தியாவின் நேர்மையை தோலுரித்துக் காட்டின.

நோர்வே அனுசரணையுடனான பேச்சுவார்த்தைகளை குழப்பியமை இலங்கை அரசைப் போருக்குத் தள்ளியமை போன்றவற்றுக்கு பின்னணியில் இந்தியாவே இருந்துள்ளது என்பதை நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டி வந்தோம்.

தமிழக மக்களும் இந்திய முற்போக்கு ஜனநாயக புரட்சிகர சக்திகளும் இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் பக்கம் நின்றனர். ஆனால் இலங்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணி முதல் த.வி.பு. இயக்கம் வரையான எல்லாத் தமிழ்த்தேசியவாத அமைப்புகளும் கட்சிகளும் இந்திய மேலாதிக்கம் பற்றித் தெரிந்து கொண்டும் தமது முதலாளித்துவ சந்தர்ப்பவாத குறுந்தேசியவாத நிலைப்பாட்டினால் இந்தியாவை நம்பி நம்பி ஏமாந்து கொண்டனர் அதனால் தமிழ் மக்களை இன்றைய அவல நிலைக்கு ஆளாக்கிக்கொண்டனர். இனிமேலும் கூட அவர்கள் இந்தியாவின் தமிழர் சார்பு பொய் முகத்தையும் இரட்டை வேடத்தையும் காண மறுத்து அவர்களது வாசல்படிகளில் காத்துக் கிடக்கின்றனர். இந்தியத் தலைவர்களைச் சந்தித்து முறையிடுவது ஏதோ பெரும் சாதனை என நம்பும் தமிழ்த் தலைமைகளைத் தான் தமிழ்மக்கள் தமது பிரதி நிதிகளாகக் கொண்டிருந்தமை என்பது தான் சோகம் தருவதாகும்.

அவ்வாறே அமெரிக்க ஐரோப்பிய ஜப்பானிய ஏகாதிபத்திய சக்திகளின் இலங்கை மீதான அக்கறை தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவானதல்ல என்பதை தெரிந்து கொண்டும் தெரியாதது போல் இருந்தமையும் தமிழ்த் தேசியவாத சக்திகளின் சந்தர்ப்பவாத பிற்போக்கு நிலைப்பாடேயாகும்.

2ம் பக்கம் →

# தமிழ் மக்களின் அவல நிலையைப் போக்க

# பொது இணக்கப்பாடு அவசியம்

## புதிய - ஜனநாயக கட்சி வேண்டுகோள்!

தமிழ் மக்களின் தற்போதைய அவல நிலையை மாற்றியமைக்க அவர்களுக்கு இயல்பு வாழ்க்கையை உறுதி செய்வதுடன், அவர்களது தேசிய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய, சுயநிர்ணய அடிப்படையிலான சுயாட்சிக்கான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இவற்றை வென்றெடுக்க கடந்தகால ஆதிக்க அரசியல் போட்டியைப் புறந்தள்ளி பன்மைத்துவ அடிப்படையிலான மக்கள் ஜனநாயக அரசியல் சூழ்நிலையை உருவாக்கி இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு, தமிழ், முஸ்லிம் கட்சிகளும், அமைப்புக்களும் பொது இணக்கப்பாட்டுடன் செயற்படுவதற்கான கலந்துரையாடல்களைச் செய்ய வேண்டுமென புதிய-ஜனநாயக கட்சி வேண்டுகோள் விடுக்கிறது.

போருக்குப் பிந்திய இக்கால கட்டத்தில் மூன்று லட்சம் தமிழ் மக்கள் முட்கம்பி வேலிகளுக்கு மத்தியில் தாங்க முடியாத வேதனைகளுடன் அவல வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். கடந்த முப்பது வருட போர் அனர்த்தங்களுடன் வாழ்ந்த தமிழ் மக்கள் இன்றைய சூழலில் மோசமான அரசியல் வெறுமையுடனும் அச்ச உணர்வுகளுடனும் இருந்து வருகின்றனர். இத்தகைய நிலையிலிருந்து மக்களை மீட்பதற்குரிய செயற்பாட்டை மக்கள் சார்பு கட்சிகளும் அமைப்புகளும் முன்னெடுக்க வேண்டும். அதற்கான கலந்துரையாடல்களும் பொது இணக்கப்பாடும் இடதுசாரிகள் ஜனநாயக முற்போக்கு சக்திகள் மத்தியில் ஏற்படுத்தப் பட வேண்டும் என்பதை புதிய - ஜனநாயக கட்சி வலியுறு த்துகின்றது.

இதனைத் தாமதமின்றி மேற்கொள்வதற்காக கீழ்வரும் பத்து அம்ச விடயங்களை புதிய-ஜனநாயக கட்சி முன்வைக்கின்றது. இவை நேர்மையும் மக்கள் சார்பும் கொண்ட கட்சிகள் அமைப்புகளால் கலந்துரையாடப்படவும் பொது இணக்கப்பாடுகாணப்படவும் கோரிக்கைகளாக வற்புறுத்தப்படவும் வேண்டும் என வேண்டுகின்றோம்.

1. மாகாணசபை முறையின் கீழ் அரசியமைப்பிற்கான 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்ற வாதப்பிரதிவாதங்களைத் தவிர்த்து இலங்கை வாழ் தமிழ், முஸ்லீம், மலையகத்தமிழ் தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஆகக்கூடிய சுயாட்சியை உறுதி செய்யத் தக்கவாறு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

2. இடம்பெயர்ந்து தடுப்பு முகாம்களிலும் ஏனைய முகாம்கள் இடங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் வெகுவிரைவில் அவர்களின் சொந்த இடங்களுக்குச் சென்று குடியேற அனுமதிக்கப்பட வேண்டும். அத்துடன் மீள்குடியேற்றம் புனர்வாழ்வு, புனரமைப்பு, கல்வி சுகாதார சீரமைப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய நட்டஈடு வழங்கப்பட வேண்டும். தொடர்ந்தும் பாதுகாப்பு வலயக் காரணங்களைச் சொல்லி மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் குடியேறுவதையோ விவசாயம் மீன்பிடி உற்பத்தியில் மற்றும் தொழில்களில் ஈடுபடுவதையோ தடுக்கக் கூடாது.

3. ஏ9 வீதி மக்களின் சுதந்திரமான போக்குவரத்திற்காகத் திறந்து விடப்பட வேண்டும். வடக்கிற்கான புகையிரதப் பாதை விரைவில் சீரமைக்கப்பட வேண்டும்.

4. போக்குவரத்தில் இருக்கும் பாஸ்முறை நீக்கப்பட்டு சுதந்திர நடமாட்டம் உறுதி செய்யப்பட வேண்டும். அதன் மூலம் விவசாய, மீன்பிடி மற்றும் கைத்தொழில் உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

5. அவசரகால சட்ட விதிகளையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நீக்க வேண்டும்.

6. அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.


7. வடக்கு, கிழக்கில் பூரணமான சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை உறுதி செய்யப்பட வேண்டும். அங்கு உயிர்வாழும் சுதந்திரம் உட் பட ஜனநாய மனித உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்படுவதுடன் கருத்து எழுத்துச் சுதந்திரம் நிலைநாட் டப்பட வேண்டும்

8. நாடெங்கும் தமிழ்மொழியும் அரச கரும மொழியாக நடைமுறையில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

9. வடக்கு கிழக்கில் திட்டமிட்ட பேரினவாத குடியேற்றங்கள் நிறுவப்பட எடுக்கும் முயற்சிகள் கைவிடப்பட வேண்டும்.

10. வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழ் மக்கள் பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு உட்படுத்தப்படாமல் இனரீதியான பாரபட்சங்களுக்குட்படாமல் அவர்களின் சுதந்திரமும் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும்.

புதிய- ஜனநாயக கட்சியின் மத்தியகுழு முன்வைத்துள்ள மேற்படி தீர்மானத்தை அதன் பொதுச் செயலாளர் சி.கா செந்திவேல் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ளார்.



## விடுதலையும் இல்லை விசாரணையும் இல்லை.

எமது புதிய ஜனநாயக கட்சியின் முக்கிய தோழர்களான ஆர். ஜெயசீலன் எஸ். சுகேசனன் ஆகிய இருவரையும் தொடர்ந்து விளக்க மறியலில் வைத்து வருகின்றது அரசாங்கம். அவர்கள் கைது செய்யப்பட்டு இருண்டு வருடங்களும் நான்கு மாதங்கள் ஆகின்றன. அவர்களோடு கைது செய்யப்பட்ட கட்சியின் மூன்று தோழர்கள் இரண்டு வருடங்களுக்குப் பின் நிரபராதிகள் எனக் கூறி ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் மேற்படி இரண்டு தோழர்களும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அரசியல் பழிவாங்கலின் வன்மம் இன்னும் அடங்கவில்லையா என்றே கேட்கின்றோம். எனவே விடுதலை அல்லது விசாரணை வேண்டும் என வற்புறுத்துகிறோம்.

## வவுனியாத் தோழர் பிரதீபனும் விளக்கமறியலில்



கடந்த பெப்பவரி மாதம் 7ம் திகதி வவுனியாவில் கதைப்பதற்கென வரச்சொல்லிச் சென்ற எமது புதிய ஜனநாயக கட்சித் தோழர் ந.பிரதீபனை தடுத்து வைத்து கொழும்புக்கு அனுப்பி வைத்த வவுனியாப் பொலிசார் கிரான் பாஸ் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தனர் மூன்று மாதங்களுக்குப் பின்பு யூன் 9ம் திகதி அவரை நீதிமன்றத்தில் நிறுத்தி சோடிக்கப்பட்ட குற்றச் சாட்டுகள் மூலம் விளக்க மறிய லுக்கு அனுப்பப்பட்டுள்ளார். உண்மையான குற்ற வாளிகளும் விளக்க மறியலில் இருக்க வேண்டி யவர்களும் வெளியே சுதந்திரமாக உள்ளனர். மக்களுக்காக உழைக்கும் வர்க்க அரசியலை முன்னெடுத்து சேவை செய்த தோழர்கள் சிறைக் கம்பிகளுக்குப்பின்னால். எனவே எமது தோழர்களை விடுதலை செய்யுங்கள் அல்லது விசாரணை செய்யுங்கள் எனக் என்ற நிலை தான் கேட்கின்றோம்.

## போத்தல ஜெயந்த தாக்குதலுக்கு கண்டனம்



இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளர் போத்தல ஜெயந்த கடந்த யூன் முதலாம் திகதி இனம் தெரியாத குண்டர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு கரும் காயங்களுக்கும் எலும்பு முறிவுகளுக்கும் உள்ளானார். இவ்வாறு ஊடகவியலாளர்கள் நாடு முழுவதும் தொடர்ந்து கொல்லப்பட்டு தாக்கப் பட்டு, கடத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். அதன் தொடர்ச்சி யாகவே அண்மையில் போத்தல தாக்கப்பட்டுள்ளர். இலங்கை எரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தில் ஒரு ஊழியராகக் கடமை புரியும் போத்தல ஜெயந்த உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளராகவும் பணிபுரிந்து வருகிறார். அவர் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டு தாக்கப்பட்டு கடத்தப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்து இயக்கம் நடாத்துவதில் முன்னின்று வந்த ஒரு நேர்மையான பத்திரிகையாளராவர். நாட்டில் கருத்துச் சுதந்திரத்திற்கும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் விடுக்கப்பட்டு வந்த ஆளும் வர்க்க அச்சுறுத்தல்கள் மிரட்டல் கொலைகள் கடத்தல்கள் தாக்குதல்களுக்கு எதிராக அனைத்து ஊடக அமைப்புகளும் ஊட கவியலாளர்களும் எதிர்ப்பு கண்டனங்கள் தெரிவித்து வீதியில் இறங்கி இயக்கங்கள் நடாத்தி வந்துள்ளனர். அத்தகையோரில் முக்கியமானவர்களைக் குறிவைத்தே இவ்வாறான தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வருகிறது. யுத்த வெற்றிக்குப் பின் இது இல்லாது போகும் எனச் சிலர் எதிர்பார்த்தனர். ஆனால் தொடர்ந்து தாக்குவோம் தேவைப்பட்டால் கொல்லுவோம் என்ற தோரணையிலேயே இனம் தெரியாதோர் தம் கைவரிசையைக் காட்டி வருகின்றனர். அதன் வழியிலேயே போத்தல ஜெயந்த மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். இதனைப் புதிய பூமி மிக வன்மையாகக் கண்டிக்கிறது. இதுவரையான எந்தவொரு ஊடகவியலாளர்கள் மீதான கொலை தாக்குதல் மிரட்டலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அத்தகையோர் நீதியின் முன் நிறுத்தப்பட்டதோ இல்லை. இந்நிலையில் ஊடகவியலாளர்கள் மக்களோடு இணைந்த இயக்கங்களை முன்னெடுத்துக் கொள்வதே சரியானதாகும்.

## போர்க் குற்ற விசாரணை வெறும் பூச்சாண்டியே!

வன்னியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது போர்க்குற்றங்கள் புரியப்பட்டதற்கான நம்பகமான சாட்சியங்கள் இருக்குமாயின் அவை குறித்து விசாரணை நடத்தப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

வழமை போல அவரின் கூற்றுக்கு வித்தியாசமான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. தமிழ் ஊடகங்கள் இதனை மிகவும் ஊதிப் பெருப்பித்து இலங்கை அரசை சர்வதேச சமூகம் ஒரு வழிபண்ணப்போவது போன்று செய்திகளை வெளியிடுகின்றன.

சிங்கள,ஆங்கில ஊடகங்கள் ஐ.நா. சபையின் செயலாளர் போர்க்குற்றம் பற்றிய சர்வதேச விசாரணையை கோரியுள்ளாரா என்பது தெளிவில்லை என்றும் போர்க்குற்றம் பற்றிய நம்பகமான சாட சியங்கள் இருப்பின் விசாரனை நடத்தப்படும் என்பதிலிருந்தே அவருக்கு நம்பகமான சாட்சியங்கள் இல்லை என்பது வெளிப்படுகிறது என்றும் எழுதி வருகின்றன.

போர்க்குற்ற விசாரணை என்ற இலங்கை அரசிற்கு எதிரான பூச்சாண்டி பற்றி தமிழ்மக்கள் பெரிதும் நம்பத்தேவை இல்லை. பேரவலத்திலிருந்து மீளவும் மீள்குடியேற்றத்தையும், பாதுகாப்பையும் அரசியல் தீர்வையும் வேண்டி நிற்கும் தமிழ் மக்கள் மேலும் மேலும் சர்வதேச சமூகத்தை நம்பி ஏமாறத் தேவை இல்லை.

பேரவலத்தை தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம் ஒரு போதும் முன்வருவதில்லை. பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு கான அரசுகளை நிர்ப்பந்திப்பதில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்வதை சர்வதேச சமூகத்தால் எந்தவொரு பிரச்சினையையும் அதன் உள்ளார்ந்த நிலையில் அணுகப்படுவதில்லை. அப்படி அங்கொரு நடுநிலை இல்லை. ஏறக்குறைய எல்லாநாடுகளும் மனித உரிமைகளை ஜனநாயக உரிமைகளை மீறிக் கொண்டே இருக்கின்றன. ஏதாவது ஒரு தீர்மானத்தில் போது அம்முடிவு அந்தந்த நாடுகளுக்கு எதிராகவும் தீர்மானங்களை எடுப்பதற்கு வழிவகுத்து விடுமோ என்ற பயம் இருந்து கொண்டே இருக்கும். அத்து டன் மேற்குலக கிழக்குலக அரசுகள் என்ற வித் தியாசமும் முக்கிய காரணியாக இருக்கும்.

ஏற்கனவே இலங்கையின் இராணுவ நட வடிக்கைகள் பற்றி ஐ.நா. பாதுகாப்பு சபையில் கலந்துரையாடக்கூட இடமளிக்கப்படவில்லை. உலக நாடுகளின் மத்தியில் இருக்கும் முரண்பாடுகள் ஆதிக்கப்போட்டிகள் என்பவற்றால் சர்வதேச சமூகம் என்பது ஒரு முகமாக இருக் கப் போவதில்லை. முதலாம் இரண்டாம் உலகயுத்த சூழ்நிலைகள் தற்போது இல்லை.

இலங்கை அரசிற்கும் ஏனைய அரசுகளுக்கும் முரண்பாடுகள் இருப்பின் அதனை பாவித்து அழுத்தங்களை தொடுப்பது என்பதற்கு அப்பால் சர்வதேச ஒழுங்கிலிருந்து எதனையும் எதிர்பார்க்க முடியாது. இன்றைய சர்வதேச ஒழுங்கில் அடக்கு முறை அரசுகளுக்கு ஏதோவகையில் பாதுகாப்பு கிடைக்கின்றன. இதனைவிட தென்னாசிய பிராந்தியத்தில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், வியட்னாம் போன்றவற்றின் ஆதிக்கப்போட்டியிலும் இலங்கை அரசிற்கு பாதுகாப்பு கிடைக்கலாம். இப்பிராந்திய சக்திகளுக்கு ஐரோப்பிய நாடுகளுக்குமிடையி லான முரண்பாட்டினாலும் பாதுகாப்பு கிடைக்கலாம்

எனவே சர்வதேசம் பற்றிய புளுகுகளுக்கு இடமளிப்பது மேலும் பாரிய தவறுகளுக்கே வழிவகுக்கும். சர்வதேசம் என்ற மாயை தில்லுமுல்லுகள் பம்மாத்துகளை நம்பி ஏமாறுவது எம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும். எனவே இந்தியா, சர்வதேச சமூகம், ஐ.நா. போன்றவற்றின் மீது நம்பிக்கை வைக்குமாறு தமிழ் ஊடகங்கள் மயக்கச் செய்திகளை முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுவது மீண்டும் தமிழ் மக்களை வீண் நம்பிக்கைகளுக்குள் வீழ்த்துவதாகும். அத்துடன் சரியான அரசியல் சிந்தனைகளில் கவனம் செலுத்துவதைத் திசை திருப்பி உலக ஆதிக்க சக்திகள் மீது அடிமை விசுவாசத்தை வைக்குமாறு நிர்ப்பந்திப்பதுமாகும்.

1ம் பக்க தொடர்ச்சி

### இந்தியா இரட்டை வேடம்

இந்துசமுத்திர பிராந்திய மேலாதிக்கப் போட்டியில் பாகிஸ்தான் சீன பூச்சாண்டிகளை சாட்டி இந்தியமேலாதிக்கத்தை தம் பக்க வைத்திருக்கலாம் என்று எண்ணிய தமிழ் தேசிய வாதிகள் அனைத்து தமிழ்மக்களின் அபிலாசைகளையும் போட்டுடைத்து விட்டார்கள். இன்று கூட தமது தவறான நிலைப்பாட்டையும் கண்ணோட்டத்தையும் மாற்றிக் கொள்ள முடியாத பரிதாப நிலையில் இருக்கிறார்கள்.

இலங்கையை இன்னொரு இறைமையுள்ள நாடாக அங்கீகரிக்காத ஜவகர்லால் நேருவின் உள்ளார்ந்த நிலைப்பாடே இன்றைய இந்திய மேலாதிக்கத்தின் எண்ணக்கருவாகவும் நிலைப்பாடாகவும் இருக்கிறது. இந்நிலையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி இந்தியா யோசிக்கும் என்பது எந்த அடிப்படையில் சரியாகும்.

இலங்கை அரசாங்கம் நடத்திய யுத்தம் ஒட்டுமொத்தமாக இந்திய மேலாதிக்கத்திற்கான யுத்தமேயாகும் அது இந்தியாவின் யுத்தம் என இலங்கை ஆட்சியாளர்களே வெளிப்படையாக கூறியுள்ளனர். அந்தக் களிப்பில் உள்ள இந்தியா தமிழ் மக்களுக்காக ஏதனையும் பெற்றுத்தரப்போவது இல்லை.

இன்றைய சூழலில் இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஒருபுறமாகவும் அமெரிக்க ஐரோப்பிய யப்பானிய ஏகாதிபத்திய சக்திகள் மறுபுறமாகவும் இலங்கை தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையின் எதிர்ப்பக்கத்தில் இருப்பதை சரியாக மதிப்பிட்டு அடுத்த கட்டம் பற்றி சிந்திப்பது தேவையானதாகும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு பிராந்திய மேலாதிக்க எதிர்ப்பு என்பனவற்றின் அடிப்படையில் சிங்கள மக்களையும் உள்ளடக்கிய பரந்த ஐக்கி அனுகுமுறையுடன் கூடிய வர்க்கப்போராட்ட அடிப்படையிலான வெகுஜன போராட்ட அரசியல் மார்க்கமே சுயநிர்ணயத்தையும் சுயாட்சியையும் வென்றெடுப்பதற்கான சரியானதும் வலுவான துமான பாதையாகும்.

## நாலு நடக்கும் உலகிலே

(நற்குணன்)

### யூ.என்.பி. தமிழர்களின் எதிரி

யூ.என்.பியும் தமிழர்கட்கு விரோதமானதே என்று மே மாதம் முதற் கிழமையில் மனோ கணேசன் கண்டு பிடித்து எல்லாருக்கும் தெரியப்படுத்தியிருக்கிறார். அவருக்கு இந்த விடயம் எப்படி மத்திய, மேல்மாகாணங்கட்கான மாகாண சபைத் தேர்தல்கள் எல்லாம் முடிந்த பிறகு தான் தெரிய வந்தது?

இந்த விடயம் எப்போதிருந்தோ, 1977, 1979, 1981, 1983 வன்முறைகளின் போதும் தொடர்ந்து நடத்தப்பட்ட போரின் போதும் தெரியாத விடயமா? யூ.என்.பி. சின்னத்தில் தேர்தலில் எத்தனையோ முறை அவரது கட்சி தனது பலவேறு பேர்களிற் போட்டி யிட்டதே, அப்போதெல்லாம் தெரியாதா? இப்போது என்ன புதிய ஞானம்? அடுத்து ஒரு தேர்தல் வந்தால் யாரோடு சேர்ந்து நிற்பார்? அப்போது இந்த ஞானத்துக்கு என்ன நடக்கிறது என்று பார்ப்போமே!

### எப்படி மனம் வரும்?

தெளிவத்தை ஜோசப்பின் நேர்காணல் "ஞானம்;" சஞ்சிகையில் தொடராக வெளி வருகிறது. தனது இளமைக் காலம் பற்றி எழுதிக் கொண்டு போகிறவர் சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேராசிரியர் கைலாசபதி மீது சீறியிருக்கிறார். குற்றச்சாட்டு என்ன? அவருடைய சிறுகதைத் தொகுதி வெளியீட்டில் கலந்து கொண்டு பேசிய கைலாசபதி "தனது எழுத்துக்களையே சேகரித்து வைக்காத படைப்பாளி" என்று தன்னைச் சொல்லி விட்டாராம். கைலாசபதி சொன்னது உண்மையைத் தானாம். ஆனால் அது பலபேருக்கும் நடக்கிற விடயம் தானே என்பது தான் நம் வர்க்கச்சார்பற்ற எழுத்தாளரின் மனத் தாங்கல். ஆவணப்படுத்தலுக்கான அவசியத்தை முன்னிறுத்தி கைலாசபதி சொன்னதன் முக்கியத்துவம் இந்த மனிதருக்கு விளங்காவிட்டால் யாரும் என்ன செய்வது?

மலையகத் தொழிலாளர்களிடமிருந்து தன்னை விலக்கிக் காட்டுவதில் மிகவும் கவனமாக உள்ள எங்கள் மலையகப் படைப்பாளியார் தன்னை உயர்ந்த சாதிக்காரர் என்று சொல்லுவதிலும் மிகவும் கவனமாக இருக்கிறார். தனது நெருங்கிய உறவினர் ஒருவரது சாதிப்பேர் படையாச்சி என்பதை மிக நன்றாகவே வலியுறுத்தியிருக்கிறார். இப்படிப்பட்ட ஒருவருக்கு எப்படி பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டிலிருந்து எழுத மனம் வரும்? கைலாசபதி மீது வீண் பழி சுமத்தாமலிருக்க எப்படி இயலுமாயிருக்கும்?

### கல்யாண சமையல் சாதம்!

கைலாசபதி தன் வீட்டில் ஒருவரை அதிதியாக அழைப்பதற்குச் சாதி வேறுபாடு பாராட்டினார் என்ற அவதூறை ஒன்றுக்குப் பலமுறை வெவ்வேறு விஷமிகள் பரப் பியுள்ளனர். அதில் ஒரு மாத ஏட்டின் ஆசிரியரும் உரிமையாளருமான ஒரு பார்ப்பன ரும் உள்ளடங்குவார். சில இடதுசாரிகளின் அற்பமான பிறழ்வுகளையும் இரட்டை வேடம் என்று தாக்குவதில் அவருக்கு மிகுந்த மன நிறைவுண்டு. அண்மையில் இந் தப் புனிதரின் உளத் தூய்மையைப் பரிசோதிக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அவரது மகனின் திருமணத்துக்கு அவருடைய "இலக்கிய உலக" நண்பர்களையுங் கூப்பிட்டிருந்தார். பின்பு விருந்து பரிமாறப்பட்டபோது இத்தனை நாள் பொத்தி மறைத்து வைத்திருந்த பார்ப்பனியச் சாதியச் சிந்தனை தன்னை வெளிக்காட்டி விட்டது. பார்ப்பனர்களுக்கு ஒரு பந்தியும் பார்ப்பனரல்லாதவர்கட்கு இன்னொன்றும் வைக்கப்பட்டன. இது இந்துத்துவ ஞானம் மிகுந்த ஒரு நடுநிலையான சிந்தனை வழிப்பட்ட நடத்தையாகத் தானிருக்கும்.

வடக்கில் கம்யூனிஸ்ற் கட்சியைத் தொடக்கி வைத்த வர்களில் ஒருவரான ராமசாமிஐயர் எங்கே! சாதித் திமிரை விடமுடியாது தத்தளிக்கிற இந்த விதமான "ஞானம்" மிக்க பொய்முகங்கள் எங்கே!

### மறக்கப்பட்டோரும் மறக்கப்படுவோரும்

விடுதலைப் புலிகளின் அமைப்பின் இராணுவ ரீதியான முழுமையான முறியடிப்புப் பற்றியும் அதன் தலைவரின் சாவும் தென்னிலங்கையில் மட்டுமன்றி வடக்குக் கிழக்கிலும் ஆரவாரமாகக் கொண்டாடப்பட்டன. இந்த முறியடிப்புக்கு விலையாக எத்தனை தமிழ்ப் போராளிகளும் சிங்களப் படையினரும் வீணாக இறந்தனர் என்பதை விட எத்தனை அப்பாவித் தமிழ் மக்கள் கொன்றழிக்கப்பட்டனர் என்பதைப் பற்றி யாருமே நினைத்துப் பார்க்கவில்லை. எத்தனை இலட்சம் மக்கள் தங்களது வாழ்வாதாரங்களை இழந்து நிர்க்கதியாயிருக்கின்றனர் என்பதை யாரும் நினைத்துப் பார்க்கவில்லை. மனித உரிமையின் பேரால் குறுக்கிடுவதாகப் பேசிய சர்வதேச சமூகம் குறுக்கிடும் என்ற எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாமை போக இத்தனை இழப்புக்களையும் நாட்டின் பொருளாதத்தின் பேரிழப்பையும் பாவித்து ஏகாதிபத்தியம் தனது உலக மயமாதல் திட்டத்தை இந்த நாட்டில் மேலும் தீவிரப்படுத்தி மக்கள் அனைவரையும் துன்புறுத்தும் என்பது உறுதி.

இப்போதைய ஆரவாரங்கள் அடங்கிய பிறகு யதார்த்தத்துக்கு முகங் கொடுக்கிற போது இப்போது ஆரவரிப்போரில் ஒரு சிலரை வி்ட மற்றவர்கள் ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையுமே எதிர் நோக்குவர். பலரது அதிகாரக் கனவுக் கோட்டைகள் காற்றுடன் கலைந்து விடும்.

### றோவின் கைவண்ணம்

முத்துக்குமாரின் நண்பர்களின் வெளியீடு என்ற பேரில் வண்ண வண்ணப் படங்களுடன் இலங்கைத் தமிழரின் இன்றைய அவலம் பற்றிய ஒரு நூல் தமிழகத்திலிருந்து வெளியாகியுள்ளது. அந்த நூலின் கணனி வடிவமும் மின் அஞ்சல் மூலம் பரப்பப்பட்டுள்ளது. அதன் சாரம்சம் ஏதென்றால் இலங்கையின் சகல போர் முயற்சிகளும் சீனாவின் தூண்டுதலாலேயே நிகழ்ந்தன என்பதும் இந்தியா செய்த தவறுகளுக்கு கூடச் சீனாவே காரணம் என்றும் இலங்கைத் தமிழர் இந்தியாவை நம்ப வேண்டும் என்பதுமே. அந்த நூலை வாசிப்போரிற் பலருக்கு அத்தனையும் இந்தியாவின் குழிபறிப்பு நிறுவனமான றோவின் கைவேலை என்பது உடனேயே விளங்கவில்லை. எனினும் இப்போது பலருக்கு மெல்ல மெல்ல உண்மை விளங்குகிறது. என்றாலும் சிலரது மனச்சவர்களை உண்மை ஊடுருவிச் செல்வதில்லை.

# வடக்கின் தேர்தல்களால் இயல்புவாழ்வு திரும்புமா?

மகிந்த சிந்தனை அரசாங்கம் யுத்த வெற்றி விழாக்களை நடாத்திக் கொண்ட நிலையில் வடமாகாணத்தில் இரண்டு தேர்தல்களை நடாத்த திகதிகளை அறிவித்துள்ளது. ஒன்று யாழ்ப்பாண மாநகரசபை. மற்றையது வவுனியா நகரசபை. இவை இரண்டுக்குமான அவசரத் தேர்தல் ஏன் என்பது தான் மக்களுக்குப் புரியாத புதிராக உள்ளது. வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இன்னும் இயல்பு வாழ்க்கை என்பது திரும்பாத நிலையே காணப்படுகிறது. அதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தனி ஒரு குடும்பம் தானும் மீளக் குடியமரவில்லை. வவுனியா இன்று இடம் பெயர்ந்து அவலங்களின் கீழ் வாழும் மக்களால் நிரம்பியுள்ளது. அவ்வாறே யாழ்ப்பாணத்திலும் முற்று முழுதான இயல்பு வாழ்வு திரும்பவில்லை. யாழ் மாநகரசபை எல்லைக்குள் வாழும் மக்கள் முற்று முழுதான இயல்பு வாழ்வை அனுபவிக்க முடிகிறதா? மேலும் 1990ம் ஆண்டு பலவந்தமாக புலிகள் இயக்கத்தால் வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் ஒரு லட்சத்திற்கு மேற்பட்டோர் வடபுலத்திற்கு திரும்பவில்லை. அவர்கள் மாநகரசபை எல்லைக்குள் வாழ்ந்த முஸ்லீம் வட்டாரம் பொம்மைவெளி ஆகிய பகுதிகள் முற்றிலும் அழிந்த நிலையிலேயே இருந்து வருகிறது. மேலும் உயர் பாதுகாப்பு வலயம் எனப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் அங்கு செல்ல முடியவில்லை.

இந் நிலையில் வடக்கில் தேர்தல் என்பது வெறும் போலித்தனமான தாகும். யாவற்றுக்கும் மேலாக அங்கு சிவில் நிர்வாகம் வெறும் பெயரளவிலேயே இருந்து வருகிறது. ஆதனால் ஜனநாயகம் என்பது எந்தளவுக்கு அர்த்தமுடையதாக உள்ளது என்பது கேள்விக் குரியதாகும். தேர்தல் வைத்து விட்டால் அது ஜனநாயகமாகி விடமுடியுமா? கிழக்கிலே உள்ளூராட்சி சபைகளுக்கும் மாகாணசபைகளுக்கும் தேர்தல் ந டாத்தப்பட்டது. ஆனால் அங்கு ஜனநாயகமு ம் இயல்புவாழ்வும் எநதளவிற்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது. அங்கு கொலைகள் ஆட்கடத்தல்கள் மிரட்டல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அரசாங்கத் தரப்பும் அதன் செல்வாக்குப் பெற்றவர்களும் ஜனநாயகப் பண்புகளைப் பின்பற்றி நிற்கிறார்களா என மக்கள் கேட்கின்றனர்.

இதே நிலையை வடக்கில் தோற்றுவிக்கும் உள் நோக்கங்களுடனேயே வடக்கில் தேர்தல் நடாத்தப்படுகிறதா என்று கேட்பதில் தவறு இருக்க முடியாது. தமிழ் மக்கள் மத்தியில் காலத்திற்குக் காலம் தமிழ்த் தேசியவாதத்தின் பெயரால் ஒவ்வொரு கட்சியும் இயக்கங்களும் ஆதிக்க அரசியல் நடாத்த முற்படுவதே வரலாறாக இருந்து வந்துள்ளது. ஒரு கட்சி அல்லது இயக்கம் என்பதற்குப் பதில் வேறொரு கட்சி அல்லது இயக்கம் என்பதாக தமிழ்த் தேசியவாத அனுமான் வால் நீண்டு கொண்டே போகிறது. இது தவிர கொள்கை கோட்பாடு நடைமுறையில் மக்கள் சார்பும் சேவையும் மக்களை எசமானர்களாகக் கொள்ளும் போக்கும் புறந்தள்ளப்படுவது தொடர்கிறது. இத் தேர்தல்களும் அதற்கான வாய்ப்பு வசதிகளையே ஏற்படுத்தப்போகிறது.

நியாயமான அரசியல் தீர்வு, மக்களின் மீளக் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மூலம் இயல்பு வாழ்வும் ஜனநாயகச் சூழலும் ஏற்படும் சூழலிலேயே வடக்கின் தேர்தல்கள் எதுவும் அர்த்தம் தருவதாக அமைய முடியும். அல்லாது விடின் இன்றைய இடைவெளியில் யார் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வது என்ற போட்டியே இத் தேர்தல் மூலமாக இடம்பெறக் கூடியதாகும்.

சாமி

# வடபுலத்து முஸ்லீம்களின் மீளக் குடியமர்வு எப்போது?

1990ம் ஆண்டு அக்ரோபர் மாதம் மாரி காலம் ஆரம்பித்திருந்த வேளையில் திடீரென ஒலிபெருக்கி அறிவித்தல் மூலம் முஸ்லீம்களாகிய நாம் எமது வீடுகளில் இருந்து வெளியேறும்படி விடுதலைப் புலிகள் இயக்கத்தால் உத்தரவிடப்பட்டோம். அதுவும் சில மணி நேரத்திற்குள் ஒரு சிறு உடுப்புப் பொதியும், ஐயாயிரத்திற்கு உட்பட்ட பணம் மட்டுமே எடுத்துச் செல்ல முடியும் என்றது அவ் உத்தரவு. ஹிட்லர் கால உத்தரவு போன்று மீற முடியாத அவ் உத்தரவால் இடி விழுந்து கொண்டது முஸ்லீம் மக்கள் மீது. வட புலத்தின் பல்வேறு பகுதிகளில் பாரம்பரியமாகத் தாய் மண்ணின் மக்களாக வாழ்ந்த நாம் விரட்டியடிக்கப்பட்டோம். சகோதர தமிழ் மக்களிடமிருந்து பிரிந்து கண்ணீரும் கம்பலையுமாகப் பிரித்து அனுப்பப்பட்டோம். தமிழ்ச் சகோதரர்கள் அச்சத்தால் மௌனியாகினர். வயது பால் வேறுபாடு இன்றி நோய் உள்ளவர்களும் கர்ப்பிணித் தாய்மார்களும் பச்சிளம் பாலகர்களுமாகிய நாம் பட்ட அவலமும் வேதனைக் குரல்களும் இன்னும் நம்மிடையே ஒலித்த வண்ணமே உள்ளன. அந்த அவலங்களின் வேதனைகளை இன்று தமிழ் மக்களும் அனுபவிக்க வைத்துள்ளவர்களும் அதே விடுதலைப் புலிகளேயாவர். அன்று எங்களுக்கு இன்று தமிழ் மக்களுக்கு என்ற அவல நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது வேதனைக்குரி யதேயாகும்.

அன்று வெளியேற்றப்பட்ட நாம் கடந்த 19 வருடங்களாகி புத்தளம் வவுனியா அனுராதபுரம் கொழும்பு போன்ற பகுதிகளில் இடம்பெயர்ந்த அகதி வாழ்வு வாழ்ந்து வருகிறோம். ஆகக் கூடுதலான எம் மக்கள் புத்தளம் மாவட்டத்தில் பல்வேறு இன்னல்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். நாம் எமது தாயகப் பூமியான வடக்கில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பகுதிகளில் சொந்த இருப்பிடங்களில் வாழவே விரும்புகின்றோம்.

தற்போது யாழ்ப்பாண மாநகரசபைக்கு தேர்தல் நடைபெற இருக்கிறது. நாம் மாநகரசபைக்கு உட்பட்ட முஸ்லீம் வட்டாரத்திலும் அதனையொட்டிய பொம்மை வெளிப் பகுதிகளிலும் காலாதி காலமாக வாழ்ந்து வந்தவர்கள். யாழ் மாநகர சபையில் எமது பிரதிநிதித்துவம் தொடர்ந்து இருந்து வந்தது. அதன் ஊடாகப் பிரதி மேயர் பதவி கூட நம்மவர்களால் வகிக்கப்பட்டது. தமிழ்ப் பிரதிநிதிகளுடன் சகோதர உறவுடன் நாம் இருந்து வந்தோம். ஆனால் இன்று நாம் மீளக் குடியமர முடியாத சூழலிலேயே இருந்து வருகி றோம். எமது வீடுகளும் இருப்பிடங்களும் அழிவுற்ற நிலையி லேயே காணப்படுகின்றன. எமது மாநகரசபைப் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு பெறுவது என்பது எமக்கு முன்னால் உள்ள பிரச்சி னையாகும். வெறுமனே வாக்களித்துக் கொண்டால் போதாது. எமது சொந்த மண்ணில் வாழ்ந்து கொண்டே எமது வாக்குரிமையைப் பயன் படுத்த வேண்டும். எனவே வாக்குகளுக்காக அல்ல எமது நிரந்தர வாழ்வுக்காக எம்மை மீளக் குடியமர வழிசெய்ய வேண்டும்.

ஆதலால் எமக்குரிய இழப்பீடுகளுடனும் புனர்வாழ்வு செயற்பாடுகளுடனும் நாம் எமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவதையே நாம் வற்புறுத்தி நிற்கின்றோம். அதுவே எமது இயல்பு வாழ்வுக்கான உத்தரவாதமாக அமைய முடியும். அது எப்போது என்பதையே அரசாங்கத்திடமும் மீள் குடியேற்ற அமைச்சிடமும் வட புலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம்களாகிய நாம் கேட்கிறோம். அதற்குரிய சாதகமானதும் அவசியமானதுமான பதிலை எதிர்பார்க்கின்றோம்.

புத்தளம் எஸ்.ஆர்.இஸ்மாயில்

# ஹைபொரஸ்ட் பொது மலசலகூடம் அமைத்து தரப்படுமா? பிரதேச மக்களின் கேள்வி

இராகலை நகரில் இருந்து சுமார் 13 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள ஹைபொரஸ்ட் நகரம் தினசரி ஏறத்தாழ ஆயிரத்திற்கும் அதிக மானவர்கள் தமது தேவைகளுக்காக வந்து செல்லும் இடமாக விளங்கி வருகிறது. 20ற்கு மேற்பட்ட தோட்டங்களை சேர்ந்த மக்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்யும் இடமாக இந்நகரம் மிக நீண்ட காலமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. எனினும் இந் நகரில் இதுவரை காலமும் ஒரு பொது மலசல கூடம் அமைக்கப் படாமை பெரும் குறையாக இருந்து வருகிறது. இந்தப் பகுதி வாழ் மக்கள் இராகலை, நுவரெலியா போன்ற இடங்களுக்கு இங்கிருந்தே பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் சில வேளைகளில் பல மணிநேரம் பஸ்சிற்காக காத்திருக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஏனவே இங்கு ஒரு பொதுமலசலகூடம் இல்லாமை இங்கு வந்து போகும் மக்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. வலப்பனை பிரதேச சபையின் உப நகரங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள போதிலும் இந்நகருக்கான அடிப்படைத் தேவைகள் எதுவும் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதே வேளை வலப்பனை பிரதேச சபை உறுப்பினர் ச.பன்னீர்செல்வம் இவ்விடயம் தொடர்பில் குறிப்பிடுகையில் தான் இந்நகரத்திற்கு பொது மலசலகூடம் அமையவேண்டியதன் அவசியம் பற்றி பல தடவைகள் சபையில் பிரேரணைகளை முன் வைத்த போதும் அதற்கான நடடிவடிக்கைகளை பிரதேச சபை நிர்வாகம் மேற்கொள்ளவில்லை. பிரதேச சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி மிகக் குறைவானது என்பதால் இவ்வாறான பெரிய வேலைத்திட்டங்களை தன்னால் மேற்கொள்ள முடியாதுள்ளதாக கவலைத் தெரிவித்தார். அதேவேளை இது ஒரு உப நகரம் என்பதால் இதற்குரிய அபிவிருத்தி வேலைகளை பிரதேச சபையின் பொது நிதியில் இருந்தே மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே பிரதேச சபை தலைவரே இதற்கான நிதியை ஒதுக்க வேண் டும் எனவும் மேலும் குறிப்பிட்டார்.

எனவே வலப்பனை பிரதேசத்தில் பெருந்தொகையான வாக்காளர்களை கொண்டுள்ளதும் தோட்டத் தொழிலாளர்கள் பெருமளவில் வந்து போகும் இடமாகவும் விளங்கும் ஹைபொரஸ்ட் நகருக்கு மிக விரைவில் பொது மலசல கூடம் ஒன்றை அமைத்து தர பிரதேச சபை நிர்வாகம் ஆவண செய்ய வேண்டும் என இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். அதே வேளை தமிழ் உறுப்பினர்களின் வெற்றியில் பெரும் பங்களிப்பு செய்யும் தங்களுக்கு இவ்வடிப்படை வசதியை ஏற்படுத்தி கொடுப்பதற்கான அழுத்தத்தை தமிழ் உறுப்பினர்கள் சபையில் கொடுக்க வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இராகலை நிருபர்

# வடக்கு கிழக்கின் இன்றைய நிலை

1983ல் யாழ்ப்பாணத்தில சிறிய நடுத்தர கைத்தொழில் நிலையங்கள் 247 இயங்கின. இன்று 45 மட்டுமே மீதமாயுள்ளது. ஒரு சந்தர்ப்பத்தில் நாளாந்த மீன்பிடி 3000 மெற்றிக் தொன்களாயிருந்தது. இன்று 200 மெ.தொன் மீன் மட்டுமே பிடிக்க முடிகிறது. தற்சமயம் விவசாய நிலங்களில் 30 வீத நிலமே பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட நிலையில் விவசாயத்துறையில் பாதிப்பை மதிப்பிடலாம். 2003, 2004 இல் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரக் கணக்கின்படி வட மாகாணத்தில் 3.1 வீதமான மக்களும் கிழக்கு மாகாணத்தில் 17.4 வீதமான மக்களும் குமாய் மூலமாக குடிநீரைப் பெற்றனர். அதே சமயம் தேசிய சராசரி 30.8 வீதமாயுள்ளது. இது பெருமைப்படக் கூடியதல்லவென்ற போதும் வடக்குகிழக்கில் வாழும் மக்களின் வாழ்க்கை ஏனைய பகுதிகளில் வாழும் மக்களை விட வசதிக்குறைவை எதிர்கொள்கிறது.

அடுத்து மலசலக்கூட வசதிக்குறைவு வடமாகாணத்தில் 14.4 வீதமாகவும் கிழக்கில் திகைப்பூட்டும் வகையில் 29.2 வீதமாயிருந்தது. அதே சமயம் தேசிய மட்டத்தில் கௌரவமான 5.6 வீதமாயிருந்தது. வடக்கில் ஐந்து வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளில் 46 வீதமான குழந்தைகள் எடைகுறைவாகக் காணப்படுகின்றனர். தேசிய மட்டத்தில் இது 29 வீதமாயுள்ளது கவனிக்கத் தக்கது. பிள்ளைகள் பிறக்கும் போதே எடைகுறைவாக வடகிழக்கில் 26 வீத சிசுக்கள் காணப்படுகின்றன. தேசிய மட்டத்தில் இது 18 வீதமாயுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு 33 மெகாவாட் மின்சாரம் தேவை என்ற போதும் 24 மெகாவாட் மின்சாரமே வழங்கப்பட்டு குடாநாட்டில் ஒன்றரை மணி நேர மின்வெட்டு அமுல் நடத்தப்படுகிறது. ஒரு சமாதானச் சூழலுக்கு முதலாவது தடைக்கல்லாக இது விளங்குகிறது. யாழ்குடாநாட்டில் தற்சமயம் 3 கோடி 50 லட்சம் ரூபாவால் வியாபாரம் நடக்கிறது. யாழ் குடாநாட்டிற்கு சுதந்திரமாக போக்குவரத்து அனுமதிக்கப்பட்டால் இந்தத் தொகையை ஆறு கோடி ரூபாயளவில் அதிகரிக்குமென அண்மையில் வியாபார சம்மேளனக் கூட்டமொன்றில் ஒரு நிறுவனத்தின் பேச்சாளர் குறிப்பிட்டிருந்தார்.

# வடபுலத்தில் என்று தணியும் இந்த சாதியின் மோகம்

இன்று நிவாரணக் கிராமங்கள் என்ற பெயரில் முட்கம்பி வேலிகளுக்கு மத்தியில் மூன்று லட்சம் தமிழ் மக்கள் பட்டுவரும் அவலம் பேரவலமாகும். அதேவேளை வடபுலத்தில் தமது சாதிய நடைமுறைகளை விடாப்பிடியாக நிலை நிறுத்துவதில் உயர்சாதியினர் என்போர் முன்னின்று வருகின்றனர். அதற்கு ஒரு சமகால உதாரணம் புதிய பூமிக்குக் கிடைத்த செய்தியாகும். வடமராட்சியின் அல்வாய் வடமேற்கு திக்கம் பகுதியில் உள்ளது துளசிப் பிள்ளையார் கோவில். இக்கோவிலின் உரிமை பற்றிய சர்ச்சை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. உயர்சாதியினர் என்றழைக்கப்படும் வேளாளர் தாழ்ந்த சாதியினர் என்று கூறப்படும் வண்ணார் ஆகிய இரு சாதிய சமூகப் பிரிவினர் மத்தியிலேயே இக்கோயிலின் உரிமைத் தகராறு இருந்து வருகிறது. இது இப்போது நீதிமன்ற விவகாரமாகவும் உள்ளது. இக்கோவிலில் வண்ணார் என்போருக்கு 9ம் 10ம் திருவிழா இருந்து வருவதாகவும் அறிய முடிகிறது. அவர்கள் தாமே உண்மையான உரிமையாளர் எனவும் வாதிட்டு வருகின்றனர்.

அது அவ்வாறு இருக்க கோவில் திருவிழாவின் போது தாழ்ந்த சாதியினர் எனக் கூறி சுவாமி காவுவதை அந்த உயர்சாதியினர் தடுத்தனர். அவ்வாறே கோவில் கிணற்றில் தண்ணீர் அள்ளுவதும் தடுக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட தகராறும் முறுகல் நிலையும் போலீஸ் நிலையம் வரை சென்றது. தண்ணீர் அள்ளுவதைத் தடுப்பது சட்டப்படி தவறு எனப் போலீஸ் தரப்பில் கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து கோவில் நிர்வாகம் எனப்பட்டவர்களும் பிரமாணியப் பூசகரும் சேர்ந்து கிணற்றைச் சுற்றி கம்பி வேலி போட்டு அடைத்துவிட்டனராம்.

மேலும் கோவில் சுவாமி அபிஷேகத்திற்கு பால் கொண்டு சென்று கொடுக்கப்பட்டபோது அந்தப் பிராமணப் பூசகர் வாங்க மறுத்துவிட்டராம். ஆனால் பால் கறக்கும் பசு மாட்டைக் காட்டுமாறு கேட்டு தானே சென்று தனது பாத்திரத்தில் பால் கறந்து வந்த சம்பவமும் நடைபெற்றது. இவை மட்டுமல்ல ஒருமுறை இக்கோவில் அன்னதானம் நடைபெற்றபோது அதில் தாழ்த்தப்பட்ட மக்கள் சிலர் கலந்திருப்பதை அவதானித்த இந்த சாதிமான்கள் அடுத்த வரிசை அன்னதானத்தை கோவிலின் வெளிப்புறத்தில் வைத்து வழங்கி புண்ணிய திருப்தி பெற்றனர் என்றும் அறிய முடிகிறது.

இருபத்தியோராம் நூற்றாண்டின் முதல் பத்தாவது ஆண்டில் தமிழரிடையே இன்னமும் சாதிய மோகம் வேகமுடையதாகவே இருந்து வருகிறது என்பதற்கு இது ஒரு சோற்றுப்பதம் எனலாம். இப்படியாக வெளியில் வராத சாதிய தீண்டாமை நடைமுறைகள் வடபுலத்தின் பல இடங்களிலும் இருந்து வருகின்றமை நோக்குதற்குரியதாகும். இந்த இழி நிலையின் மத்தியில் தான் "ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆழ நினைப்பதில் என்ன குறை" என்ற மோட்டுக்கதை இங்கும் புலம் பெயர்ந்த தமிழரிடையேயும் ஓங்கி ஒலிக்கப்பட்டு இன்று சுருதி குறைந்து முணுமுணுக்கப்படுகிறது. தமிழ் மேட்டுக்குடி பழைமைவாத உயர்வர்க்கக் கனவான்களே! கனவாட்டிகளே! மனிதப் பேரவலத்தின் மத்தியில் இந்த சாதிய அவலம் நீடிப்பதை பற்றி என்ன கூறுவீர்கள்.

அவர்கள் என்ன கருதினாலும் நமக்கொன்றும் இல்லை. வடபுலத்து தமிழர்கள் மத்தியில் சாதியத்தையும் தீண்டாமையும் எதிர்த்த வரலாற்று முக்கியத்துவம் பெற்ற அன்றைய போராட்டங்கள் போன்று இன்றும் சரியான அர்த்தத்தில் முன்னெடுக்கப்படுவதையே இன்றைய சூழல் நிர்ப்பந்திக்கிறது. மக்கள் துணிவுடன் முன்செல்வதே தேவையானதாகும்.


வடபுல நிருபர்

# தோழர் சிவத்திற்கு அஞ்சலி



தோழர் சிவம் நெல்லியடி சிவம் என வடமராட்சியிலும் வடபுலத்திலும் பின் புலம் பெயர்ந்த சூழலிலும் நன்கு அறியப்பட்டவர். மாச்சிசம் லெனினிசத்திற்கு ஊடாகவும் கம்யூனிஸ்ட் கட்சி மூலமும் அவரது அடையாளம் வெளிச்சம் பெற்றது. ஒரு சமூக அக்கறை மிக்க மாணவனாகக் காணப்பட்ட சிவம் விரைவில் மாக்சிசத்தால் ஈர்க்கப்பட்டு அறுபதுகளின் பிற் கூறில் கட்சி உறுப்பினராகிக் கொண்டார். வடபுலத்தில் மாக்சிச லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்த சாதிய வர்க்கப் போராட்டங்களில் முன் நின்ற ஒரு நேர்மையான போராளியாகிக் கொண்டவர். மாக்சிசப் படிப்பும் விவாதங்களின் ஊடாக நடை முறை உண்மைகளைக் கண்டறியும் ஆற்றலும் கொண்ட தோழர் சிவம் அன்றாட அரசியல் வேலைகளிலும் போராட்ட சந்தர்ப்பங்களிலும் தனது பங்களிப்பை வழங்கி வந்தவர். புலம் பெயர்ந்த சூழலிலும் தன்னாலான செயற்பாட்டை பீடித்த நோயின் மத்தியிலும் முன்னெடுத்து வந்தவர். மாக்சிச லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை சமூகம் மாற்றம், அதற்கான செயற்பாடு என்பனவற்றில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டு இறுதி வரை செயற்பட்டு வந்த தோழர் சிவம் (கணேசமூர்த்தி சிவகுமாரன்) கடந்த ஏப்பிரல் 27 ம் திகதி கனடாவில் மாரடைப்பினால் சாவடைந்தார். அவரது இழப்பின் சோகத்தின் ஊடே புதிய பூமி தனது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது. அவரது குடும்பத்தினருக்கும் புலம் பெயர்ந்த தோழர்கள் நண்பர்களுக்கும் அனுதாபங்களையும் கூறுகின்றது.

# தோழர் ஞானத்திற்கு அஞ்சலி



காங்கேசன்துறையைச் சேர்ந்த தோழர் எஸ். ஞானம் கடந்த 02-06-2009 அன்று லண்டனில் சாவடைந்தார் என்ற துயரச் செய்தியைப் புதிய பூமி பெற்றுள்ளது. தோழர் ஞானம் இளவயது முதல் மாக்சிசத்தின் மீது நம்பிக்கை கொண்டு வாலிபர் இயக்கத்திலும் பின் கம்யூனிஸ்ட் கட்சியிலும் இணைந்து செயற்பட்ட தோழராவர். சாதியத்திற்கு எதிரான வெகுஜன இயக்கப் போராட்டங்களின் போதும் தொழிற்சங்க செயற்பாடுகளிலும் வலி - வடக்குப் பிரதேசத்தில் முன்நின்று செயற்பட்ட தோழர்களில் தோழர் ஞானம் முக்கியமானவராகத் திகழ்ந்தார். அவரது அக்காலப் பங்களிப்பு என்றும் நினைவு கூரத்தக்கதாகும். அவரது மறைவுக்கு புதியபூமி தனது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது. அவரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களை தெரிவிக்கின்றது.

# ஐக்கியப்பட்ட வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும் அட்டன் மேதின கூட்டத்தில் தோழர் தம்பையா

உலக பொருளாதாரம் மிக வேகமாக வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் முதலாளித்துவ ஏகாதிபத்தியம் தன் இருப்புக்கான உச்சக்கட்ட போராட்டத்தில் முனைப்பு காட்டி நிற்கும் சூழ்நிலையில் 123 வது மேதினம் ஏகாதிபத்திய எதிர்ப்பு குரலாகவும் பொருளாதார மீட்சிக்கான உலகத்தொழிலாளர்களின் ஏகோபித்த போராட்டமாகவும் ஒலித்து நிற்கிறது. இந்த சூழ்நிலையில் சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் உட்படுத்தப்படுகின்ற மக்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்ப வேண்டிய மேதின கூட்டங்கள் பல தொழிற்சங்க அரசியல் தலைமைகள் தமது சுயநல அரசியல் இலாபத்திற்காகவும் தமது ஆளும் வர்க்க விசுவாசத்தை காட்டவும் தவிர்ந்துக் கொண்டன. இந்த நிலையில் மிகுந்த அச்சுறுத்தலுக்கும் சவாலுக்கும் மத்தியில் புதிய ஜனநாயக கட்சி தமது மேதின கூட்டங்களை மலையகத்திலும் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நடத்தியது.

தமிழ் மக்களுக்கு உயர்ந்த பட்ச சுயாட்சிக்கான அரசியல் தீர்வு தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு பெருந் தோட்டங்களை சிறுத்தோட்ட உரிமையாளர்களுக்கு



தாரைவாற்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தோட்ட தொழிலாளர்கள் தனியார் துறையினர் அரசாங்கம் பங்கெடுக்கும் கூட்டுறவு அமைப்புகளின் ஊடாக தோட்டங்களை நிர்வகிக்க நடவடிக்கை எடுத்தல். அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற முழக்கங்களை முதன்மை படுத்துவதாக அட்டன் சக்தி மண்டபத்தில் இடம் பெற்ற புதிய ஜனநாயக கட்சியின் புரட்சிகர மேதினக் கூட்டம் கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர். இ. தம்பையா தலைமையில் இடம் பெற்றது.

அவர் தனது தலைமையுரையில், மக்கள் மீது அரசாங்கம் மேற் கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வானது தமிழ் மக்களின் உயர்ந்தபட்ச அபிலாசைகளை பூர்த்தி செய்வதாக அமைய வேண்டும். இன்றைய உடனடி நடவடிக்கைகள் இரண்டு கட்டங்களைக் கொண் டதாக அமைய வேண்டும். இடம் பெயர்ந்துள்ள மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள குடியமர்த்தி அவர்கள் சுமுகமான வாழ்வுவாழக் கூடிய சமூகச் சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அநாவசிய கைது படுகொலைகள் கடத்தப்படுவது நிறுத்தப்பட்டு மக்களின் ஜனநாயகம் மனித உரிமைகள் உறுதிசெய்யப்பட்டு இயல்பு வாழ்க்கைக்குரிய சமூக கட்டமைப்பு உறுதிசெய்யப்பட வேண்டும். இதுவே இன்றைய உடனடி தேவையாக உள்ளது.

அடுத்து அனைத்து தமிழ் அமைப்புக்களுடனும் இடதுசாரி ஜனாநாயக கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தமிழ் மக்களுக்கும் அடக்கப்படுகின்ற ஏனைய தேசிய இனங்களுக்கும் அதிகபட்ச சுயாட்சியை உறுதி செய்ய கூடிய அரசியல் தீர்வை முன்னெடுப்பது அடுத்த கட்ட நடவடிக்கையாகும். இதனை சரிவர நேர்மையுடன் மேற்க் கொள்வதன் மூலமே யுத்த மற்ற, ஐக்கியமான சுதந்திர மான இலங்கையை கட்டியெழுப்ப முடியும். இதன் மூலமே கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

பேரினவாத மமதையில் மூழ்கி இருக்கும் ஜனாதிபதி மஹிந்தவின் அரசாங்கமோ ஐ.தே.கட்சி உள்ளிட்ட பேரினவாத சக்திகளோ வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தாமல் தமது சுயநல அரசியல் இலாபத்திற்காக செயற்படுமானால் யுத்தமற்ற இலங்கை என்பது வெறும் கனவாகவே முடியும். அது மட்டுமல்ல வெளிநாட்டு சக்திகளின் ஆதிக்கத்தையும் தலையீட்டையும் தடுத்து நிறுத்த முடியாத அபாய நிலை நீடிக்கவே செய்யும். இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையை பயன்படுத்திக் கொண்டு மேற்கத்தைய அமெரிக்க மேலாதிக்க சக்திகள் மட்டுமன்றி இந்திய மேலாதிக்க சக்திகளும் இலங்கையின் மீது ஆதிக்கம் செலுத்துவதை அனுமதிக்க முடியாது.

மஹிந்த ராஜபக்ஷ ஏகாதிபத்திய எதிர்ப்பாளர் போல் தன்னைக் காட்டிக் கொண்டு பாசாங்கு செய்கிறார். ஆனால் தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகள் மேற்குலகத்தினதும் இந்திய ஆளும் வர்க்கத்தினரதும் அனுசரணையுடனே இடம் பெறுகிறது என்பதே உண்மை. மஹிந்தவின் அரசியல் காய் நகர்த்தல்கள் அன்னிய சக்திகளின் ஆதிக்கம் இங்கு மேலோங்குவதற்கு வழி செய்துள்ளது. யுத்ததிற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதன் மூலமும் பெருந்தொகையான முதலீடுகளை செய்து எமது வளங்களை கொள்ளையடிக்க செய்வதன் மூலமும் இந்தியாவின் மேலாதிக்கம் இங்கு வேரூன்றி விட்டது. இன்றைய அமைதியற்ற நிலைக்கு அமெரிக்க, ஐரோப்பிய யப்பானிய, இந்திய தலையீடுகளே காரணம். இதனை விளங்கிக் கொண்டு சரியான மாற்று வேலைதிட்டங்களை முன்னெடுக்காவிட்டால் இங்கு நிரந்தர அமைதியை ஏற்படுத்த முடியாது.

அன்று தொழிலாளர் சாசனத்தை சமர்பித்த மஹிந்தாவின் ஆட்சியிலே இன்று 8 மணிநேர வேலை 9 மணித்தியாலமாக்கப் பட்டிருக்கிறது. தொழிற்சங்க நடவடிக்கைகள் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு மறுக்கப்படுகிறது. பெருந் தோட்டங்கள் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு பிரித்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே 8 மணி நேர வேலையை மீண்டும் உறுதி செய்யவும், தொழிற் சங்க உரிமைகளை நிலைநாட்டவும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்கவும் பெருந் தோட்டப் பொருளாதாரத்தை பாதுகாக்கவும் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும் பரந்துப்பட்ட சக்திமிக்க தொழிற்சங்க இயக்கத்தை கட்டி வளர்க்க வேண்டும். அதற்குரிய உறுதியான அரசியல் தலைமைத்துவம் அவசியமானதாகும். அதே போன்று வடக்கு கிழக்கிலே இயல்பு வாழ்வை ஏற்படுத்தவும் அரசியல் தீர்வை வென்றெடுக்கவும் சக்தி மிக்க மக்கள் இயக்கங்களை கட்டியெழுப்புவதே ஒரே வழி. அன்னிய தலையீடுகளில் இருந்தும் முதலாளித்துவ பேரினவாத சுயநல அரசியல் சாக்கடைகளில் இருந்தும் இந்த நாட்டு வளங்களையும் மக்களையும் பாதுகாக்க வல்ல பரந்துபட்ட சக்தி மிக்க அரசியல் தலைமையே இன்றை அத்தியாவசியத் தேவையாகும். அதை நோக்கி எமது அரசியல் பயணம் தொடரும். அதனைச் சக்திப்படுத்தி முன்னெடுக்கும் பொறுப்பு மக்களையும் இளைஞர் யுவதிகளையும் சார்ந்திருக்கிறது என்றும் கூறினார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய பு.ஜ.கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் தோழர் சோ. தேவராஜா இன்று இந்த நாட்டில் ஒருவர் கைது செய்யப்படாமலோ, காணமல் போகாமலோ கொல்லப்படாமலோ அச்சுறுத்தப்படாமலோ இருந்தால் அவர் ஊனமுற்ற வராக இருப்பரோ என்று கருத வேண்டியுள்ளது. அந்த அளவுக்கு இந்த நாட்டின் அரசியல் கலாச்சாரம் பேரினவாத ஆளும் வர்க்க வெறித்தனத்தால் சீரழிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களுடைய நீண்டகால உரிமைக் கோரிக்கைகள் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு தூக்கியெறியப்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசியவிடுதலைப் போராட்டம் மிகக் கொடுரமாக ஒடுக்கப்பட்டுவருகிறது. லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டு முகாம்களிலே முடக்கப்பட்டிருக்கிறார்கள். வயது வித்தியாசமற்ற மனிதப் படுகொலைகள் கண்மூடித்தனமாக மேற் கொள்ளப்பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கானவர்கள் முடமாக்கப்பட்டு வருகிறார்கள். ஜனநாயக மறுப்பு, ஊடகசுதந்திர மறுப்பு என அதிகார வர்க்கக் கோரத் தாண்டவம் தலை விரித்தாடுகின்றன. இப்படிப்பட்டதோர் சூழ்நிலையில் தான் மார்க்ஸிச லெனினிசவாதிகள் என்ற கம்பீரத்தோடு நாங்கள் தலை நிமிர்த்து நிற்கிறோம். ஏனெனில் அடக்கப்படுகின்ற சுரண்டப்படுகின்ற மக்களுக்கான ஒரே விமோசனம் மார்க்ஸியம் மட்டுமே என்பதில் நாம் எப்போதும் மிக உறுதியோடு இருந்து வருகின்றோம்.

தொடர்ச்சி 9ம் பக்கம்

# சம்பள வாசல்

— ஒடும்பிள்ளை

## அரசியலில் தலைதூக்கும் சாதியம்

மலையகத்தின் பிரதான தொழிற்சங்கத்தில் சாதிய ஆதிக்கம் - குறிப்பாக உயர்சாதி என்ற பிரிவினரின் ஆதிக்கம் முன்பும் இருந்து வந்தது இன்றும் இருந்து வருகிறது. குறைவான சாதியினர் என்ற பிரிவினர்கள் தொழிற்சங்கங்களுக்காக அதிக வேலை வாங்கப்பட்டனர். தொழிற்சங்க வளங்களை உயர்சாதியினர் எனப்பட்டோர் அனுபவித்தனர். தலைமைத்துவத்தின் உயர்சாதி ஆதிக்க வாதத்தினால் பாரபட்சங்கள் இடம் பெற்றுள்ளன.

சாதி சொல்லி ஏசிப் பேசும் நிலைமைகள் கூட இருந்தன. இந்த நிலைமை மத்திய தலைமைத்துவத்தில் மட்டுமன்றி தோட்டங்களில் அமைக்கப்பட்ட தொழிற்சங்கக் குழுக்களிலும் இடம் பெற்றிருந்தன. சில பாரம்பரிய இடதுசாரி தொழிற்சங்களில் கூட உயர்சாதித்துவத்துடனான தலைமைகள் இருந்தன என்பது வெளியில் அதிகம் தெரியாது.

அதேவேளை இ.தொ.கா விலிருந்து பிரிந்து தொ.தே. சங்கத்தை அமைப்பதற்கான தேவை சாதிய முரண்பாடுகள் என்றே கூறப்படுகிறது. அத்தொழிற்சங்கத்திலும் பிற்காலத்தில் சாதிய ஆதிக்கம் நிலை நாட்டப்பட்டதாகவே கூறப்படுகிறது.

1960 களில் தோன்றிய புரட்சிகர தொழிற்சங்களிலும் இளைஞர் அமைப்புக்களிலும் குறைந்த சாதியினர் என்போர் பெருமளவில் உள்ளீக்கப்பட்டனர். அப்பிரிவினரிலிருந்து கல்வி கற்றவர்கள் பலர் உருவாகினர். ஆரம்பத்தில் செங்கொடிச் சங்கத்திலும் பின்னர் புதிய செங்கொடிச் சங்கத்திலும் மேற்படி கல்வி கற்றவர்கள் ஊழியர்களாகவும் ஆதரவாளர்களாகவும் இணைந்தனர். இந்த மாற்றங்களின் பின்னர் இ.தொ.கா வில் குறைந்த சாதியினர் எனப்பட்டோரில் பலர் இரண்டாம் மூன்றாம் நிலைத் தலைமைக்களுக்கு நியமிக்கப்பட்டனர். தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான தந்திரோபாயமாக இந் நியமனங்கள் இடம் பெற்றன. 1971 ஆம் ஆண்டு கிளர்ச்சிக்குப் பிறகு புரட்சிகர தொழிற்சங்கத்தின் மீதான அடக்குமுறைகள் காரணமாகவும் 1977 ஆண்டிற்குப் பிறகு ஏற்பட்ட தமிழ் மக்கள் மீதான இனவன்முறைகள் காரணமாகவும் அவை வலுவிழந்தன.

இதனை அடுத்து இ.தொ.கா. அதனை தகவமைத்துக் கொண்டு எழுந்தாலும் தலைமைத்துவத்துவத்தில் சாதி ரீதியான ஆதிக்கங்களும் பாரபட்சங்களும் தொடர்ந்தன.

சாதி ரீதியான பாரபட்சங்களினால் இ.தொ.கா. விலிருந்து ம.ம.மு தோன்றாவிட்டாலும் இ.தொ.கா. தலைமையில் சாதி ரீதியான பாரபட்சங்களினால் பாதிக்கப்பட்டவர்களும் அப்பாதிப்புகளுக்கு எதிரானவர்களும் ம.ம.முன்னணியில் அணி திரண்டனர். ஆனால் இங்கும் சாதிய அணுகுமுறைகள் இல்லை என்று கூறிவிடமுடியாது.

எஸ். சதாசிவம் தலைமையிலான குழவினர் இ.தொ.கா. விலிருந்து பிரிவதற்கு நேரடியானதும் உடனடியானதும் காரணம் சாதியமல்லா விட்டாலும் அவர் இ.தொ.ஜ. முன்னணியை கட்டுவதற்கு இ.தொ.கா. வின் தலைமையின் சாதிய பாரபட்சங்களை அடிப்டையாகக் கைக்கொண்டார். இ.தொ.கா வின் தலைவராக ஆறுமுகன் தொண்டமான் குடும்ப வாரிசாக நிலைநிறுத்தப்படும் போது ஏற்பட்ட சிக்கல்களே சதாசிவம் மலைமையிலான குழவினர் பிரிவதற்கு காரணமாகும். தற்போது செந்தில் தொண்டமான் என்றொருவர் தொண்டமான் குடும்ப வாரிசாக இ.தொ.கா வின் உப தலைவராக்கப்பட்டு ஊவா மாகாணத்தில் இறக்கப்பட்டுள்ளார். இது பிரதி கல்வியரமைச்சராக இருக்கும் சச்சிதானந்தன் போன்றோரை ஓரம் கட்டுவதற்கான முயற்சி என்றே கூறப்படுகிறது.

இவ்வாறு பல பிரிவினர்களும் இருக்கின்ற மலையகத் தொழிற்சங்களில் சாதிய ஆதிக்க அணுகு முறைகளும் ஆதிக்கமும் தலைமைகளில் இருப்பதை மறுக்கமுடியாது.

அன்மைக்காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்றவர்கள் பணம், சாராயம் போன்றவற்றை மக்களுக்கு கொடுத்தது மட்டுமன்றி சாதிவெறியை ஊட்டி வாக்கு கேரித்துள்ளனர். தொழிற்சங்கங்களுக்கு அங்கத்தவர்களை சேர்க்கவும் வாக்குகளை வாங்கவும் சாதி அடையாளங்களும் பாவிக்கப்பட்டுள்ளன. குறைந்த சாதியினர் எனப்படும் பிரிவினர் மத்தியில் முளைத்துள்ள தலைவர்கள் சாதிய அடையாளத்தை நன்கு பயன்படுத்தி வருகின்றனர். இதனால் சாதி ரீதியாகத் தொழிலாளர்கள் தமக்குள் மோதிக் கொண்டு பொலிஸ் நிலையங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் சென்றுள்ளனர். பலர் காயப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மலையகத்தின் சமூக அசைவியக்கத்தில் தீண்டாமையும் வெளிப்படையான சாதிய ஆதிக்க வாதமும் இல்லை என்ற நிம்மதி முன்பு காணப்பட்டது.

தற்போது தொழிற்சங்க தலைவர்களின் குடும்பங்களிலிருந்து வாரிசுகள் தலைவர்களாக்கப்படுவதன் மூலம் சாதிய ஆதிக்கமே நிலைநாட்டப்படுகிறது. இதன் மூலம் வெளிப்படையாக குடும்ப ஆதிக்கம் போன்று தோன்றினாலும் சாதிய ஆதிக்கமே நிலை நாட்டப்படுகிறது.

ம்று தலையாக முறைந்த சாதியினர் எனப்படுபவர்கள் மத்தியிலும் சாதிய அணுகுமுறைகளும் அடையாளங்களும் நிலை நிறுத்தப்பட்டு வருகின்றன.

தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் தீண்டாமை சாதியம் என்பன வலுவிழந்துள்ள போதும் தொழிற்சங்க தலைமைகளிடமிருக்கும் சாதிய ஆதிக்கமும் அணுகுமுறைகளும் சாதிய அடையாளங்களை நிலைநிறுத்தி தொழிற்சங்கங்களுக்கு அங்கத்தவர் சேர்க்கும் வாக்குகளைப் பெறும் அயோக்கியத்தனத்தால் சாதிய முரண்பாடுகள் மீண்டும் திட்டமிட்டு வளர்க்கப்படுகின்றன. சாதி அடையாளங்களை கடந்த திருமணங்கள் மலையகத்தில் சாதாரணமாக நடக்கின்ற இக்காலகட்டத்தில் தொழிற்சங்கங்களை கட்டுவதற்கும் வாக்குகளை பெறுவதற்கும் சாதிய வித்தியாசங்களை முன் நிறுத்துவதை ஏற்று அங்கீகரிக்க முடியாது.

சாதியக்கொரு லயம் சாதிக்கொரு கோவில் சாதிக்கொரு தொழில் என்ற நிலை மலையகத்திலும் இருந்ததை மறந்துவிடமுடியாது. தொழிலாளர்களின் வாழ்க்கைமுறை சமூகத்தின் முன்னோக்கி அசைவு என்பனவை காரணமாக அவை குறிப்பிடத்தக்க அளவு மாறியுள்ளன. ஆனால் பழைய யுகத்திற்கு மீண்டும் போவதை அங்கீகரிக்க முடியாது.

சமூக விடயங்களில் இருக்கும் சாதிய அணுகுமுறைகள் அரசியலை பாதிக்கும் அதே போன்று அரசியலில் இருக்கும் சாதிய அணுகு முறைகள் சமூகத்தில் சாதியத்தின் இருப்பை பாதுகாப்பதாகிவிடும். அவற்றினால் மக்கள் மத்தியில் மேலும் பிளவுகளும் முரண்பாடுகளும் அதிகரித்து ஒற்றுமை சீர்குலையும். குறிப்பாக வர்க்க ரீதியான ஐக்கிய குலைக்கப்படும். எனவே மலையகத்தில் சாதியம் இல்லை என்று மொட்டையாகக் கூறிவிட்டு ஒய்வெடுப்பதை தவிர்த்து சாதியத்தின் மிச்ச சொச்சங்களை துடைத்தெறிய ஓயாது உழைப்பது அவசியம்.

புதிய பூமி
சுற்று 16 மே - யூன் 2009 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 123
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@gmail.com, web : www.ndpsl.org.

# முன்னாள் நீதியரசரின் ஒப்புதல்

இந்த நாட்டின் உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசராக இருந்து ஓய்வு பெற்றுள்ள சரத்.என்.சில்வா யூன் மாதம் 05ஆம் திகதி ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றிய போது தெரிவித்த கருத்துக்கள் உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டியவை ஆகும். ஏனெனில் நீதிமன்றங்கள் 'சட்டத்தின் ஆட்சியை' முழுமையாக நிலைநாட்ட எடுக்கும் முயற்சிகளே மக்களின் ஜனநாயகத்தையும், உரிமைகளையும் உறுதி செய்வதற்கும் நீதித்துறையின் பங்காக இருக்க முடியும. ஆனால் அதற்காக அவர் எடுத்த முயற்சிகளை விட 'சுனாமி பேரவலத்திற்கு' பிறகு தமிழ்ப் பிரதேசங்களில் மீளமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் செய்து கொண்ட 'சுனாமிக் கட்டமைப்பு' உடன்பாட்டை செல்லுபடியற்றதென தீர்ப்பளித்ததை பெரும் சாதனையாகக் கூறியுள்ளார்.

13வது திருத்தச் சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பை தான் இரத்து செய்து கிழக்கு மாகாணத்தைப் பிரித்து தீர்ப்பளித்ததாகவும், அதனையும் ஒரு சாதனையாகவும் கூறியுள்ளார்.

இவ்விரண்டு தீர்ப்பையும் கொடுத்ததன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக தான் செயற்பட்டதாகத் தெரிவித்துள்ளார். இதற்கு மேலதிகமாக அவர் தெரிவித்த கருத்துக்களும் கவனத்திற்குரியன.

மாகாணசபை முறையை ஏற்படுத்திய 13வது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்த நடவடிக்கையானது சிந்தித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையல்ல என்றும் இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு மாகாணசபை பொருத்தமற்றது என்றும் 1980இல் ஜே.ஆர்.ஜயவர்த்தன அறிமுகம் செய்த மாவட்ட அபிவிருத்திச் சபையையே பொருத்தமாகும் என்றும் விதந்துரைத்துள்ளார்.

அவர் வழங்கிய சுனாமிக் கட்டமைப்பு, வடக்கு கிழக்கு பிரிப்பு பற்றிய தீர்ப்புகளை அவரே சிலாகித்து கூறிவருவதிலிருந்து அத்தீர்ப்புகளை வழங்குவதில் அவரின் அகரீதியான விருப்பங்கள் தீர் மானிக்கும் காரணியாக இருந்ததாக அவர் ஒப்புதல் செய்வதாகவே இருக்கிறது. சுனாமி கட்டமைப்பும், வடக்கு கிழக்கு இணைப்பும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மட்டும் உரியதாக இருக்கவில்லை. அது தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை நிவர்த்தி செய்வதற்கான சில கோரிக்கைகள் உள்ளடங்கி இருந்தன என்பதை அவரால் புரிந்து கொண்டிருக்க முடியாது.

வடக்கு கிழக்கு இணைப்பை துண்டித்தமை தொடர்பாக 'தான் தான் செய்தேன்' என்று சரத் என் சில்வா கூறியது இது முதலாவது தடவையல்ல. சில மாதங்களுக்கு முன்பு மட்டக்களப்பு நீதிமன்ற கட்டிடத் தொகுதியை திறந்து வைத்து உரையாற்றும் போது "கிழக்கு மாகாண மக்களுக்கென தனியான பண்பாடு இருக்கிறது. அதனால் உங்களை வடமாகாணத்திலிருந்து பிரித்து வைத்தேன்' என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சரத் என் சில்வாவின் 'இவ்வுதிர்ப்புகள் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகள் தொடர்பாக நாட்டின் சட்டத்துறை (பாராளுமன்றம்) நிர்வாகத்துறை நீதித்துறை ஆகிய மூன்று துறைகளும் ஒரே இடத்திலேயே இருந்துள்ளன என்பவற்றக்கான "பறை சாற்றலாகும்". அவர் 13வது திருத்தச் சட்டம் குறித்து தெரிவித்திருக்கும் அதிருப்தியும், மாவட்ட அபிவிருத்திச் சபைகளை விதந்துரைத்திருக்கும் நிலைப்பாடும் அவர் அதிகாரப் பங்கீட்டிற்கு எதிரானவர் என்பதையும், வெறும் அதிகாரப் பரவலாக்கல்களை மட்டும் விரும்புபவர் என்பதையும் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. அவர் 'ஒற்றையாட்சி' முறைக்குள்ளேயே இலங்கையை வைத்திருக்க விரும்புகிறார் என்பதை சொல்லாமல் சொல்லியிருக்கிறார். காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது சாத்தியமில்லை என்றும் கூறியுள்ளார்.

அவர் பெற்றோல் விலையை நிர்ணயித்து கொடுத்த தீர்ப்பினை நடைமுறைப்படுத்த முடியவில்லை, அரச பாடசாலைகளில் முதலாம் தரத்திற்குச் சேர்ப்பதற்கான அவர் விதித்த முறைகள் இன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஒலிபெருக்கி சத்தத்தை கட்டுப்படுதுவதற்காக அவர் விதித்த விதிகளை பௌத்த விகாரைகளின் விடயத்தில் அமுல்படுத்துவதில் அவருக்கு சிக்கல் ஏற்பட்டது. அவரின் ஒரு சில தீர்ப்புகள் குறிப்பிடத் தக்கவை. கொழும்பிலிருந்து தமிழ் மக்களை (லொட்சுகளி லிருந்து) வவுனியாவிற்குக் கொண்டு சென்றமைக்கு எதிராக வழங்கிய தீர்ப்பும் அவரது கடைசித் தீர்ப்பான காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பங்குகளை தனியாருக்[illegible]விற்றதை இரத்து செய்த தீர்ப்பு என்பவற்றை குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. அவரது தீர்ப்புகளை சாடுவது நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கொள்ளப்படலாம். அதனால் ஆசிரியர்களின் பகிஷ்கரிப்பு பற்றிய அவரது தீர்ப்புகள் பற்றி பேசப்படாமலே விடலாம். சில சட்டத்தர ணிகள் பற்றிய அவரது தீர்ப்பையும் பற்றி பேசாமல் விடலாம். அவை சட்டம்பற்றி படிப்பவர்களுக்குரிய சுவார்சியமான விடயங் களாக இருக்கலாம்.

ஓய்வு பெறுகின்ற போது வடக்கு கிழக்கு இணைப்பை துண்டித்தமை பற்றியும் சுனாமி கட்டமைப்பை செல்லுபடியற்றதாக்கியதைப் பற்றியும் அவர் வழங்கிய தீர்ப்பினால் ஏற்பட்ட விளைவுகள் குறித்து சிந்திக்கத் தவறுவது நியாயமாக இருக்காது. ஏனெனில் அத்திரப்புகள் பற்றி அவர் சிலாகித்து அவரின் அகநிலைப்பற்றி பேசும் போது மௌனம் கலைப்பது அவசியமாகிறது.

தமிழ் மக்களின் சட்ட ரீதியான உரிமைகள் உறுதி செய்யப்படாவிட்டால் மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்படும் அபாயம் இருப்பதாக சரத் என். சில்வா கூறியிருப்பதன் அர்த்தம் புரிவதாக இல்லை. அவர் சட்ட ரீதியாக உரிமையென்று கூறுவது தமிழ் மக்களை சட்டம் போட்டு தடுக்க வேண்டும் என்று கூறுகிறாரா?

அவரின் நிலைப்பாடு 'ஹெல உறுமய' நிலைப்பாட்டிற்கு ஒத்ததாகவே இருக்கிறது. அவர் நீண்டகாலமாக பிரதம நீதியரசராக இருந்தது மட்டுமன்றி வித்தியாசமானவராக இருந்திருக்கிறார். அவரின் வித்தியாசங்கள் அவர் ஓய்வுபெறும் போது நடத்திய ஊடகவிளலாளர் மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

வரலாறு எப்போதும் முன்நோக்கியே செல்லும் என்பார்கள். இலங்கையின் வரலாறு பின்நோக்கி செல்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. சரத் என். சில்வா போன்றவர்கள் பரந்துபட்ட மக்களின் அபிலாஷைகளைக் கொண்டவர்கள் அல்லர் என்று நம்புவோம். ஏனெனில் மக்கள், மக்களே தான் வரலாற்றின் உந்து சக்தி என்பதே நிதர்சனமானதாகும்.

**ஆசிரியர் குழு**

# தமிழ்த் தலைமைகள் பதில் கூற வேண்டும்!

**வெகுஜனன்**

வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் மக்கள் கடந்த 30 ஆண்டுகளாகக் கொடிய பேரினவாத யுத்தத்தாலும் தமிழீழக் கோரிக்கைக்கான போராட்டங்களாலும் அனுபவித்த அவலங்களும் துன்ப துயரங்களும் கணக்கிட முடியாதவைகளாகும். ஏதோ ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட இழப்புகளுக்கும் துன்பத்திற்கும் ஆளாகாத ஒரு குடும் பத்தைத் தானும் வடக்கு கிழக்கில் காண்பது அரிதாகும். உயிர் இழப்புக்கள், சொத்தழிவுகள், வீடு வாசல்களை இழந்த இடப் பெயர்வுகள் தொடர் நிகழ்வுகள் ஆயின. நிலபுலங்கள் அவற்றின் வளங்கள் வாழ்வாதாரங்கள் தொழில்துறைகள் விவசாயம் மீன்பிடி யாவற்றையும் அவ்வப்போது இழந்து கொண்டே வந்திருக்கிறார்கள். மக்களின் உழைப்பு பொருளாதாரம் கல்வி சுகாதாரம் சமூகப் பண்பாட்டம்சங்கள் யாவும் சிதைவுகளுக்கும் அழிவுகளுக்கும் உள் ளாகி வந்துள்ளன.

இத்தகைய அழிவுகளுக்கு உழைக்கும் மக்களான தொழிலாளர்கள் விவசாயிகள் மீனவர்கள் அன்றாடத் தொழில்களில் ஈடுபடுவோர் ஆளாகினர். அவற்றிலிருந்து மீள முடியாத நிலையிலேயே இன்றும் அவ் உழைக்கும் மக்கள் இருந்து வருகின்றனர். அத்துடன் கீழ் மத்திய தர வர்க்க மக்களான அரசாங்க தனியார் ஊழியர்கள் உத்தியோகத்தர்களும் பாதிக்கப்பட்டனர். பொருளாதார நெருக்கடிகளும் விலை உயர்வுகளும் எல்லோரையும் வாட்டி வதைத்தன. ஓரளவு வசதி வாய்ப்பு உள்ள குடும்பங்களில் இருந்து பலர் புலம் பெயர்ந்தனர். அத்தகையோர் அனுப்பிய பணமானது ஒரு சிறு ஆதாரமாக உதவியதே தவிர சமூக நலிவையும் துன்பங்களையும் போக்க உதவவில்லை. போராட்டத்தின் பெயரால் போராட்டத்திற்கு எனத் திரட்டப்பட்டளவு நிதியானது சமூக ரீதியாக தமிழ் மக்களின் இழப்புக்களுக்கும் துயரங்களுக்கும் எவ்விதத்திலும் உதவவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இழப்புக்களில் இன்றும் எதிர்காலத்திலும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகிக் கொண்டமை மக்களின் உயிர் இழப்புக்களாகும். கொடிய பேரினவாத யுத்தம் வான் தரை கடல் ஆகிய மூன்று முனைகளாலும் மக்களைப் பலி கொண்டது. வடக்கு கிழக்கில் பல்லாயிரக் கணக்கில் இவ்வாறு பேரினவாத இராணுவத்தால் தமிழ் மக்கள் அழிவுகளுக்கு உள்ளாக்கப்பட்ட அதே சம காலத்தில் தமிழீழத்திற்காக ஆயுதம் ஏந்திய தமிழ் இயக்கங்களால் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டமை தான் சோகத்தின் மேல் சோகமானதாகும். தமிழீழத்தைத் தலைப்புப் பெயராகக் கொண்ட அனைத்து ஆயுத இயக்கங்களும் ஜனநாயக மறுப்பையும் அராஜகங்களையும் கொலைகளையும் கொள்ளைகளையும் கொண்டிருந்தன. துரோகிகள், காட்டிக் கொடுப்போர், சமூக விரோதிகள், திருடர்கள் போன்ற பெயர்களில் வீதிவீதியாக மக்கள் இளைஞர்கள் சுட்டுப் போடப்பட்டனர். அடுத்த கட்டமாக இயக்கங்களுக்குள் எற்பட்ட உள் முரண்பாட்டால் விடுதலைக்கு என நம்பிச் சென்ற இளைஞர் யுவதிகள் கொல்லப்பட்டனர். அதன் பின் இயக்கங்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளால் கொலைகள் இடம்பெற்றன. இறுதியாக தனி ஒரு தலைவன் தனி ஒரு இயக்கம் ஏகப் பிரதிநிதி என்பதற்காக விடுதலைப் புலிகள் எல்லா இயக்கங்கள் கட்சிகள் தனி நபர்கள் மீதான கொலைகளைப் புரிந்து கொண்டது. இத்தகைய கொலைகளுக்கு தமிழீழத்தைப் பிரகடனஞ் செய்த தலைவர்களே பலியாக வேண்டிய பரிதாபத்திற்கு ஆளாக வேண்டியதாயிற்று. இவ்வாறு கடந்த மூன்று தசாப்த கால யுத்தம் - போராட்டம் ஆகியவற்றால் தமிழ்மக்கள் இளைஞர்கள் யுவதிகள் சுமார் ஒன்றரைக்கும் இரண்டு லட்சத்திற்கும் இடைப்பட்ட தொகையில் கொன்றழிக்கப்பட்டனர் என்றே மதிப்பிடப்படுகிறது.

இவ்வாறு எந்த மக்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்கவென ஆயுதம் தூக்கிப் போராடினார்களோ அந்த மக்களையும் இளைஞர் யுவதிகளையும் இறுதி வரை தமது துப்பாக்கிகளுக்கு இரையாக்குவதில் இருந்து விடுபடவே இல்லை. தமது இறுதிக் காலப் பாதுகாப்பிற்கும் இருப்பிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் கணக்குக் காட்டுவதற்காகவும் தமிழ் மக்கள் புலிகள் இயக்கத்தால் பலியாக்கப்பட்ட குற்றச்சாட்டிற்கு உள்ளாகினர். முல்லைத்தீவில் இறுதிப் போர்க்களத்தில் மக்கள் பேரவலங்களுக்கு ஆளாகிப் பல ஆயிரக் கணக்கில் கொல்லப்படுவதற்கு யுத்தத்தை அகோரமாக முன்னெடுத்த மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் பேரினவாத நிலைப்பாடு மட்டுமன்றி விடுதலைப் புலிகள் இயக்கம் மக்களைப் பலாத்காரமாக மறித்து வைத்திருந்தமையும் மீறித் தப்ப முனைந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடுகள் நடாத்திக் கொலைகள் புரிந்தமையும் மறுக்க அல்லது மறைக்க முடியாதவைகளாகும். இம் மனிதப் பேரவலத்தை மக்கள் முல்லைத்தீவில் அனுபவித்து சுமார் ஐம்பதினாயிரம் வரையான மக்களைப் (சரியான விபரம் பெறப்படாத நிலையில் குத்துமதிப்பாகவே கூற முடிகிறது) பலி கொடுத்து நிற்கும் நிலை எதனால் ஏற்பட்டது என்பதே மக்கள் முன் வரும் கேள்வியாகிறது. இவற்றுக்குப் பதிலும் பொறுப்பும் கூற வேண்டியவர்கள் யார் என்ற கேள்வியும் எழுகின்றது. இவ்வாறான கேள்விகளுக்கு மூன்று தரப்பினர் பொறுப்பும் பதிலும் தர வேண்டியவர்கள் ஆகின்றனர்.

**தமிழ் மக்களின் அழிவுகளுக்கும் அவலங்களுக்கும் புலிகள் இயக்கம் மட்டுமல்ல அனைத்து தமிழ்த் தேசியவாதத் தலைமைகளும் பெறுப்பானவர்களாகும்.**

1 இலங்கையின் பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கமாக இருந்து ஆட்சி அதிகாரத்தை முன்னெடுத்து வந்த இரண்டு பிரதான கட்சிகளும் அவர்களோடு இணைந்த பௌத்த சிங்கள மேலாண்மையாளர்கள் அனைவருமாவார். அவர்கள் முன்னெடுத்து வளர்த்த பேரினவாதமே இராணுவ ஒடுக்கு முறையாகவும் யுத்தமாகவும் தமிழ் மக்களைப் பலி கொண்டு வந்திருக்கிறமை வரலாற்றுத் தெளிவுடையதாகும்.

2 இத்தகைய பேரினவாத ஒடுக்கு முறைக்கு இலங்கையின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்கைக் கணக்கில் கொண்டு பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டுத் தளங்களிலான யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளுக்கும் இருப்பிற்குமான தூர நோக்கில் அமைந்த கொள்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பேரினவாதத்தை எதிர்ப்பதற்கு அதன் எதிர் நிலையான பழைமைவாதா குறுந்தேசியவாத நிலைப்பாட்டிலிருந்து சாத்தியமற்றதும் அழிவுகரமானதுமான கொள்கைகளே முன்னெடு க்கப்பட்டன. அதன் வளர்ச்சியாகவும் உச்சமாகவும் முன்னெடு க்கப்பட்டு 30 ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வந்ததே தமிழீழக் கோரிக்கையும் அதற்கான போராட்டமும் ஆகும்.

3 இக் கோரிக்கையை வென்றெடுக்க இந்திய மேலாதிக்கத்தையும் அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளையும் நாடிச் சென்று நாசங்கள் தேடப்பட்டன. அத்தகைய அந்நிய மேலாதிக்க சக்திகள் தங்களுடைய ஊடுருவல் தேவைகள் இருப்பு என்பனவற்றுக்காக இத் தமிழீழப் போராட்டத்தை வளரச் செய்து வழிகாட்டி வந்துள்ளதுடன் தத்தமது தேவைகள் முடிந்ததும் தமிழீழப் போராட்டத்தை அழித்தொழிப்பதற்கும் உதவி ஒத்தாசை புரிந்து கொண்டன. அதனையே தமிழ் மக்கள் முல்லைத்தீவின் இறுதிப் போர்க்களத்தில் பேரவலங்களின் மத்தியில் அனுபவமாகக் கண்டனர்.

இத்தனைக்கும் பின்பும் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் யாவும் தமிழ் மக்கள் முன்னால் என்ன பதிலையும் பொறுப்பையும் கூறப் போகிறார்கள். யுத்தம் முடிந்துள்ளது என்றும் பயங்கரவாதம் அழிக்கப்பட்டுள்ளதென்றும் ஜனாதிபதியும் அரசாங்கமும் பிரகடனம் செய்துள்ளனர். ஆனால் அவற்றால் அழிவுற்ற வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களுக்கும் இன்று முட்கம்பி வேலிகளுக்குள் தடுத்து வைத்துள்ள மூன்று லட்சம் தமிழ் மக்களுக்கும் ஏற்கனவே அழிவுகள் அவலங்கள் இழப்புக்கள் இடப்பெயர்வுகளுக்கும் உள்ளான அனைத்துத் தமிழ் முஸ்லீம் மக்களுக்கும் அதே தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் என்ன கூறப் போகிறார்கள். அத்தனைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் தான் பொறுப்பு எனக் கூறி ஏனைய தலைமைகள் தப்பித்துக் கொள்ள முடியாது. வட்டுக்கோட்டையில் நிறைவேற்றிய சாத்தியமற்றதும் தூர நோக்கற்ற அழிவுகரமானதுமான தமிழீழக் கோரிக்கையை நிறைவேற்றிய தந்தையர்கள் மைந்தர்கள் தொடர்ந்து அவற்றை நடைமுறைப்படுத்திய அண்ணன்மார் தம்பிமார் யாவரும் தமிழ் மக்களுக்குப் பதிலும் பொறுப்பும் கூற வேண்டியவர்களே.

வரலாறு நிறுத்தியுள்ள குற்றவாளிக் கூண்டிலிருந்து உரிய பதில் கூறாது அதனைக் கடந்து சென்று பாராளுமன்றத்திற்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் செல்வதில் எவ்வித அர்த்தமும் இருக்க முடியாது. 33 வருட (1976-2009) கால அரசியல் போராட்ட வழிகாட்டலின் சகல தவறுகளுக்கும் பழி பாதகங்கள் அனைத்திற்கும் அழிந்து போன புலிகள் இயக்கத்தின் மீது மட்டும் பழியைச் சுமத்தி விட்டு ஏனைய தமிழ்த் தேசியவாதக் கட்சிகளும் இயக்கங்களும் தலைவர்களும் தவறிக் கொள்ள முடியாது. தமிழீழக் கோரிக்கையைப் பாராளுமன்றத்திற்கும் அதற்கு அப்பாலான போராட்டத்திற்கும் கையில் எடுத்த சகலரும் தமிழ் மக்களுக்கு இன்று பதில் கூற வேண்டியவர்களே ஆவர். தமிழ் மக்கள் மத்தியில் கடந்த காலம் கேள்விகளுக்கும் விமர்சனங்களுக்கும் உள்ளாக்கப்படாது விட்டால் நிகழ்காலத்தில் சரியான அரசியல் மார்க்கம் தேடப்பட முடியாத ஒன்றாகிவிடும். அதனால் எதிர்காலமும் இருள் மண்டியதொன்றாகவே அமைந்து விடும். எனவே வீணாகிப் போன தலைமைகளிடமிருந்து நேர்மையான பதில்கள் முடியாது தமிழ் மக்கள் தான் முன்னோக்கிய முடிவுகள் எடுக்க வேண்டியவர்கள்.

# உலகப் பொருளாதார நெருக்கடி மோசமான விளைவுகளைத் தருகின்றன

உலகப் பொருளாதார நெருக்கடி இலங்கையைப் பாதிக்காதெனவும் எமது பொருளாதாரம் உறுதியாக கட்டியெழுப்பப்பட்டிருப்பதாகவும் அரசு தரப்பு கூறுகிறது. 2009ம் ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சியானது 2.5 இலிருந்து 3 வீதமாக மட்டுமே இருக்குமென மத்திய வங்கியின் ஆளுநர் 2008ம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கை வெளியீட்டின்போது தெரிவித்திருந்தார். உலகப் பொருளாதாரத்தின் பாதிப்பு இலங்கையை பாதித்துள்ளதா இல்லையா என்பதை இந்நாட்டில் வெளிவரும் தகவல்களைக் கொண்டு அவதானிக்கலாம். கடந்த ஜனவரி தொடக்கம் மார்ச் வரையிலான முதல் 3 மாதங்களில் ஏற்றுமதித்துறையைச் சேர்ந்த 35,000பேர் வேலை இழந்துள்ளனர். ஆடைத் தொழிலில் முன்னணி நிறுவனமான மாஸ் கோல்டிங் 1250 (**Mas Holding**) பேரை சுயவிருப்பத்தில் இளைப்பாறுவதற்கான திட்டத்தை அறிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை போலியான முறையில் பெரிது படுத்திக்காட்டும் சேவைத்துறையும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. பல இலட்சம் வாடிக்கையாளர்களை கொண்டுள்ள டயலொக் நிறுவனம் அதன் ஊழியர் சிலரை சுயவிருப்பத்தில் இளைப்பாறச் செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

சிக்கல்களில் உள்ள நிறுவனங்களுக்கு முட்டுக் கொடுப்பதற்காக அரசாங்கம் ஏற்கனவே 1600 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. நாடு நெருக்கடிக்குள்ளாகவில்லையென்று கூறிக்கொண்டு இந்த நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது. இந்த மீட்பு நிதியானது மொத்த தேசிய உற்பத்தியில் ஒரு வீதமாகும் . இந்த மீட்பு நிதி போதாதெனவும் அது இரண்டு வீதமாக்கப்பட வேண்டுமெனப் பொருளியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தற்போதைய உலகப் பொருளாதார நெருக்கடியினால் உலகில் மேலும் ஐந்து கோடி மக்கள் பட்டினிக் கோட்டின் கீழ் வந்து விடுவார்கள் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கலாநிதி றிச்சர்ட் வோக்ஸ் கூறுகிறார்.

உலகப் பொருளாதார நெருக்கடி இலங்கையைப் பாதித்துள்ளது என்பதற்கு மேலும் சான்றுகள் கிடைத்து வருகின்றன. வாகன விற்பனை 2007/08 உடன் ஒப்பிடுகையில் 2008/9 மார்ச் முடிய ஒரு வருடகாலப் பகுதியில் 50 வீதத்தால் குறைந்துள்ளது. இறக்குமதி செய்யும் போது கொள்வனவுக் கட்டளை (எல்.சீ.) யின்போது நூறு வீதம் முற்பணம் செலுத்துதல் வேண்டும். இதைவிட ஒரு வீத தேச நிர்மாண வரியும் அறவிடப்படுகிறது. இவற்றின் காரணமாக விற்பனைகள் வீழ்ச்சிகண்டுள்ளன. தேச நிர்மாண வரியானது மே மாதம் தொடக்கம் மூன்று வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 2007ல் அரச வைத்தியர்களுக்கும் உயர் அரச அதிகாரிகளுக்கும் பெர்மிட் மூலம் 150புதிய கார்கள் இறக்குமதி செய்ததினால் வாகன விற்பனையானது குறைவடைந்தது. மோட்டார் கார் விற்பனையில் ஈடுபட்டுள்ள பெரிய நிறுவனங்களான யுனைட்டட் மோர்ட்டர்ஸ், டீமோ, ஏ.எம்.டபிள்யூ ரோயோட்ரோ லங்கா போன்றன பெரும் நெருக்கடியில் உள்ளன.


சில நிறுவனங்களில் மாதத்திற்கு ஐந்து வாகனங்கள் தானும் விற்பனை செய்ய முடியாதுள்ளது. சிறிய நிறுவனங்கள் பெப்ரவரி-மார்ச் மாதத்தில் ஒரு வாகனத்தையேனும் விற்க முடியவில்லையென 200 அங்கத்தவர்களைக் கொண்ட வாகன விற்பனையாளர் சங்கச் செயலாளர் கூறுகிறார்.

பெரிய நிறுவனமான ஏ.எம்.டபிள்யூ வாகனங்களை மாதத்தவணையில் விற்கும்போது முதல் ஆறுமாத காலத்திற்குப் தவணைப் பணம் செலுத்தத் தேவையில்லை என்ற சலுகையைப் புகுத்தி விற்பனையை அதிகரிக்க முயற்சிக்கிறது. யூ.எஸ் கார் கம்பெனியென்ற நிறுவனம் வாகனத்தின் பெறுமதியில் 50 வீதத்தை செலுத்தினால் வாகனத்தை எடுத்துச் செல்ல அனுமதிக்கிறார்கள். மீகுதி 50 வீத பெறுமதியையும் பன்னிரண்டு மாதக் கால தவணையில் செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின பொருளாதார நெருக்கடிக்கு உலக பொருளாதார நெருக்கடி தான் ஒரே ஒரு காரணமல்ல. இலங்கையில் பிரமாண்டமான (107 பேர்) அமைச்சரவைக்கான செலவு, மிகின் எயர் விமானக்கம்பனி போன்றன நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள். இவற்றையெல்லாம் விட யுத்தச் செலவு என்பவற்றால் நெருக்கடி மோசமாகியுள்ளது. அந்நியச் செலாவணியைச் நாட்டுக்குள் வெளிநாடுகளில் வதியும் இலங்கையர் அனுப்பிவருகின்றனர். அவர்கள் வதியும் நாடுகளில் பல நெருக்கடிகளை எதிர்நோக்குவதால் அன்னியச் செலாவணியின் வரத்து குறைந்து வருகிறது. திறைசேரி உண்டியல் முதலீடு செய்திருந்த வெளிநாட்டவர் தமது முதலீடுகளை மீளப் பெற்றுள்ளமை நெருக்கடியை மோசமாக்குகிறது. சுற்றுலாத்துறை மூலம் பெறப்பட்ட வருமானம் உலகப்பொருளாதார நெருக்கடியாலும்

தொடர்ச்சி 10ம் பக்கம்

# அன்புள்ள தோழருக்கு



## தோழமையுடன் செண்பகன் எழுதும் மடல்

மக்கள் மத்தியில் உறவாடுவதில் மகிழ்தல் என்பதுவே எமது அரசியலாகும். அரசியல் என்பது கொலனியவாதிகளால் எங்கள் உள்ளங்களில் ஊட்டப்பட்டு ஊடகங்களில் பிரச்சாரப்படுத்தப்படும் பாராளுமன்றப் பிதற்றலோ, உள்ளூராட்சித் தேர்தல் முதல் ஜனாதிபதித் தேர்தல் வரை பங்குபற்றிப் பொழுதை வீண் விரயமாக்குவதோ அல்ல.

மக்களோடு வாழுதல், மக்களோடு உரையாடுதல், மக்களுக்கு உதவுதல், மக்கள் மீது மதிப்பை வைத்திருத்தல், மக்களின் உள்ளுணர்வையும் உளவியலையும் புரிந்து கொள்ளுதல், மக்களை சமூக விஞ்ஞானமயப்படுத்தல், மக்களோடு உரிமையோடு உறவாடுதல், மக்கள் மத்தியில் கொலனியம், நிலமானியம், முதலாளியம், நவ கொலனியம் போன்ற ஆதிக்க சக்திகள் விதைத்து வேரூன்றச் செய்து - வளர்த்து - மக்களைப் பீடித்த விஷ விருட்சங்களைக் கண்டறிதல், அவைபற்றி மக்களோடு சலிப்பின்றி தர்க்கித்தல், விவாதித்தல், அணிதிரட்டல் போராடுதல் அவற்றில் மகிழ்ந்திருத்தல், விரக்தியுற்ற மக்களுக்கு நம்பிக்கையூட்டல், நோயுற்ற மக்களுக்கு சுகவாழ்வு பற்றிய தெம்பூட்டல், அகதியென வந்தாரை அரவணைத்தல், மக்கள் போராளியாய் வருவோருக்குப் புகலிடமளித்தல், ஆரோக்கிய வாழ்வுக்கான சுகாதார வழிமுறைகளுக்கான அறிவூட்டல், பொருளாதார வளமற்றோருக்கு சுய பொருளாதார வளம் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல் போன்றனவும் இன்னும் பல்வேறு பிரதேசங்களிலும் பல்வேறு இனப் பிரிவின், சமூகத்தின் மட்டத்தில் பல்வேறு மக்கள் தேவைகளைக் கண்டறிவதும் அவற்றை பெறுவதற்காக மக்களுடன் இணைந்து போராடுவதும் மக்களை ஒன்றுபடுத்துவ தற்காக அவர்கள் மத்தியில் நிலவும் வேறுபாடுகளை முரண்பாடுகளை கண்டறிந்து அவற்றை அவமானப்படுத்தாமல் அவதானமாகக் கையாள்வதும் சாராம்சத்தில் ஒவ்வொரு தனிமனிதரும் ஆளுமை பெற உதவி செய்வதுமே ஜனநாயக நீரோடையின் ஊற்றாகும். அதுவே மக்கள் மத்தியில் மாக்ஸீய ஊழியம் புரியும் பொதுமையறப் பண்பாகும். அதுவே மாக்ஸீய அரசியலாகும்.

அரசியல்வாதிகள் என ரங்காவின் மின்னலில் அரட்டையடிக்கும் பாராளுமன்ற அரட்டையடி வீரர்களின் பேச்சுத் தான் அரசியல் என்றோ, பல ஆண்டுகளாக நடக்கின்ற மாநகர – உள்ளூராட்சித் தேர்தல்களில் புள்ளடியிடும் வாய்ப்பை மக்கள் பெறுவதே ஜனநாயக அரசியலென்றோ பிதற்றுவது அல்ல அரசியல். எமது அன்றாட அலுவல்களை முடித்து ஓய்வாக இருக்கும் போதோ அல்லது மரண வீடுகளிலோ திருமண நிகழ்வுகளிலோ, அல்லது பொது இடங்களிலோ நேரத்தை விரயமாக்குவதற்காகப் பேசுவதோ அரசியல் அல்ல. மாறாக திட்டமிட்ட முறையில் நடைமுறையில் மக்களுடன் இயங்குதல் என்பதே ஜனநாயக அரசியல் என்பதன் சாராம்சம்.

மக்கள் மத்தியில் வாழ்தல் என்பது ஆதிக்க சமூகத்தின் அலைகளினுள் அள்ளுண்டு செல்லும் மக்களின் அங்கீகாரத்திற்காக அவசரப்பட்டு அவாப்படுவது அல்ல அரசியல். மக்களின் பின்னால் வாலில் தொங்குவது அல்ல. மாறாக மக்கள் முன் அவர்களை அணைத்து முன்னோக்கி அழைத்துச் செல்லுதலே அரசியலாகும். எம்மைச் சூழ்ந்துள்ள மக்களில் தொண்ணூறு வீதமான மக்களை எப்போதும் அணைத்து அழைத்துச் செல்வதில் நாம் அக்கறையாக இருக்க வேண்டும். அப்படி இயங்குவதெனில் அவர்களின் பலவீனங்களை, தவறுகளை கண்டு கொண்டும் சலிப்பின்றி அவர்கள் பலம் பெறவும், தவறுகளைச் சரிப்படுத்தவும் பக்குவம் பெறும்படி சளையாது நட்புறவோடு செயல்பட வேண்டும். அந்த அரசியல் போரில் விரக்தி, சோர்வு, வெறு ப்பின்றி அன்பு, அரவணைப்பு, அமைதியுடன் நிதானமாய் முன் செல்ல வேண்டும். பதட்டமின்றிக் கோபப்படத் தெரிய வேண்டும். பதட்ட மின்றிச் சண்டைப்பிடிக்கப் பயில வேண்டும். அகங்காரமின்றி அவர்கள் முன்னேற்றத்துக்கு சேவை செய்ய வேண்டும். ஆணையி டுவதே அரசியல் என்ற மயக்கமின்றிப் பொறுப்புக்களை ஆள் அறிந்து பிரித்துப் பகிர்ந்து பொறுப்பெடுப்பதில் மகிழ்வு பெற வேண்டும்.

மக்கள் மத்தியில் வேலை செய்யும் மாக்ஸீயர்களை மதிப்பதோடு, மற்றவர்களின் பொறுப்பையெல்லாம் சுமப்பது என்பதே மாக்ஸீய மகத்துவம் என்ற மனநோயிலிருந்து மீள வேண்டும்.

மக்கள் மத்தியிலான அரசியல் மகிழ்வுக்குரியது. மகிழ்ச்சி என்பது அதிகாரத்தின் மீது கட்டப்படுவதல்ல. அடுத்தவர் மீது ஆதிக்கம் செய்து அடிபணிய வைப்பதல்ல. அது முதலாளிய மன நோயாகும். நல்ல தலைவராக மாக்ஸீயர்கள் தம்மைத் தகவமைத்துக் கொள்ள வேண்டுமெனில் தான் செய்யும் வேலையில் தானும் மகிழ்ந்து மற்றவரையும் மகிழ்வுறச் செய்ய வேண்டும். வேலைகளில் மாய்வதும் அமுங்குவதும் சோர்வுறுவதும் நோய் தேடுவதும் தனிமனித விக்கிரகங்களை உருவாக்க உதவுமே தவிர மக்கள் விழிப்படைந்து சமூக மாற்றச் செல்நெறியை வழிப்படுத்துவதாக அமையாது.

தொண்ணூறு வீதமான மக்களுடன் தொடர்ந்து உழைப்பது என்பதே மாக்ஸீயரின் ஒரே வழிமுறையாகும். பிற்போக்கு நோக்குடைய நோய்வாய்ப்பட்ட சமூகத்தினரின் சடங்கு, சம்பிரதாயங்களிலோ, ஆதிக்க மனநோயில் அகப்படுவது என்பதோ அதன் அர்த்தமாகாது.

ஒவ்வொரு மனிதரிலுமுள்ள பத்து வீதமான நல்ல அம்சமெனில் அவற்றைக் கண்டறியும் வல்லமையை மாக்ஸீய இயங்குனர் தெரிந்து கொள்ள வேண்டும். அவரது தொண்ணூறு வீதமான பலவீனமான அம்சங்களைக் கண்டு தெளிந்து அவற்றிலிருந்து விலகி, அவற்றைச் சகித்து, பொறுமையோடு கோபத்தை மௌனிக்கச் செய்து, பத்துவீத நல்ல அம்சத்தை அவர்களிடம் பல மடங்காக துலங்கச் செய்ய வேண்டும். அந்த உதவி அவர்களுக்கு சுய கௌரவத்தை உருவாக்கும். தம்மைத் தாமே சுய விசாரணை செய்ய உதவும். அச் சுய விசாரணையே சுயவிமர்சனமாக வளர்ச்சி பெற்று அவர்களது ஆளுமையை கண்டறிய இயலுமாக்கும். ஆளுமை துளிர் விடத் தொடங்கினால் அவர்களில் ஆள் உருமாற்றம் தோன்றும். அப்போது அவர்களது ஆற்றல் பெருகும். ஆந்த ஆற்றல் அவர்கள் இதுவரை அறியாத பல அதிசயங்களைச் செய்யும் வல்லமையை வழங்கும். அப்போது மக்கள் அரசியல் என்பது வேர் கொள்ளத் தொடங்கும். மக்கள் அரசியல் வேர் கொள்ளத் தொடங்கியதும் ஆதிக்க அரசியலின் அரண்கள் ஒவ்வொன்றாக ஆட்டங் கொள்ள ஆரம்பிக்கும். அதுவரை அமைதியாகப் பொறுமையாக கோபம் கொள்ளவும் ஒன்றுபடவும் மக்களுடன் போராடும் வல்லமையை மாக்ஸீயர்கள் பெற வேண்டும்.

நம்பிக்கையிழந்து விரக்தியில் வாழும் மக்களுக்கு நம்பிக்கை வரவேண்டும். முதலாளிய ஆதிக்கப் பேராசையினால் போட்டி, பொறாமை, பூசல்கள் வளர்ந்து மனிதாபிமானம் மறைந்து செல்லும் நுகர்வியப் பண்பாட்டிலிருந்து விடுபடுதல் மக்களின் முதல் கடனாகும். வேதனையும் விரக்தியும் மிஞ்சிய வாழ்வும் முற்பிறப்பின் கர்ம வினைகளை அனுபவிப்பது என்ற போலித் திருப்தியில் துன்பங்களைச் சுமந்து சாவதுவும், நோயில் வருந்துவதும், வறுமையில் உழல்வதுமே உழைக்கும் மக்களின் தலைவிதியென திணிக்கப்பட்ட 'முடிந்த முடிவு' எனும் மாய விலங்கைத் தகர்க்கும் மெய்ஞ்ஞானமாக மாக்ஸீய விஞ்ஞானம் மக்கள் உள்ளங்களில் உள்ளொளி பெருக்கி நம்பிக்கையை உருவாக்க மக்கள் மத்தியில் அயராது உழைக்க வேண்டும். தன்னம்பிக்கை பெற்ற மக்களும் சமூகமுமே மாக்ஸீயப் பயிர் முளைக்கும் விளைநிலம் ஆகும்.

மக்களிடம் தோன்றும் தன்னம்பிக்கையினூடாகத் தோல்வியில் இதுவரை காலமும் துவண்ட வரலாற்றைக் கண்ட மக்கள் மத்தியில் சிறிய சிறிய வெற்றிகளைக் காணும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். அந்த வெற்றிகள் அவர்கள் வாழ்வில் புதிய அர்த்தங்களைப் புரிய வைக்கும். மக்கள் மகத்தானவர்கள். மக்கள் சாதனையாளர்கள். தம்மீது இதுவரை திணிக்கப்பட்ட முடிந்த முடிவான ஆளும் வர்க்க கருத்தியல் தளங்கள் தங்கள் மீது - தங்கள் சிந்னையின் மீது - தங்கள் முயற்சியின் மீது - தங்கள் உழைப்பின் மீது - தங்கள் வாழ்வின் மீது - தங்கள் மகிழ்ச்சியின் மீது பூட்டப்பட்ட பொற்பதக்கம் போட்ட விலங்குகளாகும் என்று கண்டு தெளிவர். தங்கள் வாழ்வைச் சிறிய வெற்றிகளினூடாக மீட்ட மக்கள் தங்கள் வரலாற்றுக் கடமையைப் புரிந்து கொள்வர். ஆதிக்கக் கரங்களில் இதுவரை சிக்கியிருந்த வரலாற்றை மக்கள் தமக்கான வரலாறாக மீட்டெடுப்பர்.

எந்த மனிதரதும் சிந்தனையும், செயலும் உயர்வதற்குப் பரம்பரை மரபணுவே காரணம் என்பது தவறாகும். 'கருவிலே திருவுடையார்' என்பது ஆளும் வர்க்க - பரம்பரை ஆதிக்க நிலமானிய சிந்னையின் விரிவாக்கமாகும். மாறாக சூழலே ஒரு மனிதருடைய சிந்தனை, செயலை மாற்றுவதில் ஐம்பத்தைந்து வீதம் செயற்படு கருவியாகும் என்பது தற்போது கண்டறியப்பட்ட உண்மையாகும். எனவே எமது சூழலை நாம் மாற்றுவதற்கு மக்களின் நம்பிக்கையையும், வெற்றியையும் தோற்றுவிக்கும் சூழலை உருவாக்க வேண்டும். எனில், ஏற்கனவே எம்மீது திணிக்கப்பட்டுள்ள கல்வி, சுகாதாரம், பண்பாடு, தத்துவம், பொருளாதாரம், சமூகப் பெறுமானம் என்பவற்றின் மீது கேள்விகளை எழுப்ப வேண்டும். வரலாற்றில் மனித சமூகம் மக்களுக்காகப் பெற்ற வெற்றிகளை எல்லோரும் அனுபவித்துப் பயன் பெற முடியாதவாறு தனிச் சொத்துடைமையின் கரங்களில் மாட்டுப்பட்ட சோக வரலாற்றை மீட்டெடுக்க வேண்டும். அப்படியாயின் மாக்ஸீயர்கள் செய்ய வேண்டிய வேலைகளின் தளங்கள் எவை எனக் கண்டறியப்பட வேண்டும்.

'எல்லாரும் ஏறிச் சறுக்கின குதிரையிலை சக்கடத்தாரும் ஏறிச் சறுக்கி விழுந்தார்' என்ற நாட்டார் வழக்கிற்கேற்ப கொலனியம் மக்களைப் பிரிப்பதற்கும் துவேஷிப்பதற்கும் சமூகங்களைத் துண்டாடுவதற்கும் கால்கோள் அமைத்த பாராளுமன்ற அரசியல் என்ற அரங்க மனோபாவத்திலிருந்து விட்டு விடுதலையாவதன் மூலமே மாக்ஸீயர்கள் மக்களுக்கான அரசியல் தளங்களைச் செப்பனிட முடியும்.

மக்களின் அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள் என்பவற்றுடன் மட்டுமல்லாது மனித உரிமை, விடுதலை, சுயநிர்ணய உரிமை, சுதந்திரம், இறைமை, தொழிற்சங்க உரிமை, கல்வி, பண்பாடு, சுகாதாரம் போன்ற பலவற்றை நாம் இழந்தும், இன்னும் அடைய வேண்டியவற்றை அடையப் பெறாமலும் எமது சமகால அரசியல் தளம் சோர்வுற்றுள்ளது. இந்தச் சோர்விலிருந்து நாம் விடுதலை பெற வேண்டும். எனவே எமது அரசியல் தளம் என்பது நாமே ஏற்படுத்த வேண்டிய தளங்களாகும். ஏற்கனவே எம்மைக் கூறுபடுத்தவென ஆதிக்க சக்திகளால் உருவாக்கப்பட்ட பாராளுமன்றம், நீதிமன்றம், சிறைச்சாலை, அதிகார பீடங்கள் என்னும் அரசும் அதன் ஆளுகையும் அதில் பங்கு பெறுதலும் அதில் ஆர்வப்படுதலும் எனும் ஆதிக்க அரசியலிலிருந்து விடுபட்டு வாழும் அரசியல் மார்க்கங்களைக் கட்டுணர்ந்து அரங்காட வேண்டுவதே மாக்ஸீயர்களின் இக் கணத்தின் கருமமாகும்.

இழக்கப்பட்ட மனித உரிமைகளையும், தொழிற்சங்க உரிமைகளையும் பெறும் மார்க்கம்; இழக்கப்பட்ட கல்வி, சுகாதாரம், பண்பாடு என்பவற்றை மீட்பதற்கான நோக்கமும் செயலும்; சுய பொருளாதாரமும், சுய நம்பிக்கையைக் கட்டி வளர்க்கும் சமூக கட்டமைப்பு என்பன மீட்கப்பட வேண்டுமாயின் எமது தளங்கள் மாற்றப்பட வேண்டும்.

மக்கள் நிதியம் உருவாக வேண்டும், மக்களுக்கான கல்விக்கான வளங்கள், மக்கள் சுகாதாரத்துக்கான முயற்சிகள், மக்கள் விடுதலைக்கான சுய சார்புச் செயல்கள், குழந்தைகளுக்கான பயில்வகங்கள், சொந்த வீடுகள் கட்டுவதற்கான செயல்கள், கடன்களிலிருந்து மீட்டுக் கொள்ளல், புதிய பண்பாடு பற்றிய தேடல்கள், மாற்று கல்வி, மாற்றுச் சுகாதாரம், மாற்றுச் செயன்முறைகள் என்பவற்றை தேடிக் கண்டு கொள்வதன் மூலம் சமூக மாற்றம் பற்றிய கருவை நாம் மக்கள் மத்தியில் பாதுகாக்க வேண்டும். அந்தக் கரு உயிர் பெற்று உருவாக பத்து மாதங்கள் அல்ல பத்து வருடங்கள் செல்லுமெனிலும் பொறுமையாக மகிழ்வாக பிள்ளை பெறும் இன்பம் காண விளையும் தாயைப் போல் பத்தியம் காக்கும் மனப் பக்குவம் பெறுவோம். மக்கள் மத்தியில் அரசியலை விளங்கவைத்து அணிதிரட்டல் செய்வோம்

மக்கள். மக்களே. செய்வோம் மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்திகளாவர்.

மறுமடலில் சிந்திப்போம்

தோழமையுடன் செண்பகன்

# முட்கம்பி வேலிகளுக்கு மத்தியில் 3 லட்சம் மக்களின் அவலம்!

இலங்கையின் வடபுலத்து மக்கள் என்றுமே கண்டிராத துயரத்தின் சோகத்தின் பேரவலத்தின் மத்தியில் இருந்து வருகின்றனர். கடந்த மே மாதம் 18ம் திகதிக்குப் பின் வன்னி நிலப்பரப்பில் மக்கள் ஒருவரது நடமாட்டம் தானும் இல்லை. சுமார் 3 லட்சம் மக்கள் வவுனியா திருகோணமலை மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். உயிரிழப்புகளுக்கு தத்தம் உறவுகளை பலிகொடுத்துவிட்டு தாமும் பட்டினி பசியுடன் மட்டுமன்றி படுகாயங்கள் பட்டு அங்கங்களை இழந்தவர்களாயும் நோய்களால் பீடிக்கப்பட்டும் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். நடைப் பிண வாழ்வாகி முட்கம்பி வேலிகளுக்குள் முடக்கப்பட்டு அடிப்படை வசதிகள் இன்றி கண்ணீர் வெள்ளத்தில் வாழ்ந்து வருகின்றனர். பொருட்கள் யாவும் இழந்து உடுத்த உடைகளுடன் மாறாத உடற்காயங்களுடனும் ஆழமான மனக்காயங்களுடனும் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவற்றுக்கும் அப்பால் விசாரணைகள் தனிமைப்படுத்தல்கள் அவற்றுக்கு அப்பாலும் என்னன்னவோ எல்லாம் இடம் பெறவே செய்கின்றன.



இராணுவக் காவல் நிறைந்த இந்த முட்கம்பி முகாம்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ள பெயர் நிவாரணக் கிராமங்கள் என்பதாகும். கூடாரங்கள் நிறைந்த இந்த முகாம்களில் இடநெருக்கடிகளும் அடிப்படை வசதிகள் பெற முடியாமைகளும் நீடிக்கின்றன. ஓரிரு முகாம்களை சற்றுச் சீரானவையாகச் செய்து அவற்றையே பிரசாரத்திற்கும் வெளியில் இருந்து வருபவர்களுக்கும் காட்டி அரசாங்கம் நல்லபெயர் வாங்கி வருகிறது. ஆனால் ஏனைய முகாம்களின் நிலை மோசமானதும் பரிதாபகரமானவையுமகும். கர்ப்பிணித்தாய்மார், கைக்குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் மற்றும் கடுமையான நோயாளிகள் காயமடைந்து அங்கவீனர்களாகிக் கொண்டவர்கள் படும் அவலங்களும் வேதனைகளும் அழுகைகளும் விபரிக்க முடியாதவைகளாகும். மாற்றுடை இன்றியும் போதிய உணவு பெற முடியாமலும் பல நாட்கள் பட்டினி கிடக்கும் நிலைக்கு மக்கள் ஆளாகினர். சுகாதாரத் தேவைகள் குறைந்தளவிற்குக் கூடப் பூர்த்தி செய்யப்படவில்லை. கல்விச் செயற்பாடுகள் சீரகுலைந்து மாணவர்களின் உடல் நிலைமைகள் கடும் பாதிப்பை பெற்றுள்ளன.

இவ்வாறான அவல வாழ்வு வாழ்ந்து வரும் மூன்று லட்சம் மக்கள் வட மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களை குறிப்பாக கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்தோராவர். கடந்த 3 தசாப்தங்களாக வடக்கு கிழக்கு மக்கள் யுத்தத்தால் ஏற்பட்ட அவலங்களையும் இழப்புக்களையும் தொடர்ந்து அனுபவித்து வந்த போதிலும் அண்மைய மாதங்களில் வன்னி வாழ் மக்கள் சந்தித்த துயரங்களும் இழப்புக்களும் வரலாற்றில் என்றும் கண்டிராவையாகும்.

இன்று அகதிகளாகி ஏதிலிகளாகி எதிர்காலம் பற்றிய அச்சத்துடன் நம்பிக்கையீனத்துடன் இருந்து வரும் மூன்று லட்சம் மக்கள் யார்? இன உணர்வின் பெயரால் இன மேன்மையின் பெயரால் வென்று தருவோம் எமக்குப் பின்னால் வாருங்கள் என்றும் வாக்குறுதிகளும் வீண் நம்பிக்கைகளும் கொடுத்து கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்லப்பட்ட மக்களாவர். தமிழ் இன அடையாளத்தை மட்டுமே உயர்த்திக் காட்டி அவர்களது அன்றாட வாழ்க்கையின் யதார்த்தங்களை மறுத்து வர்க்க நிலைப்பாடுகளை மறைத்து இன உணர்வை இன வெறியாக்கி அதன் மூலம் வெற்றியைச் சாதிக்க முற்பட்டதன் விளைவே இன்றைய அவலத்தின் நிலையாகும். இலங்கையில் வளர்ச்சி பெற்று வந்த பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதற்கும் உரிமைகளை நிலை நிறுத்துவதற்கும் உரிய வழிமுறைகளும் வெகுஜன நிலைப்பட்ட போராட்ட தந்திரோபாயங்களும் இருக்கவே செய்தன. ஆனால் அவையாவும் புறந்தள்ளபட்டு நிராகரிக்கப்பட்ட நிலையில் ஒருவழிப்பாதையால் மக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இவற்றை இப்போது தான் மக்கள் உணரும் நிலை ஏற்பட்டுள்ளது. இவை எதிர்காலத்தில் மிக விரிவான ஜனநாயக கலந்துரையாடல்களுக்கும் மதிப்பீடுகளுக்கும் உள்ளாக்கப்படவேண்டும்

இன்றுள்ள அதிமுக்கியமான கோரிக்கையும் நிலைப்பாடும் இம் மூன்று இலட்சம் மக்களை முட்கம்பி முகாம்களுக்குள் இருந்து மீட்டு அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டியதாகும். அவர்களது புனர்வாழ்வும் புனரமைப்பும் அவசியமானதாகும். இன்று சுதந்திர நடமாட்டத்திற்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் இருந்து வரும் மக்களுக்கு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க இடமளிக்க வேண்டும். விசாரணை, தடுத்து வைப்பு, களையெடுப்பு என்ற உள்நோக்கங்களுக்காக மக்கள் தொடர்ந்து முகாம்களில் வைத்திருப்பது சொந்த நாட்டு மக்களைப் போர்க் கைதிகள் போன்று நடத்துவதாகும், உலக அரங்கில் மனித உரிமைகளையும் மனிதாபிமானச் சட்டங்களையும் தாம் மதித்து நடந்து கொள்வதாக அறிக்கைகளும் உரைகளும் முன்வைத்து வரும் அரசாங்கம் நடைமுறையில் அவற்றுக்கு மதிப்பளித்துச் செயல்படுவதாக இல்லை. இதனை இன்று முடக்கி வைக்கப்பட்டுள்ள வடக்கின் அகதிமுகாம்களில் காணமுடிகிறது. இதனால் தான் அம் முகாம்களுக்கு ஊடகவியலாளர்களோ அன்றி மனித உரிமை ஆர்வலர்களோ சுதந்திரமாகச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இந்நிலையில் எத்தனை நாட்களுக்கு

தொடர்ச்சி 8ம் பக்கம்

## நாமென்ன செய்கின்றோம்?

ஆண்டாண்டு கால அடக்கு முறைக்கெதிராக
மண்டெழுந்த போராட்டம் முடிவின்றி தொடர்கிறது.
நாமென்ன செய்கின்றோம்?
நாமெங்கே செல்கின்றோம்?
ஆராரையோ நம்பிப் போராடப் போனவர்கள்
ஆளுக்கு ஒரு திசையாய் வழிமாறிப் போனார்கள்
ஆரும் அழையாமல் அமைதியினைக் காப்பதற்கு
ஆட்கொண்டு வந்தவர்கள் ஊரை அழித்தார்கள்
அடுப்படியில் நெருப்பணைக்க வந்த அயலவர்கள்
வீடெரியத் தீ மூட்டி விலகியதன் பின்னாலும்
ஆராரோ அந்நியர்கள் அமைதி தர வருவரென
ஆவலுடன் வரவேற்று ஆசையிலே ஏமாந்தோம்
நாமென்ன செய்கின்றோம்?
நாமெங்கே செல்கின்றோம்?
போர் நிறுத்த உடன்பாடு உயிரோடு இருக்கிறதாய்த்
தீர்வுக்குப் பேசுவது பற்றி மிகப் பேசுகிறார்
போரில்லாப் போரொன்றில் ஆளாளாய்க் கொல்லுகிறார்.
அமைதியிலா அமைதியிலே ஊருராய் அழிக்கின்றார்
போர் மூளச் செய்தவரைத் துணைக்கு வரக்
கேட்போமா?
அடக்குமுறை ஆட்சிக்கு ஆயுதங்கள் தந்தவரை
அமைதிக் வழி செய்யப் படையனுப்பக் கேட்போமா?
உலகாரின் போராலே ஊரழியச் செய்வோமா?
நாமென்ன செய்கின்றோம்
நாமெங்கே செல்கின்றோம்?
எதிரிக்கு எதிரி எங்களுக்கு நண்பனென
வாய்ப்பாடு சொல்லாதீர் வீண் வினையைத் தேடாதீர்
முள்ளை எடுப்பதற்கு முள்வேண்டும் என்பதனால்
வாளேந்தும் அந்நியரை வரவழைக்கப் போகாதீர்.
உள்வீட்டுச் சிக்கல்களை களைவதற்கு அந்நியரை
வரவழைத்த கதைகள் பல நிறைந்ததொரு வரலாறும்
அந்நியர்க்கு அடிபணிந்து ஆண்டு பல தேய்ந்ததுவும்
எப்போதும் எம்மனத்தில் நீங்காமல் நினைவிருத்தி
நாமென்ன செய்வோம்?
நாமெங்கு சென்றிடுவோம்?
மக்கள் விடுதலையை மற்றெவரும் தரமாட்டார்
போராட்டம் இல்லாமல் விடுதலைக்கு வழியில்லை
மக்கள் அணிதிரண்டு ஒன்றுபட்டு போராடின்
மக்கள் வரலாற்றை மக்கள் எழுதிடுவர்
நண்பர் எவர் என்றும் பகைவர் எவர் என்றும்
நாம் முதலில் ஆராய்வோம்
எங்கட்குப் பகைவர் சிலர், உலகெங்கும் உளர்
என்றாலும் எங்களது கால்களிலே நிற்போம்
நிலைப்போம்
போராடி நாம் வெல்வோம் புதுவுலகு ஒன்றைக்
காணப் புறப்படுவோம்.

நன்றி: கல்லெறி தூரம்
சி.சிவசேகரம்

# வை.கோ. நெடுமாறன், ராமதாஸ் வகையறாக்களுக்கு ஒரு கடிதம்

"இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும சேர்ந்து வாழ முடியாது. தமிழர் பிரச்சினைக்குத் தமிழீழம் தான் ஒரே தீர்வு. அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஐ.நா. சபையும் தலையிட்டு தமிழீழத்தைப் பெற்றுத்தர வேண்டும்'' இது பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் ராமதாஸின் அண்மைய புலம்பல். "தமிழீழம் தவிர்ந்த எந்தத் தீர்வும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். கருணாநிதியும் மத்திய அரசும் இதனை உணர்ந்து இலங்கையில் தலையிட்டு தமிழீழத்தை உருவாக்க வேண்டும்'' இது பழ. நெடுமாறனின் இழுப்புக் குரல். "தமிழ் நாட்டில் ஆறு கோடி தமிழர்களும் புலிகளாக மாறுவர் அவர்கள் தமிழீழத்தை வென்றெடுப்பார்கள். போராட்டம் முடியவில்லை. இனிமேல் கொழும்பு நிம்மதியாக இருக்க முடியாது.'' இது இயக்குனர் சீமானின் கதைவசனம்.

தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையை விளங்கிக் கொண்டு அதற்கு ஆதரவு தெரிவிக்கும் நியாயபூர்வமான மக்களும் நேர்மையான அரசியல் இயக்கங்களும் இருந்து வந்துள்ளனா் ஆனால் வெறும் இன உணர்வு கொண்ட வக்கிரப் பேச்சுக்களும் வாய்க்கு வந்தபடி வெத்துவேட்டு பேசுபவர்களும் இருக்கிறார்கள். இதில் பதவி அதிகாரத்திற்காக அலையும் திராவிட இயக்க கட்சிகளை சேர்ந்தவர்கள் ஒருபுறம். அதேவேளை மறுபுறம் தமிழ்ச் சினிமாக் கூத்தாடிகள் தமிழீழம் பற்றி பேசுகிறார்கள். இவர்களுக்கு இலங்கை பற்றியோ இலங்கையில் யாழ்ப்பாணம் எங்கே இருக்கிறது முல்லைத்தீவு எங்கே இருக்கிறது என்று கூடத் தெரியாதவர்கள் இச் சினிமாக்காரர்கள். இந்த சினிமாக்காரர்கள் காரியத்தோடு தான் கதைவசனம் பேசுகிறார்கள். புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர்களிடம் சினிமா மூலம் ஈரோவிலும் ஸ்ரேலிங் பவுண்சிலும் டொலரிலும் பணம் கறக்கும் உத்திகளில் ஒன்று தான் இந்தச் சினிமாகாரர்களின் தமிழீழம் பற்றிய வாய்வீச்சுக்கள்.

இவர்கள் இவ்வளவு அக்கறையாக இலங்கைத் தமிழர்களுக்காக அழுது புலம்புகிறார்களே ஒரு முறை தானும் தமிழ் நாட்டில் தஞ்சமடைந்து அங்குள்ள அகதி முகாம்களில் சொல்ல முடியாத வேதனைகளை அனுபவித்து வரும் இலங்கைத் தமிழர்களைத் திரும்பிப் பார்த்தார்களா? தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர்கள் இரண்டாம் தரமாக நடாத்தப்படுகிறார்கள். வசதிபடைத்தோர் நகரங்களில் வசதியாக வாழ்கிறார்கள். ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் முகாம்களில் வாடி வதங்கியே வாழ்ந்து வருகிறார்கள். எத்தனை இலங்கைத் தமிழ்ப் பெண்கள் பொலிசாராலும் அதிகாரிகளாலும் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்பதை தமிழீழ உணர்வாளர்கள் என்ற வை.கோவும் நெடுமாறனும், ராமதாசும், கதைவசனம் வைத்து சினிமா எழுதும் சீமானும் அறிவார்களா?

ஒரு சிறு வேண்டுகோள், பரந்த தமிழ் நாட்டின் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் நீங்கள் ஓலம் வைக்கும் தமிழீழத்தை உருவாக்கி இலங்கைத் தமிழர்களுக்கு அதனைக் கொடுத்து வளமான வாழ்வுக்கு வழி வகுக்கும் ஒரு இயக்கத்தை நடத்த முன் வருவீர்களா? காஷ்மீர் மக்களுக்கோ வடகிழக்கு மாநிலங்களில் வாழும் சிறுபான்மை தேசிய இனங்களுக்கு தனிநாடுகள் அமைக்க இந்திய மத்திய அரசைக் கோருவீர்களா? இலங்கையில் அமெரிக்கா, பிரிட்டன், ஐ.நா.சபை தலையிட வேண்டும் என வாய்ப்பிளக்கும் கனவான்களே அதே சூத்திரத்தை இந்தியாவில் பயன்படுத்துமாறு கேட்பீர்களா? இலங்கையில் இரண்டுமொழிகள் நான்கு தேசிய இனங்கள் நான்கு மதங்கள் என்பனவைகளே இருந்து வருகின்றன. அவற்றின் சமத்துவம் ஐக்கியம் சபீட்சம் போன்றவற்றை இலங்கையின் ஆளும் வர்க்கம் உரியவாறு முன்னெடுத்து வரவில்லை என்பது உண்மை. அதே வேளை இந்தியாவில் இந்தியத் தேசியம் என்ற பெயரில் இனமொழி பிரதேச மதம் சார்ந்த பல்லின இந்திய மக்கள் ஒடுக்கப்படவில்லையா? இந்தியா இறைமையுள்ள சுதந்திர நாடெனில் இலங்கையும் அவ்வாறு தான். இந்தியா துண்டாடப்படக் கூடாது என்றால் இலங்கை இனப்பிரச்சினைக்காக ஏன் துண்டாடப்பட வேண்டும். அவ்வாறு துண்டாடப்படும் தமிழீழம் அமெரிக்காவின் இஸரேலாக இருப்பதையா இந்த தமிழ் நாட்டு வை.கோ. நெடுமாறன், ராமதாஸ் வகையறாக்கள் விரும்புகின்றனர். இவர்கள் இலங்கைத் தமிழர்களின் அயலக நண்பர்களா. அல்லது அமெரிக்க மேற்குலகைக் கூலிகளா? கனவான்களே உங்கள் ஓலத்தால் வெத்து வேட்டுக்களால் நாம் அழிந்து கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டோம். எமது தலைவிதியை நாமே தீர்மானிப்போம். சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஐக்கியப்பட்ட இலங்கையில் தமிழ் மக்கள் சுயாட்சி பெற வேண்டும். அதற்கான வெகுஜனப் போராட்டம் அவசியம். அதனை நாமே முன்னெடுப்போம். அதற்கான அரசியல் தலைமைத்துவம் தமிழ் மக்கள் மத்தியில் இருந்தே உருவாகும். அது அமெரிக்காவிற்கோ இந்தியாவிற்கோ புலம் பெயர்ந்த மேட்டுக்குடி கனவான்களுக்கோ விலைபோகாத உழைக்கும் மக்களது போராட்டமாக சிங்கள மக்களின் ஆதரவும் ஐக்கியமும் பெற்ற இயக்கமாக இருக்கும். அத்தகைய உழைக்கும் மக்கள் தலைமையிலான சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு தமிழக மக்களும் இந்திய மக்களும் நேர்மையான மார்க்சிச லெனினிசக் கட்சிகளும் நிச்சயம் ஆதரவைத் தருவார்கள்.

யாழ்ப்பாணம் க.நடேசமூர்த்தி

# உண்மையும் ஊடகங்களும்

உண்மைகள் தாமாக எங்களை வந்தடைவதில்லை. வந்தாலும் அவை ஏப்போதுமே உண்மைகளாக அடையாளங் காணப்படுவதில்லை. எவ்வாறாயினுஞ் சுதந்திரமான சிந்தனையும் பட்டறிவும் பகுத்தறிவும் ஆற்றலும் உண்மைகளை அடையாளங்காண உதவுகின்றன. அதே வேளை உண்மைகளை அறிய முடியாமல் மறிக்கிற மனத்தடைகள் உள்ளன. பட்டறிவு அந்தத் தடைகளை ஓரளவுக்கேனுந் தகர்க்கிறது. எனினும் உண்மைகளை மக்கள் அறியக்கூடாது என்பதிற் கவனமாக உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உண்மைகளை மக்களிடமிருந்து மறைக்கிறார்கள். மறைக்க இயலாதபோது திரிக்கிறார்கள். திரிக்க இயலாதபோது உண்மையினின்று மக்களின் கவனத்தைத் திசை திருப்புகிற விதமான புனைவுகளைப் படர விடுகிறார்கள்.

நடுநிலை என்று மனிதரிடையே எதுவும் இல்லை. எல்லாச் செய்திகளும் ஏதோ விதமான பக்கச் சார்பு இருக்கும். ஒரு செய்தி எவ்வாறு சொல்லப்படுகிறது, எதற்கு அழுத்தந் தருகிறது, எவற்றைச் சொல்லாமல் விடுகிறது என்பனவற்றைக் கொண்டு ஒரு செய்தியாளரது பக்கச் சார்பை நாம் அடையாளங் காணலாம். எனினும் அதனால் அவர் நேர்மையற்றவரென்றோ பொய்யரென்றோ சொல்ல இயலாது. ஒருவர் தனது கவனத்திற்குரியதையும் தனது கண்ணிற் செய்திப் பெறுமானமுள்ளதாகத் தெரிவதையும் முக்கியப்படுத்துவது இயல்பான நடத்தை. அதனைத் தாண்டி வேறு கோணங்களிலிருந்தும் ஒரு தகவலைக் காணுவதற்கு நல்ல மனப்பயிற்சி தேவை. நமது ஊடகங்களில் வருகிற செய்திகள் முக்கியமாக அண்மைக் காலத்தில் பிரபல தமிழ் நாளேடுகளில் வருகின்றவை பலவும், மனப் பிறழ்வுக்குட்பட்டவர்களாலே வழங்கப்படுகின்றனவா என்று ஐயப்பட வேண்டிய விதமாக அமைந்துள்ளன. விடுதலைப் புலிகள் இழப்புக்களுடன் பின்வாங்கிக் கொண்டிருந்த சூழ்நிலைகளிற் கூட, அவர்களது தோல்விகளைப் பூசி மெழுகுகிற விதமாகவே தமிழ் நாளேடுகள் செய்தி வெளியிட்டன. விடுதலைப்புலிகளின் தோல்வி நிச்சயமான நாட்களிற் கூட ஐ.நா. தலையிடும், ஒபாமா தலையிடுவார். கிளின்ற்றன் தலையிடுவார். பிரிட்டன் உட்பட ஐரோப்பா தலையிடும். அரசாங்கத்துடன் திரை மறைவிலான பேரங்கள் மூலம் விடுதலைப் புலிகளின் தலைமை தப்ப வைக்கப்படும் என்கிற விதமான கதைகளே திரும்பத் திரும்ப கூறப்பட்டன.

எந்தப்பொய்யை மக்கள் நம்புகிற விதமாகச் சொன்னால் மக்கள் விரும்பி வாங்கி வாசிப்பார்களோ அந்த விதமான பொய்களே வெவ்வேறு வடிவங்களிற் கொட்டை எழுத்துத் தலைப்புக்களுடன் வழங்கப்பட்டன. மக்களுக்கு உண்மையை அறியும் உரிமை இருப்பதாக நமது பத்திரிகை நிறுவனங்கள் நம்பவில்லை என்றே நம்ப இடம் உண்டு.

விடுதலைப்புலிகளின் தோல்விகதுப் பிறகும் இந்திய அரசு தமிழக அரசியல்வாதிகள் அமெரிக்கா என்று பலவிதமான பொய் நம்பிக்கைகளே திரும்பத் திரும்ப மக்களுக்கு கூறப்பட்டு வருகின்றன.

இவற்றில் எவையுமே தமிழரின் புண்பட்ட மனத்தைத் தேற்றுவதற்கானவையல்ல. மாறாகப் பொய் நம்பிக்கைகளையும் தமிழ்த் தேசியவாதக் கனவுகளையும் வைத்து வளர்த்த ஒரு பத்திரிகை வயாபாரத்தை மேலும் லாபகரமானதாகக் கொண்டு நடத்துகிற கீழ்த்தரமான வணிக உத்திகளே இவை. இவற்றின் மூலம் தமிழர் தமது உண்மையான நிலைமையை உணர்ந்து செயற்படுவது மறிக்கப் படுகிறது. யாரோ ஒரு ரட்சகர் வெளியிலிருந்து வந்து காப்பாற்றுவார் என்கிற மயக்கம் திட்டமிட்ட முறையிற் பரப்பப்படுகிறது. அதைவிடவும்,தமிழ் மக்களிடையே மதிப்பும் மரியாதையுங் கெட்டு அரசியல் அரங்கிலிருந்து வெளியேற்றப்பட்டுச் சனநாயகமற்ற ஒரு சூழலில் சந்தர்ப்பவாதக் கூட்டணிகள் மூலம் பாராளுமன்றம் பதவி பெற்றவர்களையும் ...ற அரசியற் செல்லாக்காசுகளையும் மறுபடியும் அரங்கேற்றி இந்தியாவின் முகவர்களாக்குகிற காரியத்திலும் ஒரு ஊடகம் தீவிரமாக உள்ளது.

சில நாளேடுகள் திட்டமிட்ட முறையில் இடதுசாரிகள் முன்வைக்கின்ற பயனுள்ள கருத்துக்களையும் அறிக்கைகளையும் இருட்டடித்து வந்துள்ளன. மறுபுறம் மக்களுக்குக் கேடான மூடநம்பிக்கைகளையும் தவறான சமூக விழுமியங்களையும் ஊக்குவிக்கிற விதமான விடயங்களாற் பக்கங்களை நிரப்புகின்றன.

பத்திரிகையாளர்கள் எல்லாரும் இவ்வாறான கீழ்த்தரமான பத்திரிகை நடத்தைக்கு உடன் பாடானவர்கள் அல்லர். அவர்கள் பெரும்பாலும் நல்லவர்கள் ஆனால் தவறுகளை எதிர்க்கத் தயங்குகிறார்கள். தமிழ்ப் பத்திரிகை நிறுவனங்கள் சில தமது ஊழியர்களின் நலன் பற்றியோ பாதுகாப்புப் பற்றியோ துளியளவும் அக்கறையற்றவையாகவே இருந்து வந்துள்ளன. இந்த விதமான அடிமை நிலையை வெல்லாமற் தமிழ் நாளேடுகளால் மக்களுக்குப் பயனுள்ள பணியாற்ற முடியாது.

தமிழ் நாளேடுகள் பற்றித் தமிழ் மக்கள் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் இருந்தனர். அண்மைய சில ஆண்டுகள் அந்த எதிர்பார்ப்பில் மண்ணை அள்ளிப் போட்டு விட்டன. பத்திரிகை முதலாளிமார்களுக்கு அது பற்றி அக்கறை இருக்குமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. பத்திரிகையாளர்கள் உறுதியுடனும் நேர்மையுடனும் சமூகப் பயனுள்ள முறையில் செய்திகளை வெளியிடத் துணிவார்களேயானால் தமிழ் ஊடகங்கள் தலை நிமிரும். தமிழ்ச் சமூகமும் தலைநிமிரும்.

மணி


# சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடையும் இலங்கை அரசாங்கம்

ஐ.எம்.எவ் எனப்படும் சர்வதேச நாணய நிதியத்திடம் கோரிய 190 கோடி டொலர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக இக் குறிப்பு எழுதிக்கொண்டிருக்கும்போது தகவல்கள் வெளியாகியிருந்தன. எவ்வாறாயினும் இத்தொகை முழுவதும் ஒரே சமயத்தில் வழங்கப்படமாட்டாது என்பது உறுதியாகக் கூற முடியும். ச.நா.நிதியத்திடமிருந்து பெறப்படும் தொகையானது வடக்கு கிழக்கு புனரமைப்புக்கும் மீள் கட்டமைப்புக்கும் பயன்படுத்தப்படுமென சில அரசாங்க அரசியல் வாதிகள் கூறுவது ஒன்றில் ஐ.எம்.எவ் எந்தக் காரணத்திற்காக வசதி செய்து கொடுக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாமையாலோ அல்லது மக்களை முட்டாள்களாக கணிப்பிடுவதோலா என்பதாகும். ச.நா. நிதியம் நீண்டகால வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குவதில்லை. அன்னியச் செலாவணி நெருக்கடியிலிருந்தும் கொடுப்பனவு மிகுதி நெருக்கடியிலிருந்தும் மீட்சி பெறுவதற்கே ஐ.எம்.எவ். நிதி வழங்குகிறது. இதிலிருந்து நாம் ஒன்றை விளங்கிக்கொள்ளலாம். அரசு கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கையானது இந்த இக்கட்டான நிலைக்கு கொண்டு சென்றுள்ளதே உண்மை நிலையாகும். உலக வங்கியே நீண்டகால வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குகின்றது என்பதை நாம் விளங்கிக் கொண்டால் அரசின் பொய்ப்பிரசாரத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

இந்த நிதி வழங்கலானது நிபந்தகைள் அற்றதெனக் கூறமுடியாது. முன்புபோல் தனியார் மயப்படுத்தலுக்கு அழுத்தம் இல்லை. முதலாளித்துவ நாடுகள் தற்சமயம் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக அரச தலையீட்டில் ஈடுபட்டிருப்பதே அதற்கான காரணம்.

எவ்வாறாயினும் ஐ.எம்.எவ். நிபந்தனைகளை முன் கூட்டியே நிறைவேற்றும் நோக்குடனேயே நாணயம் மதிப்பிறக்கப்பட்டுள்ளது. இறக்குமதிகள் மீது இருந்த தடைகள் தளர்த்தப்பட்டுள்ளன. உள்நாட்டு உற்பத்தியைப் பாதிக்கும் என்ற போதும் ஐ.எம்.எவ்வின் நிபந்தனை நிறைவேற்றப்பட்டுள்ளது. பல இறக்குமதிப் பண்டங்களுக்கு இறக்குமதித் தீர்வைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இறக்குமதி-ஏற்றுமதிக்கிடையேயான பற்றாக்குறையை குறைந்த மட்டத்தில் வைப்பதன் மூலம் பெறப்படும் கடனுக்கான நிபந்தனைகள் நிறைவேற்றப்படுகின்றன. அரசாங்கம் தனது செலவீனங்களை மட்டுப்படுத்தி நிதிச் செயற்பாட்டை கட்டுக்குள் வைத்திருந்தால் மட்டுமே கோரிய கடனின் முழுத்தொகையும் கட்டம் கட்டமாகப் பெற முடியும். கொடுக்கப்படும் பணத்தை உரிய முறையில் செலவிடுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே கட்டம் கட்டமாக நிதி வழங்கப்படவுள்ளது. நமது நாட்டில் நிலவும் பொருளாதா நெருக்கடிக்கு முதலாளித்துவ உலகப் பொருளாதார நெருக்கடி மட்டும் தான் காரணமல்ல. உள்நாட்டு யுத்தத்தின் மூலம் நாட்டின் பொருளாதார நெருக்கடி மோசமடைந்ததென்பதே உண்மையாகும். ஆசிய நாடுகளில் சீனாவையும் இந்தியாவையும் தவிர்த்தால் ஏனைய

தொடர்ச்சி 10ம் பக்கத்தில்




# வவுனியாவில் இடம் பெற்ற மேதினக் கருத்தரங்கு

**வவுனியாவில் மே தினக் கருத்தரங்கு** மூத்த தோழர் இ.கா. சூடாமணி தலைமையில் 01.05.2009 அன்று நடைபெற்றது. புதிய ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். அங்குள்ள அசாதாரணச் சூழலில் மேற்படி மேதினம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்றது. மூத்த தோழர். சூடாமணி தலைமையுரையில் பின் வருமாறு கூறினார். “இன்று நமது நாடு அந்நிய ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளின் வேட்டைக்காடாக மாறியுள்ளது. தமிழ் மக்களோடு அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள மறுக்கும் அரசாங்கம் மேலாதிக்க வா்திகளுக்கு நாட்டை தாரை வார்ப்பதில் முன்னிற்கிறது. இந்த நிலையை மறைப்பதற்காக யுத்தம் செய்து அப்பாவிப் பொது மக்களை வகை தொகையின்றி கொள்றொழிக்கின்றது. பல ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தும் காயமடைந்தும் உள்ளனர். கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. லட்சக்கணக்கானோர் சொத்திழந்து சுகமிழந்து அநாதைகளாக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அரசு பேரினவாத அகங்காரத்துடன் செயற்பட்டுகின்றது. தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி சிறிதளவேனினும் அக்கறை காட்டுவதாய் இல்லை” என்றும் கூறினார். அடுத்து உரையாற்றிய தோழர் . சி.பாலசங்கரன் அரசு தொழிலாளரின் உரிமைகளை நசுக்குவதற்கும் தொழிலாளர் ஐக்கியத்தை குலைப்பதற்கும் இந்த போரைப் பயன்படுத்துகிறது. போரை முதன்மைப்படுத்தி தொழிலாளரின் பிரச்சினை எதுமே இல்லை என்பதாக ஏமாற்றுகிறது. தொழிலாளர்களுக்காக குரல் கொடுக்கும் அனைவரும் புலிப் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு சிறைவைக்கப்படுகின்றனர். அரசுக் கெதிராகக் கருத்து வெளியிடுவது தேசத்துரோகம் என்று சாதாரண பொதுமக்கள் கருதுமளவிற்கு அரசு மக்களை யுத்தத்தைக் காட்டி அச்சுறுத்தி வருகிறது. விலைவாசி உயர்வாலும் வேலை இன்மையாலும் பொது மக்கள் வாழ்க்கை மேன் மேலும் துயரமாக மாறி வருகிறது. தொழிலாளர் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. சாதாரண மக்களின் வரிப்பணம் கோடீஸ்வரா்களின் நட்டத்துக்கு இழப்பீடு செய்யப்படுகின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் நடைபெறும் அரசுக்கெதிராண போராட்டம் பொது மக்களுக்கெதிரான பயங்கரவாதப் போராட்டம் என கூறி மேலாதிக்க நாடுகள் ஏனைய முதலாளித்துவ இனவாத, பிற்போக்கு அரசுகளுக்கு ஆதரவு வழங்கிவருகின்றன. விடுதலை இயக்கங்களை தமக்கு ஏற்றபவகையில் போசித்து வளர்த்தும் தமக்கு ஏதிரானவற்றை ஏதிர்த்தும் வருகின்றன. இலங்கை அரசுக் கெதிரான தமிழினப் போராட்டத்தை இந்தியா தனது தேவைக்கு ஏற்ப பல வேறுபட்ட இயக்கங்களுக்கும் உதவி அளித்து அரசை தனக்குப் பணிய வைத்தபின் அரசுக்கு உதவி அளித்து வருகின்றது. அல்கைதா, தலிபான் போன்ற இயக்கங்களை அமெரிக்கா தனது தேவைக்காக உருவாக்கி தற்போது அழிப்பதற்கு கங்கணம் கட்டி நிற்கின்றது. மேலாதிக்க அரசுகள் விடுதலை இயக்கங்களுக்கு உதவுவது மனிதாபிமானத்தை பாதுகாப்பதற்காக அல்ல. தமது மேலாதிக்கத்தைப் பரப்புவதற்காகவே என்பதை எம் மண்ணில் மீண்டும் ஒருதடவை எமது அனுபவமாக்கியுள்ளது. ஆனால் இதனைத் தமிழ் மக்கள் ஒரு பாடமாகக் கற்பதற்கு மறுத்தே வருகின்றனர்.

இதற்கான முதன்மைக் காரணம் போராட்டத்தின் வர்க்கத்தன்மை பற்றிய கண்ணோட்டம் இல்லாமையாகும். நம்மை அடக்கும் அரசின் வா்க்கத்தன்மை பற்றியும் அதற்கெதிரான வா்க்கங்களை போராட்டத்தில் இணைப்பது பற்றியும் வா்க்க ரீதியான பார்வை இல்லாமையுமாகும். ஆகவே வா்க்க ரீதியான ஐக்கியப்பட்ட போரட்டத்தின் மூலமே அடக்கப்படும் மக்கள் விடுதலை பெறமுடியும் என்பதை எமது போராட்ட வரலாறு கற்பிக்கின்றது. கருத்தரங்கில் கலந்து கொண்டோரும் தத்தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

முட்கம்பி வேலிகளுக்கு
7ம் பக்க தொடர்ச்சி

இந்த அவலத்திற்குள் மக்கள் விடப் படப் போகிறார்களோ என்ற அச்சம் நிலவுகிறது. 180 நாட் திட்டத்தின் ஊடாக மீள் குடியேற்றம் இடம் பெறும் என அமைச்சர்கள் கூறி வருகிறார்கள். ஆனால் இராணுவ நிர்வாகமே சகலவற்றையும் தீர்மானிக்கும் நிலையே காணப்படுகிறது.

இவ்வாறு அகதிமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் வெறுமனே தமிழர்கள் என்ற இன அடையாளத்திற்கும் அப்பால் மிகச் சிறந்த உழைப்பாளிகளான விவசாயிகளும் தொழிலாளர்களும் ஆவர். அரசாங்க - தனியார் துறை ஊழியர்களாகவும் வாழ்ந்து வந்தவா்கள். வன்னி மண்ணின் வளத்தைப் பெருக்கி தமது சொந்த உழைப்பால் நிலபுலங்களையும் வீடு வாசல்களையும் கொண்டிருந்தவர்கள். அவர்களது வீடுகள் வயல் நிலங்கள் இன்று அழிவுக்குள்ளாகி வளர்த்து வந்த மாடுகள் ஆடுகள் யாவும் அலைய விடப்பட்டுள்ளன. வளவு வாய்க்கால்கள் தூர்ந்து போயுள்ளன. ஒட்டு மொத்தமாக அவர்களது வாழ்வும் வளங்களும் எதிர்காலமும் சிதைக்கப்பட்டு இருளடைந்தவைகளாகவே காணப்படுகின்றன.

இவற்றுக்காக விதியை நோவதும் நமக்கு அளந்தது இவ்வளவு தான் என்று ஏங்குவதும் அர்த்தமற்றதாகும். இன்றைய பேரவல நிலைக்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் உண்டு. அவை பற்றி இன்று இல்லாவிடினும் விரைவில் தானும் சரியான அரசியல் சிந்தனைக்கு மக்கள் வந்தாக வேண்டும். ஒன்று இந்த நாட்டில் வளர்க்கப்பட்டு வந்த இன முரண்பாடும் அதன் காரணமான ஆளும் பேரினவாத ஒடுக்கு முறையுமாகும். இரண்டாவது அதனை எதிர்த்து அரசியல் முன்னெடுப்பதாகக் கூறி வந்த தமிழ்த் தேசியவாதத் தலைமைகளின் தவறான கொள்கை அணுகு முறைகளும் தூரநோக்கற்ற போராட்டத் தந்திரோபாயங்களுமாகும். இவ்விரண்டு அடிப்படை அம்சங்களும் உரியவாறு விவாதங்களுக்கும் உரையாடல்களுக்கும் உள்ளாக்கப்படல் வேண்டும். அதன் மூலமே கடந்தகால தமிழ்த் தேசிய வாத அரசியலின் தவறுகள் இயலாமைகள் அவற்றின் மூலம் வடக்கு கிழக்கு மக்கள் எதிர்கொண்ட துயரங்கள் இழப்புக்கள் அழிவுகள் பற்றிய சரியான மதிப்பீடுகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். எவ்வாறாயினும் இன்று உடனடியான தேவையும் கோரிக்கையும் மூன்று லட்சம் மக்கள் முட்கம்பி வேலிகளுக்கு மத்தியில் உள்ள தடுப்பு முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்பதாகும். அவர்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவும் அதற்குரிய புனர்வாழ்வு புனரமைப்புச் செயற்பாடுகள் திட்டமிட்ட வழகளில் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதுமாகும். இதற்கான சமூக நீதிக்குரல்களும் கோரிக்கைகளும் முன்வைக்கப்படுவது அவசியத் தேவையாகும். அது தமிழ்மக்கள் மத்தியிலிருந்து மட்டுமன்றி சிங்கள மக்கள் மத்தியிலிருந்தும் முன்வைக்கப்படல் வேண்டும்.

நிலவன்

# யுத்த வெற்றியும் போராட்டத் தோல்வியும்

கடந்த மே மாதம் 19ம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யுத்தம் முடிந்து விட்டதாகவும் பயங்கரவாதம் அழிக்கப்பட்டு விட்டதெனவும் பிரகடனம் செய்து கொண்டார். அதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால் இறுதிப் போர் முனையில் இருந்து புலிகள் இயக்கம் தமது துப்பாக்கிகளை மௌனிக்கச் செய்து விட்டதாகவும் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகவும் அமெரிக்காவின் ஒபாமா நிர்வாகத்திற்கும் பிரித்தானியாவிற்கும் தெரியப்படுத்தினர். அதன் மூலம் அவர்கள் முன்னெடுத்த நான்காம் கட்ட ஈழப் போர் முடிவுக்கு வந்துள்ளதையும் தமிழீழத்திற்கான போராட்டம் தோல்வியடைந்தமையும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அத்துடன் வே. பிரபாகரன் உட்பட புலிகளின் தலைமை முற்றாக அழிக்கப்பட்டதையும் அரசாங்கம் அறிவித்தது. இத்தகைய வெற்றிக்கான அறிவிப்பும் தோல்விக்கான செய்தியும் உள்நாட்டிலும் உலக நாடுகளிலும் பல்வேறு கோணங்களில் இருந்தும் நோக்கப்பட்டது. ஒவ்வொரு தரப்பு அரசியல் விமர்சகர்களும் ஆய்வாரளர்களும் தத்தமக்குரிய வர்க்க இன அரசியல் கண்ணோட்டங்களில் இருந்தே இதனை அணுகிக் கொண்டனர். இந்தியா அமெரிக்கா ஐரோப்பா உள்ளிட்ட நாடுகள் யாவும் தத்தமது ஆதிக்கப் பிடி அல்லது செல்வாக்குச் செலுத்தும் சர்வதேச காய்நகர்த்தல் போட்டி அடிப்படையிலேயே இவற்றை அணுகிக் கொண்டன. இறுதியான யுத்த கால கட்டத்தில் மட்டுமன்றி அந் நாடுகள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை யுத்தமாக்கிய கைங்கரியம் தொட்டு மூன்று தசாப்த காலத்தில் அதனை அவ்வப்போது வளர்த்து இன்றைய நிலைக்கு கொண்டு வந்து விட்டமை வரை தத்தமது உலக- பிராந்திய மேலாதிக்க அடிப்படையிலேயே செயலாற்றி வந்துள்ளன என்பது நோக்குதற்குரியதாகும்.

இந்த யுத்தத்தின் வெற்றி தெற்கிலே மிகப் பெரும் வெற்றியாகக் கொண்டாடப்பட்டது. தமது சொந்த நாட்டு மக்களில் ஒரு பிரிவினரான பல ஆயிரம் தமிழ் மக்களைக் கொன்றழித்தும் படுகாயங்களுக்கு ஆட்படுத்தியும் பசி பட்டினி கிடக்கச் செய்தும் கடுமையான தரை கடல் ஆகாய தாக்குதல்கள் நடாத்தியே அரசாங்கத்தினால் மேற்படி வெற்றி பெறப்பட்டிருக்கிறது. அதேவேளை ஆயுத பலம் கொண்டு அரச படைகளைத் தாக்கி அழிக்கும் வல்லமை மிக்கதெனக் கூறப்பட்ட புலிகள் இயக்கம் பல முனைகளாலும் முறியடிக்கப்பட்டிருக்கிறது. இந்த வெற்றியில் இந்தியாவின் முக்கிய பங்களிப்பும் ஏனைய நாடுகள் பலவற்றின் ஒத்துழைப்புகளும் இருந்து வந்துள்ளமை எதுவும் இரகசியமானவை அல்ல.

இலங்கை அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் அதன் ஆயுதப் படைகளும் ஏற்கனவே இலங்கையில் இடம்பெற்ற இரு தடவையிலான ஆயுதக் கிளர்ச்சியை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்த முன் அனுபவங் கொண்டதென்பது மீள் நினைவிற்கு உரியது. 1971இலும் 1988-1989இலும் ஜே.வி.பி முன்னெடுத்த ஆயுதக் கிளர்ச்சிகளை இலங்கையின் ஆயுதப் படையினர் முறியடித்து வெற்றி கண்டனர். அந்தக் கிளர்ச்சிகளில் கொன்றழிக்கப்பட்டவர்களான இளைஞர்கள் யுவதிகள் மக்கள் முற்றிலும் சிங்கள மக்களாகவே இருந்தனர். முதலாவது கிளர்ச்சியின் போது சுமார் இருபதினாயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர். இரண்டாவது கிளர்ச்சியின் போது சுமார் அறுபதினாயிரத்திற்கும் மேற்பட்டோர் அழிக்கப்பட்டனர். மேலும் பல ஆயிரம் பேர் காணாமற் போயினர். அன்றைய கிளர்ச்சிகளை இலங்கையின் ஆயுதப் படையினர் அடக்கி ஒடுக்கிய போது பௌத்த சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக எவரும் விட்டு வைக்கப்படவில்லை. முற்றிலும் ஆளும் வர்க்க வன்மத்துடனேயே அவ் இரத்தக் குளிப்பு நடத்தப்பட்டது. ஆனால் தற்போதைய யுத்தத்தில் வர்க்க வன்மத்துடன் பேரினவத வன்மமும் இணைந்து இருந்தமை தான் கவனத்திற்குரியதாகும். அன்றும் இந்தியாவும் ஏனைய நாடுகளும் அரசாங்கங்களுக்குப் பக்க பலமாகவே இருந்து வந்தன என்பதும் நினைவுக்குரியது.

ஏற்கனவே இடம்பெற்ற கிளர்ச்சிகள் அடக்கப்பட்டு வெற்றி கொள்ளப்பட்ட இரு சந்தர்ப்பங்களிலும் எந்தவித வெற்றி விழாக்களும் நடத்தப்படவில்லை. ஏனெனில் அவ் அடக்கு முறையால் சிங்கள மக்களே முழுமையாகப் பாதிக்கப்பட்டு சோகத்திலும் வேதனையிலும் மூழ்கி இருந்தனர். ஆனால் இன்றைய நிலை தமிழ் மக்கள் மத்தியில் இருந்து தான் யுத்த வெற்றி எனப்படுவது வெற்றி கொள்ளப்பட்டிருக்கிறது. அதனால் தான் துட்டகைமுனு, விஜயபாகு, பராக்கிரமபாகு போன்ற மன்னர்களுடன் மகிந்த ராஜபக்ஷ ஒப்பிடப்பட்டு புகழாரங்கள் சூட்டப்படுகிறார். அதேவேளை தோல்வியுற்ற புலிகள் இயக்கமும் அதன் தலைவர் பிரபாகரனும் சோழ மன்னனான எல்லாளனுடன் வைத்துப் பார்க்கப்படுகிறது. நிலவுடைமைக் கால மன்னர்களும் அவர்களது ஆட்சி ஆதிக்க நிலை நிறுத்தல்களுக்கான யுத்தங்களும் இன்றுவரை சிங்கள தமிழ் மக்களைத் திசை திருப்பி வைத்திருப்பதற்கு ஒரு எண்ணக்கருவாகப் பயன்படுத்தப்டும் அவலநிலை அரசியல் ரீதியாக இரு தரப்பு மக்களிடையேயும் உணரப்படாமை தான் இலங்கையின் இன்றைய சோகமாகும். சிங்கள் மக்கள் மத்தியில் பாராளுமன்ற

**வெற்றி என்பது உழைக்கும் சிங்கள மக்களுக்குரியதல்ல. தோல்வி தமிழ் மக்களை சிந்திக்கவைக்கிறது.**

**- சண்முகம் -**

ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளவும் தொடர்ந்து அதனைத்தக்க வைத்துக் கொள்ளவும் துட்டகைமுனுவும் கஜபாகும் பேரினவாத முதலாளி த்துவ ஆளும் வர்க்கத்திற்குத் தேவையாக உள்ளது. அவ்வாறே தமிழ் மக்கள் மத்தியில் சோழர் காலத்தைக் காட்டி ஆண்ட பரம்பரைக் கதைகள் பேசித் தமது அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி தமிழீழத்தை வென்றெடுக்க முனைந்த போக்கையும் காண முடிந்தது.

இவ்விடத்திலே முக்கிய விடயம் ஒன்று சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும். பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கத் தரப்பில் இருந்தும் போராட்டத்தை முன்னெடுப்பதாகக் கூறி நின்ற தமிழ்த் தேசியவாத தரப்பிலிருந்தும் இன்றைய நவ கொலனிய அமைப்பு முறை உணரப்படவில்லை. மேலும் ஏகாதிபத்திய ஊடுருவல்கள் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலினூடாக உட்புகுத்தப்பட்டதை இரு தரப்புமே ஏற்றுக் கொண்டன. இந்திய பிராந்திய மேலாதிக்கத்தின் பிடிகளுக்கான அடிப்படைகள் புகுத்தப்பட்ட போது அவற்றின் எதிர்கால அபாயங்கள் பற்றி அக்கறைப்படுத்தப்படவில்லை. இறுதி யுத்த சூழலில் கூட இரு தரப்புக்களுமே தத்தமது நிலைநின்று அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்தியத்தையோ அன்றி இந்திய மேலாதிக்கத்தையோ எதிர்க்கத் துணியவில்லை. அதனால் தான் மூன்று தசாப்த கால தேசிய இனப் பிரச்சினை காரணமான யுத்தத்தில் உலக - பிராந்திய மேலாதிக்க சக்திகள் ஒரு தரப்பாகச் செயற்பட்டு வந்திருக்கின்றன என்ற உண்மை மேன்மேலும் துலக்கம் பெற்றுள்ளது. இதற்குப் பின்பும் தமிழ் தேசியவாதிகளும் அவர்களை நியாயப்படுத்தும் அரசியல் விமர்சகர்களும் ஆய்வாரள்களும் என்ன கூறப் போகிறார்கள். இரண்டு கைகளைக் கொண்டு இரண்டு கண்களை மறைக்க முடியுமே தவிர நிலாவை மறைக்க முடியாதது போன்றதே யதார்த்தங்களை மறைக்க முற்படும் தமிழ்த் தேசியவாதிகளின் அணுகு முறையாகும்.

மேலும் இவ் வெற்றி தோல்வி சிங்கள தமிழ் தேசிய இனங்களின் மத்தியில் வேறுபட்ட உணர்வலைகளையும் கண்ணோட்டங்களையும் உருவாக்கி உள்ளன. முழுச் சிங்கள மக்களுமே வெற்றிக் களிப்பில் உள்ளனர் என்று கூற முடியாது. ஆனால் பொதுவான மௌனம் பெரும்பாலான சிங்கள மக்கள் மத்தியில் நிலவியது. அது முழுமையான சம்மதத்தின் அறிகுறி என்று கூறிக் கொள்ள இயலாது. ஆனால் அரசாங்கம் 2006ம் ஆண்டு மாவிலாறு அணையைக் கைப்பற்றி விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து தண்ணீரை விவசாயிகளுக்கும் விவசாய நிலங்களுக்கும் கையளித்த நிகழ்வு முக்கியமான திருப்புமுனையாகும். அதனை பயங்கரவாத நடவடிக்கைக்கு எதிரான ஆரம்பம் என்று அரசாங்கம் முன்வைத்த நிலைப்பாட்டை சிங்கள மக்கள் மட்டுமன்றி தமிழ் முஸ்லீம் மக்களில் பலரும் ஏற்றுக் கொண்டனர். அதுமட்டுமன்றி புலிகள் இயக்கம் ஆரம்பம் முதல் சிங்கள மக்கள் மீதான அரசியல் அணுகுமுறையில் கைக்கொண்ட குறுந்தேசியவாத அகங்காரப் போக்கும் குடிமக்கள் மீதான கண்மூடித்தனமிக்க தாக்குதல்களும் பயங்கரவாதம் என்ற அரசாங்கத்தின் நிலைக்கு சிங்கள மக்கள் முழு ஆதரவு கொடுக்கும் நிலையை வலுப்படுத்தியது. அதே வேளை சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முற்போக்கு ஜனநாயக இடதுசாரி சக்திகளுக்கும் ஊடகங்களுக்கும் அச்சுறுத்தல்களும் அடக்கு முறைகளும் ஏவப்பட்டதனால் அவர்களது குரல்கள் உள்ளடங்கிக் கொண்டன. அதனால் இலங்கையின் ஜனநாயக மனித உரிமை நிலைகள் மிகப் பெரும் பலவீனததையும் பின்னடைவையும் கண்டன.

அதேவேளை தமிழ் மக்கள் மத்தியில் என்றுமில்லாத வராலாற்றுத் துயரங்களையும் சோகங்களையும் இப் போராட்டத்தின் தோல்வி ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள விரக்தி நம்பிக்கையீனம் எதிர்காலம் பற்றிய அச்சம் பீதி என்பன எங்கும் விரவி நிற்பதைக் காண முடிகிறது. இதற்குப் புலிகள் இயக்கம் மட்டுமன்றி தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமைத்துவமும் கொள்கை வழிகாட்டலும் தருவதாகக் கூறி நின்ற அனைத்துத் தமிழ் தேசியவதக் கட்சிகளும் இளைஞர் அமைப்புக்களுமே பிரதான பொறுப்புதாரிகளாவர். பாராளுமன்றப் பாதையிலும் பின்பு ஆயுதப் போராட்டப் பயணத்திலும் போலியான வாக்குறுதிகளையும் ஆயுதங்களையும் முதன்மைப்படுத்திய வீரதீர இளைஞர்களையும் நம்பிச் சென்றே இன்று நிர்க்கதிக்குள்ளாகிய நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர். ஆரம்பம் முதலே தமிழ் மக்கள் மத்தியில் மாக்ஸசிச லெனினிச வாதிகள் இடதுசாரிகள் முன்வைத்த அரசியல் கருத்துக்களை தமிழ் தேசியவாதிகள் கவனத்தில் கொள்ள மறுத்தனர். மாக்ஸிச லெனினிச இடதுசாரிக் கொள்கைகளும் அவற்றை முன்னெடுத்த கட்சிகள் பொது அமைப்புகள் தமிழ்த் தேசிய பழைமைவாத அரசியல் சக்திகளால் மூர்க்கத்தனமாக எதிர்க்கப்பட்டன. துரோக சக்திகள் என்று கூடக் காட்ட முற்பட்டனர். இன்றைய அவல நிலையில் கூட இவர்கள் தமது தவறுகளை ஒப்புக் கொள்ளும் நிலையில் இருக்க மாட்டார்கள். ஏனெனில் அது அவர்களது மேட்டுக்குடி உயர்வர்க்க நிலைப்பாடாகும். ஆனால் நம்பிச் சென்று ஏமாற்றப்பட்டு அழிவுகளை அனுபவித்த மக்கள் தான் தமது தவறான பின்பற்றல்களையிட்டு பட்டறிவுடன் மீளாய்வு செய்து சரியான அரசியல் மார்க்கத்தைத் தேட வேண்டியுள்ளது. தோல்வி இடம்பெறக் கூடியதாயினும் அதிலிருந்து உரியவாறு அரசியல் வரலாற்றுப் பாடத்தையும் பட்டறிவையும் பெற்றால் உரிய சுயவிமர்சனங்களைச் செய்தால் தோல்வியை வெற்றியின் தாயாக்க முடியும். அது வரலாற்றால் நிராகரிக்கப்பட்ட தமிழீழம் என்ற பிரிவினைவாதத்தையும் தந்திரோபாயமற்ற அரசியல் இராணுவப் போராட்டத்தையும் தமிழர் குறுந்தேசியவாத ஆதிக்க அரசியலையும் மீளமைப்பதற்கு அல்ல என்பது தெளிவுடன் புரியப்பட வேண்டும்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

ஐக்கியப்பட்ட
4ம் பக்க தொடர்ச்சி

அன்று வடக்கிலே எழுச்சிப் பெற்ற புரட்சிகர வெகுஜன அரசியல் போராட்டங்களை மழுங்கடித்து பிற்போக்கு தமிழர் தலைமைகள் குறுந்தேசியவாதத்திற்குப் பின்னால் தமிழ் மக்களை இழுத்துச் சென்றனர். அப்போது அதை அரசியல் ரீதியில் விமர்சித்து ஒட்டுமொத்த அடக்கு முறைகளுக்கும் எதிரான வெகுஜன அரசியல் போராட்டங்களை முன்னெடுக்க முற்பட்ட போது தமிழ் தேசியவாதிகளால் துரோகிகள் என பெயரிடப்பட்டு உயிர் அச்சுறுத்தலகளுக்கு ஆளாக்கப்பட்டோம். அவற்றுக்கு எமது கட்சி முகம் கொடுத்து நின்றது. யுத்தத்திற்கு எதிராகவும் லட்சக்கணக்கான மக்கள் படும் இன்னல்களுக்கு எதிராகவும் பேரினவாத ஆளும் வர்க்க வெறித்தனத்திற்கு எதிராகவும் பேசுவதானால் அரசியல் செய்வதனால் பேரினவாத அரசுயந்திரம் எங்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்தப்பார்க்கிறது. எமது தோழர்களை சிறையில் அடைத்து அச்சுறுத்தல் விடுத்து எமது அரசியல் பாதையைத்தடை செய்யப்பார்க்கிறது. தமிழ் தேசிய வாதத்தின் போக்குப் பற்றிய எமது தொடர்ச்சியான விமர்சனம் இன்று யாதார்த்தமாகி வருகிறது. மேற்குலகு பற்றியும் இந்தியா பற்றியும் எமது முன் எச்சரிக்கைகள் இன்று நடைமுறையில் பிரதிபலித்து நிற்கிறது. எந்த இந்தியாவை தமிழ் மக்களின் காவலனாகக் காட்டி தமிழ்த் தேசிய வாதிகள் முனைப்பு காட்டினார்களோ அந்த இந்தியா தனது உண்மையான கோரமுகத்தை மீண்டுமொரு முறை காட்டி வருகிறது. அமெரிக்காவும் யப்பானும் மேற்குலக நாடுகளும் சீனாவும் பாக்கிஸ்தானும் போட்டி போட்டுக் கொண்டு எமது வளங்களைச் சூறையாட தயாராகி வருகிறன. எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதை வற்புறுத்தவும் இனமுரண்பாட்டுக்கு சரியான அரசியல் தீர்வை முன்வைப்பதற்கும் உரிய உறுதியான அரசியல் கொள்கையும் தலைமையுமே அவசியமாகியுள்ளது. அது ஒரு வெகுஜன அரசியல் இயக்கமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை எமது கட்சி வற்புறுத்தி நிற்கிறது என்றும் கூறினார்.

கூட்டத்தில் கட்சியின் மலையக பிராந்திய செயலாளரும் வலப்பனை பிரதேச சபை உறுப்பினருமான தோழர் . ச.பன்னீர்செல்வம் தொடக்க உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் இன்று தமிழ் மக்களின் போராட்டம் இந்திய மேற்குலக அனுசரனையோடு மிகக் கொடூரமாக நசுக் கப்பட்டு வருகிறது. சாதாரண மக்கள் மீதான பொருளாதார சுமை அவர்களின் தினசரி வாழ்க்கையை கேள்விக்குறியாக்கி நிற்கிறது. பௌத்த சிங்கள பேரினவாத ஆளும் வர்க்கத்தின் நிகழ்ச்சி நிரலில் கைது ஆட்கடத்தல் கொலைக் கலாச்சாரம் சாதாரண நிகழ்வுகளாகி இருக்கிறது. ஜனநாய உரிமைக்காக எழுப்பப்படக் கூடிய எல்லா குரல்களும் மிக மோசமாக நசுக்கப்பட்டு வருகிறது. மக்கள் அரசி யலை முன்னெத்ததற்க்காக எமது தோழர்கள் கைது செய்யப்பட் டார்கள். தொடர்ந்தும் எமது தோழர்கள் இருவருடன் மேலும் ஒருவர் உட்பட பல அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தான் பேரினவாத அரசு அடக்கு முறைக்கு அடி பணியாமல் நாங்கள் யாழ்ப்பாணத்திலும், மலையகத்திலும் வவுனியா விலும் மேதின கூட்டங்களை நடாத்திக் கொண்டிருக்கின்றோம்.

தோட்டத்தொழிலாளர்களுக்கான சம்பள கூட்டு ஒப்பந்தம் காலம் முடிந்து விட்ட நிலையில் மலையகத் தலைமைகள் வெறும் அறிக்கை விட்டு காலம் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாளுக்கு நாள் உயரும் விலைவாசி உயர்வு மக்களை திணறடித்துக் கொண்டிருக்கிறது. பெருந்தோட்டத்துறை கொஞ்சம் கொஞ்சமாக சிதைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறான நிலை மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் பேரினவாத அரசிடம் மண்டியிட்டு தனது சுய நல அரசியல் ஈடேற்றத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. மலையக அரசியலில் வழமைப் போலவே அவருக்கு பதில் இவர் என்பது போல் மாகாணசபை தேர்தலில் புதியவர்கள் வென்றிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறியவர்கள் என்பதை மலையக மக்கள் விரைவாக அறிதல் அவசியம். இந்த மாற்றங்களால் மலையகத்துக்கு எந்த விடிவும் வரப் போவதில்லை. எனவே தொழிற்சங்க உரிமைகளை வென்றெடுக்கவும் வாழ்வியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யவும் மாற்றுத் தொழிற்சங்க புரட்சிகர அரசியல் தலைமை கட்டி வளர்க்கப்பட வேண்டும் எனத் தோழர் பன்னீர் குறிப்பிட்டார்.

அடுத்து, புதிய மலையகம் மகேந்திரன் தனது உரையில் இரண்டு வருட சிறை வாழ்வுக்குப் பின் கட்சியின் பொது மேடையில் பேசக் கிடைத்த சந்தர்ப்பத்திற்கு நன்றி கூறுகிறேன். பொதுவாகவே எமது கைது தொடர்பில் இன்றும் பலருக்கு பல விதமான சந்தேகங்கள் உள்ளன. ஏன் எனில் நாம் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யபட்ட பின்னர் அரச ஊடகங்கள் பல வாறான பொய்ப்பிரச்சாரங்களில் ஈடுப்பட்டன. நாம் ஆயுதப் பயிற்சி பெற்றதாகவும் மலையகத்தில் நாசகார வேலைகளுக்கு திட்டமிட்டதாகவும் அவை பொய் மூட்டைகளை அவிழ்த்துவிட்டன. ஆனால் நாங்கள் பயங்கரவாதிகளோ நாசகார செயற்பாடுகளில் ஈடுபடுவர்களோ அல்லர் நாங்கள் மக்கள் செயற்பாட்டாளர்கள். மக்கள் மீதான எல்லா ஒடுக்குமுறைகளையும் துடைத் தெறிய மக்கள் மக்கள் மட்டுமே சிறந்த ஆயுதம் என்பதில் மிக ஆழமான நம்பிக்கையுடைய மா.லெ.புரட்சிவாதிகள். மார்க்ஸிய அரசியல் தத்துவத்தை ஏற்றுக் கொண்டு அதன் வழி நின்று மக்களுக்கான வெகுஜன அரசியலை முன்னெடுப்பவர்கள். இந்த நாட்டில் சிங்கள பௌத்த பேரினவாத ஆளும் வர்க்கத்திற்கு எதிராகவும் ஏகாதிபத்திய உலகமயமாக்க நிகழ்ச்சி நிரலுக்கு ஏதிராகவும் உழைக்கின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றிணையக்கூடிய அரசியல் தளத்தை கட்டுவதற்கு முன்னின்று உழைத்தும் வருகின்றோம். மக்களைப்பாதிக்கின்ற இந்த நாட்டின் இயற்கை வளங்களை சூறையாடுகின்ற நாசகார வேலைதிட்டங்களை எதிர்த்து போராட்டங்களில் ஈடுபட்டதும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் போராட்டங்களில் முன்னின்று உழைத்ததும் மாற்று சமூக பண்பாட்டு கலாச்சாரத்தை கட்டி வளர்ப்பதற்க்கான கலை இலக்கிய செயற்பாடுகளில் ஈடுபட்டதுமே நாம் செய்த "பயங்கரவாதம்" என்ற குற்றச்சாட்டாகும் அதற்க்காவே நாம் சிறையில் அடைக்கப்பட்டோம். இன்னும் எமது தோழர்கள் மூவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் இந்த நேரத்திலே நான் ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் ஆளும் வர்க்க ஏவல்களின் அச்சுறுத்தல்கள் மூலமோ சிறையில் அடைத்து சித்திரவதை செய்வதன் மூலமோ எமது அரசியல் பயணத்தை தடுக்கவோ, எமது கொள்கை உறுதியை குலைக்கவோ முடியாது. தொடர்ந்து தடுப்பு காவலில் இருக்கும் எமது தோழர்கள் உட்பட அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் இந்த நாட்டில் சகல மக்களும் சுதந்திரமாகவும் ஜனநாயக உரிமைகளுடன் வாழக்கூடிய சமூக கட்டுமானத்தை உருவாக்குவதற்க்கான எமது புரட்சிகர அரசியல் போராட்டம் எந்த சவால்களையும் தடைகளையும் தகர்த்தெறிந்து தொடர்ந்து செல்லும். அதற்காக எந்த விலையைக் கொடுக்கவும் நாம் தயாராகவே உள்ளோம் என் றும் குறிப்பிட்டார். பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்ட இம்மேதினத்தில் புரட்சிகர இசைப்பாடல்களும் இடம் பெற்றன.

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

## இமயவரம்பன் 19

# சுதந்திரப் போராட்டம் எதுவுமின்றி சும்மா கிடைத்த சுதந்திரம்!

இரண்டாம் உலகப் போரின் பின்பு உலகம் பெரும் மாற்றங்களைக் கண்டது. ஃபாஸிஸ ஜேர்மனி - இத்தாலி – யப்பான் ஆகிய நாடு களின் வீழ்ச்சியால் சோவியத் யூனியனின் செல்வாக்கு மிகவும் உயர்ந்திருந்தது. கிழக்கு, மத்திய ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் சோஷலிஸ ஆட்சிகள் உருவாயின. வேறு சில ஐரோப்பிய நாடுக ளில் இடதுசாரிக் கட்சிகள் எழுச்சி பெற்றன. ஆசியாவின் முன்னாட் கொலனிகளில் விடுதலைப் போராட்டங்கள் முனைப்படைந்தன. அதேவேளை, போரில் வெல்லுந் தரப்பில் இருந்த பிரித்தானியக் கொலனித்துவம் போரின் பின்பு பெரும் பொருளாதாரச் சுமைகளைத் தாங்க நேரிட்டது. அச் சுமைகளைத் தனது கொலனிகள் மீது ஏற்றி வைப்பது எல்லா நாடுகளிலும் இயலுமானதாக இருக்கவில்லை. ஏற்கனவே விடுதலைப் போராட்டம் வேகங் கண்டுவிட்ட இந்தியாவில் தொடர்ந்துங் கொலனி நிருவாகத்தை நடத்துவதன் பொருளாதாரச் சுமைக்கும் இந்தியாவைச் சுரண்டிப் பெறுகிற லாபத் திற்குமிடையே உள்ள சம நிலையைப் போருக்குப் பின்னான சூழல் முற்றாக மாற்றி விட்டது. அதைவிட, பிரித்தானியக் கொலனி களை ஊடுருவித் தனது பொருளாதார மேலாதிக்கத்தை வலுப்ப டுத்துவதில் அமெரிக்காவும் குறிவைத்தது. எனவே பிரித்தானியக் கொலனி ஆட்சி தென்னாசியாவிலிருந்து

> ● சிங்கள தமிழ் மேட்டுக் குடியினர் தமது பிரித்தானிய எசமானர்களிடம் சுதந்திரம் கேட்கவில்லை. கேட்டது டொமினியன் அந்தஸ்து மட்டுமே.
>
> ● கம்யூனிஸ்டுகளும் இடதுசாரிகளுமே பூரண சுதந்திரம் வேண்டி இயக்கங்கள் நடாத்தினர்.
>
> ● 1947ன் பொது வேலை நிறுத்தமும் அதன் சார்பான பெரும் ஊர்வலம் மீது பொலீஸ் துப்பாக்கிச் சூடு நடாத்தியது. அதில் உயிரிழந்தவர் கந்தசாமி என்ற அரசாங்க எழுது வினைஞர். சுட உத்தரவு பிறப்பித்தவர் தமிழ் அமைச்சரான அருணாசலம் மகாதேவா.

வெளியேறுவது தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்டது. இவ்விடயத்தில் பிரித்தானியாவின் பழ மைவாதிகட்கும் பிரித்தானிய முதலாளியத்தின் சீர்த்திருத்த முக மாகத் தன்னை அமைத்துக் கொண்ட தொழிற் கட்சித் தலை மைக்கும் பாரிய கருத்து வேறுபாடுகள் இருந்தன. எனினும் பிரித் தானியப் பொருளாதாரத்தின் நிர்ப்பந்தங்கள் தொழிற் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வந்ததால் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் முடிவை எட்டுவதில் அதிகம் சிரமமிருக்கவில்லை. எனினும் அந்தச் சுதந்திரம் பிரித்தானியப் பொருளாதாரச் சுரண்டலுக்கும் அரசியற் செல்வாக்குக்கும் மிகக் குறைந்த இழப்பையே ஏற்படுத்தும் விதமாக ஆட்சியைத் தமக்கு உடன்பாடான ஒரு அதிகார வர்க்கத்திடம் ஒப்படைப்பது பற்றிக் கொலனி ஆட்சி மிகவுங் கவனமாக இருந்தது. ஏனெனில் மக்கள் மத்தியில் அதிருப்தி வளர்ந்து அதன் மூலம் ஏற்படக் கூடிய ஆட்சி மாற்றம் முதலுக்கே மோசமாகி விடும் என்று கொலனிய ஆட்சிக்குத் தெரியும்.

என்வே ஆட்சி அதிகாரத்தை மக்கள் பறித்தெடுக்கு முன்னமே தமக்கு நம்பிக்கையான ஒரு ஆளும்வர்க்கத்தின் கையில் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டது. இந்தியாவில் ஒரு விடுதலைப் போராட்டம் நடந்தது. இந்திய காங்கிரஸ் தலைமைக்குள் கொலனிய எசமானர்களுடன் பகைக்காமல் சுதந்திர இந்தியா நடந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தவர்கள் பலர் இருந்தார்கள். தீவிர கொலனிய எதிர்ப்பாளர்களும் இருந்தார்கள். இந்தியா எந்த வர்க்க நலன்களை முன்னெடுக்க வேண்டும் என்பதில் காங்கிரஸ் தலைவர்களிடையே பெரும் வேறுபாடு இருந்ததாகக் கூற முடியாது. ஏனெனில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தவர்கள் எப்போதோ பிரிந்து சென்று விட்டனர். காங்கிரஸை விட்டால் கொலனிய எசமானர்கள் முன் வேறு தெரிவு இருக்கவில்லை.

இலங்கையின் விடயத்தில் எந்த விதமான சங்கடமுமே இருக்கவில்லை. ஏனெனிற் சிங்களத் தேசியவாதத் தலைவர்கள் எல்லாருமே கொலனிய விசுவாசிகளாக இருந்தனர். அவர்கள் எந்த நிலையிலும் பூரண சுதந்திரம் கேட்கவில்லை. 1945ற் கூட, பிரித் தானிய முடியாட்சிக்கு உட்பட்ட டொமீனியன் எனப்படும் சுயாட்சியையே அவர்கள் கோரினர். அதற்கான தைரியங் கூடத் தென், தென்கிழக்கு ஆசியாவில் யப்பானியப் படைகள் பர்மா (மியான்மார்), சிங்கப்பூர் ஆகிய நாடுகளை எல்லாம் கைப்பற்றிய சூழ்நிலையிலேயே ஏற்பட்டது. டி.எஸ்.சேனநாயக்காவின் அமைச்சர் சபை பிற அரச சபை (சட்ட சபை) உறுப்பினர்களது கலந்தாலோசனை இல்லா மல் முன்வைத்த இலங்கை அரசியல் யாப்புச் சீர்திருத் தங்கள் இலங்கைக்குக் கூடிய அரசியல் அதிகாரங்கள் என்ற நோக்கிலேயே முன் வைக்கப்பட்டன. எனினும் போர் முடியும் வரை அவை பற்றி முடிவு எடுக்க இயலாது என்பது கொலனி ஆட்சியாளர்களது நிலைப்பாடாக இருந்தது.

உலகப் போரில் சோவியத் யூனியன் இறங்கிய சூழ் நிலையில் கம்யூனிஸ்ற்றுக்கள் மீதான தடை நெகிழ்த்தப்பட்டது. கம்யூனிஸ்ற்றுக்கள் 1943ல் இலங்கை தேசிய காங்கிரஸில் இணைந்தனர். அங்கு அவர்கள், எவ்வித இடைக்கால ஏற்பாடுமின்றி நேரடியாகவே சுதந்திரம் என்ற கருத்தை வலியுறுத்தினர். இது பிரித்தானிய கொலனிகட்குப் பொறுப்பான அமைச்சர் 1943 மே 26ம் திகதி வெளியிட்ட பிரகடனத்தை மறுப்பதாக அமைந்தது. அதற்கு இளம் காங்கிரஸ் உறுப்பினர்களது ஆதரவு இருந்தது. அதன் விளைவாக இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவர்களிடையே இருந்த பழைமைவாதிகள் பதற்றமடைந்தனர். கம்யூனிஸ்ற்றுக்கள் அனுமதிக்கப்பட்டதையடுத்து டி.எஸ்.சேனநாயக்க இ.தே.காங்கிரஸில் இருந்து விலகினார்.

அதனையடுத்து டி.எஸ்.சேனநாயக்கவின் தலைமையிலான அமைச்சர் சபை 1943 மே 26ம் திகதிப் பிரகடனத்தின் அடிப்படையிலான அரசியல் யாப்பு வரைவு ஒன்றை 1944 முற்பகுதியில் தயாரித்தது. அதை ஆராய்வதற்கு ஒரு அரசியல் யாப்பு ஆணைக்குழுவை நியமிப்பதற்கு லூயிஸ் மவுண்ட்பற்றன் பிரபு ஆதரவு வழங்கியதால், பிரித்தானிய ஆட்சியாளர்கள் அதற்கு உடன்பட்டனர். எனினும் அந்த ஆணைக்குழுவின் அதிகாரம் சேனநாயக்கவின் அமைச்சர் சபை தயாரித்த அரசியல் யாப்பு வரைவிற்கும் அப்பால் சிறுபான்மையினரது நலன்கள் போன்றவற்றையும் உள்ளடக்குமாறு அமைந்திருந்தது. அதை டி.எஸ். சேனநாயக்க ஏற்க மறுத்தாலும் 1944 செப்ரெம்பரில் சோல்பரி பிரபு தலைமையிலான ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

சேனநாயக்கவும் அமைச்சர் சபை உறுப்பினர்களும் சோல்பரி ஆணைக்குழுவைப் பகிஷ்கரிப்பதாக அறிவித்தாலும் பல வேறு சூழ்நிலைகளில் தனிப்பட்ட முறையில் ஆணைக்குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினர். 1945ல் டி.எஸ். சேனநாயக்கவுக்கு சோல்பரி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் ஒரு பிரதி அவை வெளியிடப்பட முன்னரே லண்டனிற் காண்பிக்கப்பட்டது. அது அவருக்கு உடன்பாடானதாகவே இருந்தாலும் போருக்குப் பின்பான சூழலில் இலங்கைக்கு டொமீனியன் அந்தஸ்து பொருத்தமானதாக இருக்கும் என்பதே அவருக்கிருந்த ஒரே கருத்து வேறுபாடாகும். இந்தியாவுக்கும் இந்தியாவிலிருந்து பிரிந்த பாக்கிஸ்தானுக்கும் 1947ம் ஆண்டு சுதந்திரம் வழங்குவதாக முடிவெடுத்த கொலனிய ஆட்சியாளர்கள் இலங்கைக்கு டொமீனியன் அந்தஸ்து வழங்குவதற்குத் தயங்கினர். எனினும் போருக்குப் பின்பான சூழ்நிலையில் 1945 முதல் 1947 வரை நடைபெற்ற வேலை நிறுத்தங்களும் வலுப்பெறத் தொடங்கின. 1945ல் கம்யூனிஸ்ற்றுக்கள் நாட்டுக்கு வேண்டியது சுதந்திரமே ஒழியச் சீர்திருத்தங்களல்ல என்று சோல்பரி ஆணைக்குழுவைப் பகிஷ்கரிக்குமாறு விடுத்த அழைப்பு அதன் தொழிற்சங்கத்தாலும் முன்னெடுக்கப்பட்டது. தொழிற்சங்கப் போராட்டங்களிற் சில அரசியற் கோரிக்கைகளையும் முன் வைத்தமை முக்கியமான ஒரு விடயமாகும்.

1945 முதல் வெளிவெளியாகச் செயற்படத் தொடங்கிய சமசமாஜக் கட்சியினர் தமது தொழிற்சங்க இயக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் கம்யூனிஸ்ற்றுக்களுடன் போட்டியிட்டனர். இப் போட்டியால் தொழிலாளர் போராட்டங்கள் சில தோல்வி கண்டன. இதை நன்குணர்ந்த கம்யூனிஸ்ற்றுக்கள் தொழிற்சங்க ஐக்கியத்தையும் கூட்டுத் தலைமையையும் வற்புறுத்தினர். அதன் விளைவாகத் தொழிற்சங்க இயக்கம் புதிய உற்சாகம் பெற்றதுடன் அரசாங்க, தனியார்துறை எழுதுவினைஞர்களும் தொழிலாளி வர்க்கத்துடன் ஒன்றிணையும் சூழல் ஏற்பட்டது.

அதன் விளைவாக 1947 ஜூன் மாதம் கொலனி ஆட்சிக் காலத்தின் மாபெரும் வேலை நிறுத்தமாக ஒரு பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக நடந்த பிரம்மாண்டமான ஊர்வலம் ஒன்றின் போது கந்தசாமி எனும் அரசாங்க ஊழியர் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையானார். அவரது இறுதி ஊர்வலத்தில் ஒரு இலட்சம் பேர் பங்குபற்றினர். அந்த ஊர்வலம் இன, மத, மொழி வேறுபாடு கடந்த வர்க்க ஒற்றுமையை அடையாளங் காட்டியது. கந்தசாமியைச் சுட்டுக் கொன்ற பொலிஸ் படைக்குப் பொறுப்பான உள்நாட்டு அலுவல் அமைச்சர் ஒரு பச்சைத் தமிழரான அருணாசலம் மகாதேவா ஆவார். தொழிலாளி வர்க்க உணர்வு இன மொழி வேறுபாடு கடந்து இருந்தது போல ஆளும் அதிகார வர்க்க உணர்வும் அத்தகைய வேறுபாடுகளைக் கடந்தே இருந்தது.

அரசாங்கம் கொடுமையான அடக்குமுறையைப் பாவித்து வேலை நிறுத்தத்தை முறியடித்தது. வேலை நிறுத்தத்தால் நன்மை கண்டவர்களுடன் டி.எஸ்.சேனநாயக்கா முக்கியமானவர். அவர் அதைக் காரணங் காட்டி இலங்கைக்கு டொமீனியன் அந்தஸ்து வழங்குமாறு கொலனிய எசமானர்களை வற்புறுத்தி வெற்றியுங் கண்டார்.

கொலனிய எசமானர்கள் சிங்கள முதலாளிய-நிலவுடைமை வர்க்கத்தின் பிரதிநிதியாகத் தாம் கண்ட டி.எஸ்.சேனநாயக்கவுடன் திரைமறைவிற் பல பேரங்களையும் நடத்தினர். முடிவில் டி.எஸ்.சேனநாயக்கவே எதிர்பாராத விதமாக இலங்கைக்கு டொமீனியன் அந்தஸ்த்திற்கும் மேலாகச் "சுதந்திரம்" வழங்கப்பட்டது.

சுதந்திர இலங்கையை நிருவகிப்பதற்கான ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் 1947ம் ஆண்டு ஒகஜ்ற்-செப்ரெம்பரில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. பொதுத் தேர்தலை மனதிற் கொண்டு டி.எஸ்.சேனநாயக்கவின் முன் முயற்சியால் யூ.என்.பி. என்ற கட்சி 1946 செப்ரெம்பரில் உருவாக்கப்பட்டது. அதன் முக்கியமான பங்களிப்பாக இலங்கை தேசிய காங்கிரஸ், சிங்கள மகா சபை ஆகிய இரண்டும் இருந்தன. பிற பிரமுகர்களும், சிறிய அமைப்புக்களும் அதனுள் உள்வாங்கப்பட்டன.

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலுக்கு முந்திய அரசியல் நடவடிக்கைகளும் தேர்தல் முடிவுகளும் அதன் பின் விளைவான அரசியல் மாற்றங்களும் பற்றி அடுத்து வரும் பகுதிகளிற் கவனிப்போம்.

வளரும்

---

## உலகப் பொருளாதார

6ம் பக்க தொடர்ச்சி

யுத்த சூழல் காரணமாகவும் வீழ்ச்சிகண்டுள்ளது. அரசு நெருக்கடியைச் சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பத்தொன்பதனாயிரம் கோடிரூபாவை கடனாகப் பெறவுள்ளது. அந்த நிதியைப் பெறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் பல்வேறு மக்கள் விரோத நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது. தங்கு தடையற்ற தாராளமயத்திற்கு உலகில் முடிவுகட்டப்படுமா எனச் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். பிரித்தானியப் பிரதமர் பிறவுண் "பேராசை நல்லது என்ற மருந்து சிறந்த சமுதாயத்திற்குகந்ததல்ல. கடின உழைப்புடன் மக்களை நியாயமான வழியில் அனுசரிப்பவர்களையும் பொறுப்பை ஏற்றுக்கொள்பவர்களான ஆண்களையும் பெண்களையும், நாம் பாராட்ட வேண்டும் அதே சமயம் மனம்போன போக்கில் செயற்படுகிறவர்களைத் தண்டிக்க வேண்டும்" எனக் கருத்து தெரிவித்துள்ளார். முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகளுக்கு இவ்வாறு இடையிடையே ஞானம் வருகிறது என எவரும் ஏமாந்து விட வேண்டியதில்லை. ஏனெனில் அவர்களை சூழ்ந்துள்ள மோசமான முதலாளித்துவ உலக நெருக்கடியானது இவ்வாறு பேச வைக்கிறது. நமது நாட்டின் சக்வித்தி என்ற மோசடிக்காரன் பல நூறு கோடி ரூபாய்களை சுருட்டிக் கொண்டு தலைமறைவாகியுள்ளான். தேசமான்ய அதியுயர் கௌரவ விருதுபெற்ற லலித் கொத்தலாவல மக்கள் பணத்தைச் சூறையாடியபின் "சுகவீனம்" என்ற காரணம் காட்டி சிறையிருப்பைத் தவிர்த்து வசதியாக மருத்துவமனையில் இளைப்பாறுகிறார். அத்துடன். தனக்குப்பிடித்தவர்களுடன் மீள்வது பற்றி ஆலோசனை செய்கிறார். அதே சமயம் விசாரணை செய்ய முயன்றபோது தான் பலவீனமாய் இருப்பதாகக் கூறி விசாரணையை இழுத்தடிக்கிறார். இவர்கள் தான் முதலாளித்துவ மோசடிகளுக்கான முன்மாதிரிகள் என்பதை இப்போதாவது மக்கள் உணரவும் சிந்திக்கவும் வேண்டும். அமெரிக்காவின் மிகமோசமான மோசடிக் பேர்வழி பேர்நாட் மடோவ் அண்மையில் "எண்ணில் அடங்காத மக்களை பெரும் நெருக்கடிக்குள்ளாக்கியதற்காக நான் கவலை அடைகிறேன் வெட்கப்படுகிறேன்" என்று மன்னிப்பு கோரினான். அத்தகைய ஒரு வார்த்தை கூட நமது நாட்டின் முதலாளித்துவப் பெருச்சாளி மோசடிக் காரர்களிடமிருந்து வரவில்லை. இன்னும் எத்தனைபேர் அரசாங்க அரவணைப்பில் இருப்பார்களோ யார் அறிவர். இத்தனைக்கும் மத்தியில் தான் உலகப் பொருளாதார நிதிநெருக்கடி இலங்கையைப் பாதிக்கவில்லை என்று கதைகள் அளக்கும் கனவான்கள் கூறிவருகின்றனர் வீழ்ந்துள்ள உலகப் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக பல நூறு கோடி வரியிருப்பாளர்களின் பணம் செலவிடப்படுகிறது. இதன் மூலம் உழுத்துக் கொண்டிருக்கும் பொருளாதார அமைப்பை நிமிர்த்த முடியுமா? அது முடியாத காரியம் என்பதை மாக்சிஸ்டுக்கள் அடித்துக் கூறிவருகின்றனர். ஒபாமா, பிறவுண், சாக்கோஸ்கி, மன்மோகன் சிங் போன்றோர் முடியுமென்கின்றனர். "முதலாளித்துவம் தனக்குரிய சவக்குழியைத் தானே தோண்டுகிறது" என கார்ல் மாக்ஸ் 160 வடங்களுக்கு முன் கூறிய கூற்று வெறும் கூற்றல்ல. அவை இன்று நடைமுறையாகி வருகிறது.

சிறீ

---

8ம் பக்க தொடர்ச்சி

## சர்வதேச நாணய நிதியத்திடம்

நாடுகளில் இந்த வருடம் பொருளாதார வளர்ச்சி என்பது கேள்விக்குறியே. ஆசிய நாடுகள் மேற்குலகுடன் வர்த்தகத் தொடர்பை - மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 50 வீதத்தை கொண்டுள்ளன. மேற்குலகுடன் நிதி தொடர்பான பிணைப்பால் - குறிப்பாக அமெரிக்காவுடனான நிதிப் பணமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 40 வீதத்தை கொண்டுள்ளதால் மேற்குலகின் பொருளாார நெருக்கடிகள் ஆசிய பிராந்தியத்தைப் பாதிப்பதில் ஆச்சரியப்பட கூடிய விடயமல்ல. ஆசியப் பிராந்தியத்தில் மிக மோசமான வறுமையில் ஏற்கனவே 90 கோடிமக்கள் உள்ளனர். இது இந்த வருடமுடிவில் மேலும் 10 கோடி மக்களையும் சேர்த்துக் கொண்டு நூறு கோடி வறியவர்களைக் கொண்ட பிராந்தியமாக ஆசியப் பிராந்தியம் விளங்கப் போகிறது. ஆசியாவில் 2007ல் வேலையற்றோரின் எண்ணிக்கை 7 கோடி 90 லட்சமாகவிருந்து 2008ல் 8கோடி 40 இலட்சமாக அதிகரித்தது. 2009ம் ஆண்டின் முடிவில் வேலையற்றோரின் எண்ணிக்கை 9 கோடி 40 இலட்ச எண்ணிக்கையை அடையுமென பொருளியல் நிபுணர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

முதலாளறித்துவம் இந்தப் பாரிய நெருக்கடிக்கு தீர்வுகாண முடியாதுள்ளது. வரப்போகும் காலங்கள் முதலாளித்துவ நெருக்கடியானது மோசமடைவதையும் அதனால் மக்கள் மேன் மேலும் சுமைகளையும் துன்பங்களையும் எதிர் கொள்வார்கள் இவற்றிலிருந்து மீள வேண்டுமானால் மக்கள் சோஷலிசப் பொருளாதாரம் பற்றிய மீள் சிந்தனைக்கு வருவது தவிர்க்க முடியாது.

ஜீ. எஸ்

# யுத்தமும் போராட்டமும் பேரவலத்தையே தந்துள்ளது

## யாழ் மேதினக் கூட்டத்தில் தோழர். சி.கா.செ.யின் உரை

உலகத் தொழிலாளி வர்க்கத்தின் 123வது போராட்டத் தினமான மேதினம் இன்று (01-05-2009) உலகம் பூராவும் கொண்டாடப்படுகிறது. நமது நாட்டில் அப் புரட்சிகரப் போராட்டத்தினத்தில் முக் கியத்துவம் மறைக்கப்படுகிறது. அதற்கு முக்கியமான ஒரு கார ணியாக காணப்படுவது பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்க சக்திகள் தொடர்ந்து முன்னெடுத்து வந்த இன ஒடுக்குமுறை யுத் தமாகும். அத்தகைய யுத்தம் இன்று உச்சக்கட்டத்தில் வரலாற்றுப் பேரவலத்தை ஏற்படுத்தி நிற்கிறது. முல்லைத்தீவின் ஒரு சிறிய நிலப்பரப்பினுள் மூன்று லட்சம் மக்கள் முடக்கப்பட்டு இராணுவ சுற்றிவளைப்பின் கீழ் விபரிக்க முடியாத அவலங்கள் மத்தியில் பொழுதுகளைக் கழித்து வருகின்றனர். ஒரு புறம் ராணுவத்தாலும் மறுபுறம் விடுதலைப் புலிகளாலும் மக்கள் இருதலைக் கொள்ளி நிலையில் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லாது மரணத்தின் பிடியில் இருந்து வருகிறார்கள். இம்மக்கள் இருபுறத்தாக்குதல்கள் இன்றியும் பாதுகாக்கப்படுவதையே எமது கட்சி வற்புறுத்துகிறது. ஒரு புறும் பேரினவாத ஒருக்குமுறையும் மறுபுறம் தமிழ்க் குறு தேசிய வாத ராணுவக் நிலைப்பாடும் தமிழ் மக்களை அழித்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய நிலைப்பாட்டை எமது மாக்சிச லெனினிச கட்சியாகி புதிய ஜனநாயகக் கட்சி ஆரம்ப முதல் ஏற்றுக் கொள்ளவில்லை. அதேவேளை அவற்றில் அழிவுகளையும் தீர்வற்ற போக்குகளையும் மக்கள் மத்தியில் எடுத்துக் கூறிவந்துள்ளோம். அத்துடன் தமிழ் மக்களினதும் ஏனைய தேசிய இனங்களினதும் விடுதலை என்பது தொழிலாளர்கள் விவசாயிகள் உள்ளிட்ட உழைக்கும் மக்களின் வர்க்க ரீதியான ஐக்கியப்பட்ட போராட்டங்களின் மூலம் மட்டுமே சாத்தியமாகும் என்பதையும் சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம். எமது கொள்கைகளை மாக்சிச விரோதிகளும் இடதுசாரி மறுப்பானவர்களுமான தமிழ்த் தேசியவாத பிற்போக்கு சக்திகள் நிராகரித்து தமிழர் பழைமைவாத நிலைநின்று "ஆண்ட பரம்பரைத் தமிழர் வழிவந்த போராட்டம்" எனக் கூறி மக்களை இன உணர்வுக்கும் சிங்கள மக்கள் மீதான இனவெறி வக்கிரங்களுக்கும் உள்ளாக்கி வந்தனர். இது தமிழர் தேசிய வாதத் தலைமைகளின் பாராளுமன்ற ஆசனத் தேவைகளுக்கும் பின்பு ஆயுதப் போராட்டங்கள் மூலமான அவரவர் ஆதிக்க நிலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. இத்தகைய போக்கினை இந்திய - அமெரிக்க மேலாதிக்கவாதிகள் தத்தமது நிகழ்ச்சி நிரல்களுக்கு நன்கு பயன்படுத்தி வந்தனர். இவ்வாறு தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் தமிழ்மக்கள் மத்தியில் செல்வாக்குப்பெற்று வளர்வதற்கு அடிப்படையாக அமைந்தது பௌத்த சிங்களப் பேரின வாதத்தின் ஆட்சி அதிகாரமும் அதன் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகளும் என்பது முக்கிய விடயமாகும். எங்கு ஒடுக்கு முறை உண்டோ அங்கு போராட்டங்கள் இருக்கும் என்பதற்கு இணங்க தமிழர் மத்தியில் பல்வேறு இளைஞர் அமைப்புக்களால் ஆயுத நடவடிக்கைகள் விடுலைப் போராட்டம் என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அவற்றின் அடிப்படை நிலைப்பாடு கள் வர்க்க அடிப்படையற்று வெறும் இன உணர்வும் இன வக்கிர ங்களும் கொண்ட இளைஞர் அணி திரட்டல்களாகவே அமைந்தன. அதே வேளை ஆளும் பேரினவாத சக்திகள் பெரும் தேசியவாத அகங்காரத்துடனும் ராணுவ ஒடுக்குமுறையுடனும் தமிழ் மக்கள் மீது யுத்தத்தை திணித்தன. அதற்கு தமிழ் மக்களை சரியான அரசியல் நிலைப்பாட்டில் அணிதிரட்டி எதிரி யார் நண்பன் யார் என்பதைத் தெளிவுப்படுத்தி வெகுஜனப் போராட்ட மார்க்கத்தில் உழைக்கும் மக்களது வர்க்கப் போராட்ட அடிப்படையில் போராட் டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்ததால் இன்றைய பேரவல நிலை யைத் தடுத்திருக்க முடிந்திருக்கும். பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிராக புரட்சிகரமான சமூக மாற்றக் கொள்கைகளுடன் வர்க்க ரீதியான பாதையில் மக்களை அணிதிரட்டிப் போராடுவதற்குப் பதிலாக மக்களுக்காகத் தாங்களே போராடுவதாகக் கூறியே இளைஞர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவையாவும் இன்று புறங்குடத்து நீராக விரயமாக்கப்பட்டது. இயக்கங்க ளும் இளைஞர்களும் போராடி உரிமைகளை வென்றெடுத்துத் தருவார்கள். என்று நம்பிய மக்கள் ஏமாற்றம் அடைந்தது மட்டுமன்றி பேரவலத்திற்கு உள்ளாகி தவித்து போய் நிற்கிறார்கள். இதனை எமது கட்சி மகிழ்ச்சியுடன் எடுத்துக் கூறவில்லை. ஆழ்ந்த வேதனையுடன் எடுத்துக் கூறு வேண்டியே உள்ளது. ஏனெனில் கடந்த முப்பது வருடங்களாக எமது கட்சி மக்கள் பக்கம் நின்றே எமது வர்க்க போராட்ட அரசியலையும் கொள்கைகளையும் முன்னெடுத்து வந்துள்ளது.




நாம் ஒரு நாள் தானும் ஆளும் பேரினவாத ஆட்சியதிகாரத்தின் பக்கம் நின்று அரசியலை முன்னெடுத்தவர்கள் அல்லர். நாம் தொழிலாளர்கள் விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் முற்போக்கான புத்திஜீவிகள் கலை இலக்கியவாதிகளுடன் இணைந்து செயல்பட்டு வந்திருக்கின்றோம். நாம் என்றுமே எந்தவொரு ஆதிக்க சக்திகளுக்கும் அடிபணிந்து அரசியல் செய்து வந்தவர்கள் அல்லர். அதே போன்று மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் நடைமுறைகளைக் கொண்டவர்கள் எவருடனும் இணங்கிப் போனவர்களும் அல்லர். உதாரணமாக எமது கட்சியின் கொடியை எடுத்துப் பாருங்கள். அது எமது கொடி மட்டுமல்ல உலகம் பூராவும் உள்ள மாக்சிச லெனினிசக் கட்சிகளும் போராடும் தொழிலாளி விவசாயிகளும் ஒடுக்கப்படும் அனைத்து மக்களும் உயர்த்தி நிற்கும் கொடியாகும். அரிவாள், சம்மட்டி, சிகப்பு நிறம் என்பன தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அவர்களது உழைப்பையும் போராட்டத்தையும் தியாகத்தையும் எடுத்துக் காட்டுவனவாகவே உள்ளது. இன மதமொழி கடந்து சமூக மாற்றத்திற்காகப் போராடும் ஒடுக்கப்பட்ட மக்களின் கொடியுமாகும்.

அதேவேளை தத்தமது இன மத மொழி மேன்மைக்கு என்று கூறி சொத்துடைய வர்க்க ஆதிக்கத்தைப் பாதுகாக்கவும் அவற்றின் ஆட்சியதிகாரத்திற்காகவும் உயர்த்தப்படும் கொடிகளையும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள சின்னங்களையும் பார்த்தால் அவற்றில் ஆதிக்கத்தையும் மக்கள் விரோதங்களையும் காணமுடியும். சமகாலத்தில் நமது நாட்டில் ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்கும் இரண்டு கொடிகளைப் பார்த்தால் நிலவுடைமைக் கால ஆட்சியதிகாரத்தை நினைவுறுத்தி ஆண்ட பரம்பரைக் கதைபேசி மக்கள் மீது முதலாளித்துவ சுரண்டலுக்கும் அரசியல் அடக்குமுறைக்கும் தலைமை தாங்கும் கொடிகளாகவே உள்ளன. ஆதலால் இந்நாட்டில் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் ஐக்கியப்பட்டு உறுதியான வெகுஜனப் போராட்டங்கள் மூலம் தமது உரிமைகளையும் கோரிக்கைகளையும் வென்றெடுக்க அணி திரள வேண்டும். இன்று யுத்தமாகி கொடூர அழிவுகளைத் தந்து கொண்டிருக்கும் பேரவலம் உடன் நிறுத்தப்பட வேண்டும். தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சி அமைப்பு நிலை நிறுத்தப்படவேண்டும். ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் இச் சுயாட்சித் தீர்வு முஸ்லீம் மலையகத்தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை கொண்டதான உட்சுயாட்சி அமைப்பு முறை மூலம் பூர்த்தி செய்ய முடியும். அவ்வாறே வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள மக்களின் உரிமைகளு க்கும் உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். இத்தகைய அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு மட்டுமே தேசிய இனப் பிரச்சினையின் சகல நிலைகளிலும் மோசமடைந்துள்ள நிலைமைகளை மாற்றியமைக்க வழிவகுக்கும். இதனை ஆரம்பம் முதலே நமது கட்சி தனது மாக்கிச லெனினிச நிலை நின்று முன்வைத்து வரு கின்றது. தமிழ் மக்களுக்குரிய தீர்வும் விடுதலையும் தமிழீழத்தை வென்றெடுப்பது மட்டுமே என்று 1976ல் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முடிந்த முடிவு என நிறைவேற்றியது அன்று அத்தீர்மானம் தமிழர்களை குறிப்பாக தமிழ் இளைஞர்களை உணர்வுக்கும் உந்தலுக்கும் உள்ளக்கியது. ஆனால் இத் தீர்மான த்தை அன்று தூரநோக்குடன் சாத்தியமற்றது அழிவுகளைக் கொண்டு வரத்தக்கது அரசியல் தூரநோக்கற்றது என மாக்சிச லெனினிச வாதிகளாகிய நாம் தெளிவுடன் எடுத்துரைத்தோம் அன்று பாராளு மன்ற வெற்றிக்காகவும் அந்நிய சக்திகளையும் நம்பியும் முன்வைத்த தமிழீழக் கோரிக்கையின் இன்றைய நிலை என்ன? கடந்த 30 வருட யுத்தமும் போராட்டங்களும் யதார்த்தங்களை உண்மைகளை தகுந்த பாடங்களாகவும் அனுபவங்களாகவும் எடுத்துக் காட்டியுள்ளன. இவை பற்றி தமிழ் மக்கள் உரத்துச் சிந்திக்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சி யாழ்ப்பாணம் புத்தூரில் நடாத்திய புரட்சிகர மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு பிரதான உரை நிகழ்த்திய கட்சியின் பொதுச் செயலளர் சி.கா.செந்திவேல் கூறினார். வட பிரதேசச் செயலாளர் கா. கதிர்காமநாதன் (செல்வம்) தலைமையில் நடைபெற்ற மேற்படி மேதினக் கூட்டத்தில் கட்சியின் அரசியல் உறுப்பினர் தோழர். க. தணிகாசலம், வாலிபர் இயக்கத்தின் சார்பில் பொ.முருகேசு தொழிற்சங்கம் சார்பாக கா. பஞ்சலிங்கம், தொழிற்சங்கவாதி இ. தவராசா, கலைமதி விளையாட்டுக் கழகத்தின் சார்பாக கு. மகா தேவன் ஆகியோர் உரையாற்றினார். புரட்சிகர கவிதைகள் பாடல்கள் என்பனவற்றுடன் தொழிலாளர்களின் ஐக்கியம் போராட்டத்தை எடுத்துக் கூறும் நாடகம் ஒன்றும் நிகழ்த்தப்பட்டது. வட புலத்து மிக மோசமான சூழலிலும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட ஒரே ஒரு மேதினமாக இப் புரட்சிகர மேதினம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

9ம் பக்க தொடர்ச்சி

### யுத்த வெற்றியும்

மேற்படி வெற்றி தோல்வி இரண்டிலிருந்தும் தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் நிறையப் படிப்பினைகளும் பட்டறிவுகளும் பெற வேண்டும். வெற்றி என்ற பதாகையின் பின்னால் ஏகப்பெரும்பான்மையான சிங்கள உழைக்கும் மக்கள் எவ்வாறு மேன்மேலும் சுரண்டி அடக்கப்படப் போகிறார்கள் என்பது அடிப்படையில் நோக்கப்பட வேண்டியதாகும். இதே வர்க்க வன்மம் கொண்ட அரசாங்கமும் நவீனமாகக் கட்டியமைக்கப்பட்ட அரசுயந்திரப் படைகளும் எதிர்காலத்தில் சிங்கள உழைக்கும் மக்களை எவ்வாறு கையாளும் என்பதையிட்டு ஆழ்ந்து சிந்திப்பது சிங்கள மக்கள் முன்னால் உள்ள கடமையாகும். வெற்றிகளும் விருதுகளும் பெற்று நிற்கும் ராணுவம் சிங்கள மக்களுக்கானது அல்ல. பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கத்திற்குரியதேயாகும்.

எனவே யுத்தத்தின் வெற்றி அடிப்படையில் பெரும்பான்மையான சிங்கள மக்களுக்குரிய வெற்றியல்ல. அது பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கத்திற்கும் பௌத்த சிங்கள மேலாண்மை சக்திகளுக்குமுரியதேயாகும். அவ்வாறே தோல்வி என்பது தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த தமிழ்த் தேசியவாத பழைமைபேண் வாதிகளுக்கும் அதனை இளைஞர் ஆயுத பலத்தால் மட்டும் வென்றெடுக்கலாம் என்று மக்களை அழிவுப் பாதையில் அழைத்துச் சென்ற புலிகள் இயக்கத்திற்குமே உரியதாகும். ஆனால் இடம் பெற்ற இத் தோல்வியானது தமிழ் சிங்கள முஸ்லீம் மலையகத் தமிழ் உழைக்கும் மக்கள் வர்க்க அடிப்படையில் ஐக்கியப்படும் அவசியத்தை உணர்த்தி நிற்கிறது. அதன் மூலம் பரந்துபட்ட வெகுஜனப் போராட்டப் பாதையில் முன் செல்வதற்கான அரசியல் மார்க்கம் பற்றிச் சிந்திக்கவும் செயற்படவும் உரிய புதிய சூழல் உருவாகி உள்ளது. அதனை விட வேறு மார்க்கம் ஆக்கபூர்வமா னதாக அமையவும் மாட்டாது.

## கண்டதும் கேட்டதும்

செய்திக் கோப்பு

செங்குருவி

### ● யார் கூறுவது சரியானது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் மே 18ம் திகதி அன்று யுத்த வெற்றியைப் பிரகடனம் செய்து உரையாற்றினார். அதன் போது இந்நாட்டில் சிறுபான்மை இனம் என்று எதுவும் இல்லை எனக் குறிப்பிட்டார். தொடர்ந்தும் கூறிவருகிறார். இக் கூற்று எதன் அடிப்படையில் கூறப்பட்டது என்பது கேள்வியை எழுப்புகிறது. இந்நாட்டில் உள்ள சகல தேசிய இனங்களினதும் சமத்துவத்தின் அடிப்படையிலா அல்லது பெரும்பான்மை இனமான சிங்கள இனத்துடன் ஏனைய சிறுபான்மைத் தேசிய இனங்களை அவற்றின் சகல தனித்துவங்களையும் இல்லாமல் செய்து ஒன்று கலக்கச் செய்யும் பேரினவாத சிந்தனையின் அடிப்டையிலா? அதே வேளை சிறுபான்மை இனம் என்று எதுவும் இல்லை என்று கூறுவது பச்சைப்பொய் என்று ஓய்வு பெற்றுச் செல்லும் பிரதம நீதியரசர் அண்மையில் கூறியுள்ளார். இருவரில் யார் கூறுவது சரியானது.

### ● மகா ஏமாற்றுக்காரருடன்

தமிழ் நாட்டின் மகா அரசியல் ஏமாற்றுக் காரரான மு.கருணாநிதியை அண்மையில் இலங்கைத் தமிழர்களின் அரசியல் ஏமாற்றுக்காரர்களான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் சம்மந்தன் தலைமையில் சென்று சந்தித்தனர். ஏன் எதற்காக. இலங்கைத் தமிழர்களை ஏமாற்றும் அடுத்த கட்டத்தை ஆரம்பிக்க கூட்டமைப்புத் தலைவர்களின் மீள் தொடக்கம் கபடதாரி கருணாநிதி முன்னிலையில் இருந்து ஆரம்பமாகி விட்டதா தமிழ் மக்கள் அவதானமாக இருக்க வேண்டிய தருணம் இது.

### ● தேசியக் கொடிகளும் வியாபாரமும்.

யுத்தம் முடிந்து விட்டதையும் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதையும் கொண்டாடும் வெற்றி விழாக்கள் இடம் பெற்று வருகின்றன. அவற்றின் தேசியக் கொடிகள் பெருமளவில் விற்பனை செய்யப்பட்டன. ஒரு கொடி 40 ரூபாவில் இருந்து 60 ரூபா வரை விற்கப்பட்டது பெரிய கொடிகள் 100 ரூபா வரை சென்றன. இவ்வாறு சிங்கக் கொடி வியாபாரம் ஒகோ என இடம் பெற்றது. மறுபுறத்தில் புலம் பெயர்ந்த நாடுகளில் இடம் பெற்ற ஆர்ப்பட்டங்கள் ஊர்வலங்களில் புலிக் கொடிகள் படங்கள் விற்றுக் கொள்ளப்பட்டன. ஐந்து ஈரோ மூன்று ஈரோ எனவும் விற்பனை செய்யப்பட்டன. தேசியங்களில் பெயரால் வியாபாராம் இடம் பெறுவது இது மட்டும் ஒரு சந்தர்ப்பம் அல்ல. அரசியல் வியாபாரம் உட்பட பெரும் பெரும் வியாபார சமாச்சாரங்கள் இடம் பெற்று வந்ததை யாவரும் அறிவர்.

### ● ஜனநாயகத்தின் போலிப் பெருமை

இந்தியாவின் 15வது பாராளுமன்றத்திற்கு புதிய சபாநாயகராக மீரா குமார் என்ற பெண் தெரிவாகி உள்ளார். பெண் என்பதுடன் அவர் ஒரு தலித் என்றும் குஞ்சம் கட்டி ஏடுகள் எழுதுகின்றன. இனம் மொழி மதம் சாதி பெண் வெளிநாட்டவர் போன்ற அடையாளங்களுடன் ஏற்கனவே பாராளுமன்றப் பதவிகள் வகித்தோர் பலர். நிலவுடைமை முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாத்து வரும் இந்திய பாராளுமன்ற ஆட்சிமுறைமையில் இவை எதுவும் அதிசயங்கள் அல்லவே. ஆனால் இந்திய உழைக்கும் மக்களையும் குறிப்பாகப் பெண்களையும் தலித் மக்களையும் தொடர்ந்து ஏமாற்ற இப் பதவிகள் பயன் உள்ளன என்பது தொடரும் உண் மையாகும்.


### ● அகாஷி ஏன் வருகிறார்?

யப்பானிய விஷேட தூதர் யசூசி அகாஷி வருகிறார். வவுனியா செல்கிறார் என்றெல்லாம் தமிழ் ஊடகங்கள் புதிர்போட்டு டமாரம் அடிக்கின்றன. இது அவரது 18வது பயணமாகும். இதுவரை அவரது பயணத்தால் தமிழ் மக்களுக்கு என்ன கிடைத்தது. அவரது பயணம் யப்பானிய முதலீட்டுக்கு வடக்கு கிழக்கில் மோப்பம் பிடிப்பதும் ஏற்கனவே ஒகோவென இடம் பெற்று வரும் வர்த்தக வியாபாரத்தை தக்க வைப்பதற்குமேயாகும் என்பதைத் தமிழ் மக்கள் விளங்கிக் கொண்டால் போதுமானதாகும்.

### ● யார் தியாகிகள் யார் துரோகிகள்?

அக்கினிப் புயல் சீமான் என்ற சினிமாக்காரர் தமிழினம் துரோகிகளால் தான் வீழ்ச்சி கண்டு வந்திருக்கிறது என்றும் மே 19ம் திகதி அறிவிப்பால் தமிழினம் செத்ததென்றும் பின் வந்த செய்தியால் உயிர் பெற்றதென்றும் உளறி இருக்கிறார். இலங்கைத் தமிழர் மத்தியில் இந்த துரோகிகள் தியாகிகள் விடயம் புதிய ஒன்றல்ல. அதற்கு தனி வரலாறே இருக்கிறது. அது ஒரு கட்டத்தில் தியாகிகளானவர்கள் மறுகட்டத்தில் துரோகியாக்கப்பட்டனர். ஆனால் இன்று ஒட்டுமொத்தமாகவே தமிழ் மக்கள் தமிழ்த் தேசியவாதத்தலைமைகள் யாவற்றையுமே துரோகிகளாகவே காணுகின்ற நிலையே காணப்படுகிறது. ஆதலால் உங்கள் பிழைப்புக்காக எங்களிடையே மீண்டும் தியாகிகள் - துரோகிகள் சண்டையை மூட்டாதீர்கள். சகோதரப் படுகொலைக்கு திசை காட்டாதீர் என்றே தமிழ் நாட்டுச் சீமான் போன்ற சினிமாக்காரரை கேட்கின்றோம்.

# இந்திய தேர்தல் கூறும் செய்தி



இந்தியத் தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசிய இனப்பிரச்சனையை மையப்படுத்தித் தமது எதிர்ப்பார்ப்புகளை வளர்த்துக் கொண்டோருக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கும். அதே வேளை தேர்தல் முடிவுகளில் கேரள்த்திலும் மேற்கு வங்காளத்திலும் இடதுசாரிகளின் பாரிய பின்னடைவை விட முக்கியமான பெரிய அரசியல் மாற்றம் எதுவும் இல்லை எனலாம். காங்கிரஸின் கூட்டாளிகளாயிருந்து விலகிச் சென்ற கட்சிகள் தமிழகத்தில் இழப்பைச் சந்தித்துள்ளன. பெரும்பாலான மாநிலங்களின் முடிவுகள் அடிப்படையான மாற்றம் எதையும் குறிப்பதாகச் சொல்ல இயலாது. பாரதிய ஜனதா கட்சி வலியதாயிருந்த எந்த மாநிலத்திலும் அது பெரிய தோல்வியைத் தழுவவில்லை. ஆசனங்களின் எண்ணிக்கையை விடுத்து வாக்குகளின் விகிதாசாரத்தை ஆராய்ந்தால் காங்கிரஸ் பெற்ற வெற்றியின் அளவு மேலோட்டமாகத் தெரிவதை விடச் சிறியதாகவே தெரியும். தேர்தல்களை யார் எப்படி வெல்லுகிறார்கள் என்ற கணக்கு வழக்குகள் பற்றி ஆராய்ந்தால் பணத்தை வாரி இறைக்காதவர்களுள் இடதுசாரிகள் குறிப்பிடத்தக்க பெரும்பான்மையினராக இருப்பர். அது இன்னமும் இடதுசாரிகளின் சாதகமான அம்சம்.

மும்பாய்ப் பயங்கரவாதத்தைத் தேர்தல் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துகிற பாரதிய ஜனதா கட்சியின் உபாயம் அதிகம் பயனளிக்கவில்லை. ஏனெனில் அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்புக்கான கடுமையான புதிய சட்ட விதிகளை அறிமுகம் செய்துள்ளது. அது எங்கே எவருக்கெதிராகப் பயன்படும் என்கிறது வேறு விடயம். பாரதிய ஜனதா கட்சி காங்கிரஸ் கூட்டணியின் பொருளாதாரக் கொள்கையையோ அயற்கொள்கையையோ அமெரிக்காவுடனான புதிய நெருக்கத்தையோ எதிர்க்கவில்லை. பாரதிய ஜனதா கட்சியின் வெளிவெளியான இந்துத்துவ மத வெறிக் கொள்கையை விட்டால் உண்மையிலேயே இரண்டு கட்சிகளும் ஒரே வகையான வர்க்கங்களையே அடையாளப்படுத்துகின்றன. பாரதிய ஜனதா கட்சி இருபதுக்கும் மேலான ஆசனங்களை இழந்ததுடன் அதற்குக் கிடைத்த வாக்குகளின் தொகையிலும் ஒரு குறிப்பிடத்தக்க சரிவு இருந்தது. எனினும் இது அக் கட்சியின் வீழ்ச்சியாகிவிடாது. அதற்குப் பின்னாலிருந்து செயற்படும் மதவாதப் பிற்போக்குச் சிந்தனை இன்னமும் குஜராத் கர்நாடகம் உட்பட பல மாநிலங்களில் மிக வலுவாகவே உள்ளது. எனினும் மும்பாயைத் தலைநகரமாகக் கொண்ட மகாராட்டிரத்தில் அதன் தோல்வி கணிசமானதும் முக்கியமானதுமாகும். இது ஒரு நல்ல அறிகுறி. காங்கிரஸ் சென்ற தேர்தலில் பெற்றதை விடச் சிறியளவு கூடுதலான வாக்கு வீதத்தையே பெற்றுள்ள போதும் அதன் ஆசனங்களில் எண்ணிக்கை அறுபதாற் கூடியுள்ளமை கவனிக்கத்தக்கது. இது போன்ற பெரிய அலைகள் தொகுதிவாரித் தேர்தல் முறையில் நாம் காணக்கூடியனவே. ஒரு சில சதவீதமான வாக்காளர்களது மனமாற்றம் மட்டுமே ஒரு கட்சியைப் பெரும்பான்மையாக்கவோ சிறுபான்மையாக்கவோ வல்லதாக இருந்துள்ளது.

தமிழகத் தேர்தல் முடிவுகள் தமிழகம் இன்னமும் தி.மு.க.- அ.தி.மு.க. என்கிற இரண்டு ஊழல் மிக்க கட்சிகளின் தலைமைகளின் கீழான வணிகமாகவே தொடருவதை உறுதிப்படுத்தியுள்ளது. சந்தர்ப்பவாதக் கூட்டுக்களும் அடிப்படையான கொள்கைகளில் உடன்பாடில்லாத கட்சிகளால் உருவாக்கப்படும் கூட்டணிகளும் தேர்தல்களை வெல்லுவதற்குப் போதுமானவையல்ல. 1998ல் மூன்றாவது அணி பற்றி இருந்த எதிர்ப்பார்ப்புக்கள் கூட இம்முறை இருக்கவில்லை என்பது தெளிவு. ஏனெனில் தெளிவான ஒரு வேலைத்திட்டமும் இல்லாமலே உருவான இக் கூட்டணி அரசாங்கத்தை அமைக்கக் கூடிய மாற்றுச் சக்தி அல்ல என்பது போக அதில் இணைந்த சாதிக் கட்சிகளும் பிரதேசக் கட்சிகளும் தேவை .வந்தால் பா.ஜ.க. வுடனே காங்கிரஸுடனே இணையத் தவறா என்பது தொடக்கத்திலிருந்தே பகிரங்கமான உண்மை. பாராளுமன்ற கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டினதும் முக்கியமாக சி.பி.எம்மின், சரிவு ஒரு முக்கியமான அரசியற் பாடமாகும். இக் கட்சிகள் கூட்டணி அமைத்துள்ள மேற்கு வங்கம், கேரளம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் திரிபுராவில் மட்டும் இடதுசாரிகள் பின்னிடைவைச் சந்திக்கவில்லை. கேரளத்தில் சி.பி.எம். அடியாட்கள் செயற்பட்டதன் அறுவடையாக இத்தேர்தல் முடிவைக் கூறலாம். படு பிற்போக்குவாதியான மம்தா பனர்ஜி ஏழை பங்காளியாக வேடமிட்டு நடந்ததை மக்கள் அறியாதவர்களல்ல. எனினும் சி.பி.எம்மின் மாநிலத் தலைமை மீதான வெறுப்பு குறிப்பாக முதல்வர் புத்ததேவ் பட்டசார்யா மீதான வெறுப்பு மம்தாவுடைய வெற்றிக்கு முக்கிய பங்களித்தது. பாராளுமன்ற இடதுசாரிகளால் இந்த வீழ்ச்சியினின்று மீள முடியுமா என்பது முக்கியமான கேள்வி. ஏனெனில் இது வரை முற்குறிப்பிட்ட மூன்று மாநிலங்கள் தவிர்ந்த மாநிலங்களில் சி.பி.ஐ. சி.பி.எம் இரண்டுமே குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணவில்லை. மாறாக மாஓவாதிகளும் பிற மாக்சிச லெனினிச வாதிகளும் வெகுசன மட்டத்தில் பரவலான வளர்ச்சி கண்டுள்ளனர். பாராளுமன்ற இடதுசாரித் தலைவர்கள் தங்களது பாராளுமன்றப் பாதையைக் கைவிட்டு வெகுசன அரசியல் இயக்கத்திற்குச் செல்வார்கள் என்பது ஐயமானது. எனவே கட்சித் தொண்டர்கள் அதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்து ஒரு பரந்துபட்ட இடதுசாரி, ஜனநாயக வெகுசன முன்னணியைக் கட்டியெழுப்புவது பற்றிச் முடிவெடுக்க வேண்டும். அதற்கு மாக்சிச-லெனினிசவாதிகளும் ஒத்துழைக்க வேண்டும்.

எதிர்வரும் ஆண்டுகளில் இந்தியாவை உலகமயமாக்கலுக்குள் தள்ளி அமெரிக்காவின் அடிமையாக மாற்றும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுவது உறுதி. எனினும் உலகப் பொருளாதார நெருக் கடியின் பாதிப்புக்கள் மேலும் மோசமாகும். இச்சூழலில் பாராளுமன்ற அரசியல் மூலம் மக்களின் உரிமைகளை வெல்ல இயலாது. என வேதான் பரந்துபட்ட ஐக்கியம் முக்கியமாகிறது. தமிழகத் தேர்தல் அரசியலிலோ இந்திய அரசியலிலோ நம்பிக்கை வைத்துத் தமிழக மக்களே வழிகாணமுடியாத ஒரு சூழலில் இலங்கைத் தமிழரும் புலம்பெயர்ந்தோரும் தமிழகத்தின் அரசியற் கூத்தாடிகளிடம் தாம் மேலும் ஏமாறுவதற்கு இடமில்லை என்பதை இனியாவது ஒரு பாடமாகக் கொள்ள இத் தேர்தல் உதவ வேண்டும்.

நரசிம்மா

# ஆள் அமைப்பு ஆளுமை 4

சி.சிவசேகரம்

## உயர் கல்வியும் தொழில்களும்

உயர்கல்வி நிறுவனங்கள் பல வகைப்படும். சிலவற்றில் ஒரு குறிப்பிட்ட தொழிலுக்குத் தொடர்பான முறையிற் கல்வி வழங்கப்படுகிறது. வேறு சிலவற்றில் அது பெருமளவும் ஒரு தொழிலுக்கான பயிற்சியாக அமையும். பல்கலைக்கழக கல்வியில் மேற்குறிப்பிட்ட தன்மையைக் கொண்ட கல்வி நெறிகளும் உள்ளன. விரிந்த நோக்குடன் குறிப்பிட்ட ஒரு துறை சார்ந்த அறிவு விருத்திக்கான கல்வி நெறிகளும் உள்ளன. எனினும், உயர்கல்வ் நிறுவனங்களில் வழங்கப்படுங் கல்வி பாடசாலைக் கல்வியைப் போலன்றி மாணவரின் சுய முயற்சி மூலமான அறிவு வளர்ச்சியையும் வேண்டி நிற்கிறது. இன்று உயர்கல்வித் துறையின் சீரழிவால் இவ்வாறான சுயமுயற்சி குறைந்து போவது உண்மையே. எனினும் உயர்கல்வி என்பது முதிர்ச்சி பெற்ற இளையோருக்கானது என்பது கவனத்திற்குரியது.

ஒரு மாணவர் ஒரு மருத்துவராகவோ தொழில்நுட்பவியலாளராகவோ வழக்குரைஞராகவோ வருவதற்கான பயிற்சி பெறும் போது அந்தந்தத் துறைசார்ந்த சில நடத்தை முறைகளிலும் பயிற்றப் படுகிறார். அவ்வாறான பயிற்சி தொழில்சார்ந்த நடத்தையை மட்டுமன்றித் தனிப்பட்ட வாழ்க்கையிலும் சில மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இது கல்வி நிறுவனம் தனது கல்வி புகட்டற் செயற்பாடுகளின் போக்கில் ஒவ்வொரு மாணவரது ஆளுமையிலும் ஏற்படுத்தும் தாக்கம் எனலாம். சில உயர்கல்வித் துறைகளில் நேர ஒழுங்கு, திட்டமிடல் போன்றவற்றுக்கு அதிக அழுத்தம் உள்ளது. சில துறைகளில் பாதுகாப்பு, சுத்தம் பேணுதல் போன்றவை வலியுறுத்தப்படலாம். சிலவற்றிற் தகவல்களைச் சேகரித்தலும் நினைவில் வைத்திருத்தலும் முக்கியமாகலாம். எல்லாவற்றையும் விட எந்த உயர்கல்வி நிறுவனமும் மாணவர்கட்கு வழங்கக் கூடிய முக்கியமான பண்புகள் சுயமுயற்சியும் தன்னம்பிக்கையுமே என்பேன். ஏனெனிற் பாடசாலையிலிருந்து சமூகப் பொறுப்புடைய தொழில் எதற்கேனும் போவதற்கான இடைக் காலத்தில் பெறப்படும் உயர் கல்வி, பெற்றோர், ஆசிரியர் என்போரது பாதுகாவலுக்கும் கண்காணிப்புக்கும் வழிநடத்தலுக்கும் பழக்கப்பட்ட ஒரு சூழலிலிருந்து முற்றிலும் தனது முயற்சியில் தங்கியிருக்கவும் எந்த விதமான தனிமனித உத்தரவாதங்களும் இன்றிச் செயற்படவுந் தேவையான ஒரு சூழலுக்குமிடையிலான பயிற்சியாகவும் அமைய வேண்டும்.

உயர்கல்வி இவ்வாறான உத்தரவாதங்களுடன் வருவதில்லை. எப்போதும் மேற்கூறிய எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்வதுமில்லை. எனினும் அது அதற்கான வாய்ப்புக்களை வழங்குகிறது. உயர்கல்வி நிறுவனங்களிற் சமூகத்தின் வேறுபட்ட பிரிவுகளிலிருந்து வருகிற இளைஞர்கள் ஒருவரை ஒருவர் அறியும் வாய்ப்பு உள்ளது என்பது போல் மாணவர்கள் முற்றிலும் தமது முடிவுகளின் அடிப்படையிற் காரியமாற்றக் கூடிய பலவேறு கூட்டுச் செயற்பாட்டுக்குமான வாய்ப்புக்களையும் வழங்குகிறது. அவை விளையாட்டுக்கள், பொழுது போக்கு, சமூகச் செயற்பாடுகள், சமயம், கலை இலக்கிய முயற்சிகள், அரசியல் போன்ற பல்வகையான துறைகளையும் உள்ளடக்குவன. அவற்றிற் பங்குபற்றுவதன் மூலம் மாணவர்களது ஆளுமை பெறும் விருத்தியானது ஏட்டுக் கல்வியும் கல்வி நெறிக்குரிய பயிற்சியும் வழங்கக் கூடியவற்றினும் முக்கியமானது எனலாம்.

எனினும் உயர்கல்வி நிறுவனங்களிற் பெருவாரியான மாணவர்கள் மேற்கூறியவாறான வாய்ப்புக்களைப் பயன்படுத்துவது குறைவு. சிலரிடையே எதிர்தாலத் தொழில் வாய்ப்புக்கட்குப் பயனளிகக் கூடிய விதமாக மாணவர் கழகங்களில் முக்கிய பொறுப்புக்களை ஏற்கிற மனோபாவத்தைக் காணலாம். இவ்வாறான சுயநலம் ஒரு குழுவாகவோ அமைப்பாகவோ செய்படுவதற்குத் தடையாகவே உள்ளது. அதேவேளை கூட்டு முயற்சிகளிற் தம்மை விளம்பரப் படுத்தாமலும் சிலசமயம் தமது பங்களிப்பின் சுவடே தெரியாத விதமாகவும் பெரும் பங்காற்றியவர்களையும் அறிவேன். எனினும், மாணவர் அமைப்புக்கள் சுறுசுறுப்பாகச் செயற்படத் தொடங்குகிற போது, ஒரு வகையான உற்சாகம் பலரையுந் தொற்றிக் கொள்கிறது. தாமும் ஒரு முக்கியமான பணியிற் பங்காளிகள் என்கிற உணர்வு அவர்களை ஊக்கத்துடன் செயற்பட உந்துகிறது. அதன் விளைவாகத் தனக்காக என்ற எண்ணத்திலல்லாமல் தான் சார்ந்த கழகத்தினது அல்லது குழுவினது சார்பானதும் பொது நன்மைக்கானதும் என்ற எண்ணத்தில் அவர்கள் செயற்படுகின்றனர். இவ்வாறு விருத்தி

> **உயர் கல்வி என்பது முதிர்ச்சிபெற்ற இளையோருக்கானதாகும். எந்த உயர் கல்வி நிறுவனமும் மாணவர்களுக்கு வழங்கக் கூடிய முக்கியமான பண்புகள் சுய முயற்சியும் தன்னம்பிக்கையும் ஆகும்.**

பெறுகிற சிந்தனையுஞ் செயல்முறையும் ஒருவரது ஆளுமையின் ஆக்கமான வளர்ச்சிக்கு உதவுகின்றன.

அதேவேளை தமக்கான விளம்பரம், புகழ், சுயலாப நோக்கங்களுடன் செயற்படுவோர் சுயமேம்பாட்டை விட வேறெதிலுங் கவனமற்றோராகவே விருத்தி பெறுவர். இத்தகையோராற் பொது நன்மைக்காகச் செயற்பட இயலாது போவதுடன், பொது நன்மைக்காகச் செயற்படுகிற பிறரது நோக்கங்களையும் மாசுபடுத்திக் காட்டுகிற போக்கும் இவர்களிடையே விருத்தி பெறுகிறது.

மேற்கூறியவாறான குறைபாடுகட்கு முக்கியமான காரணம் “தலைமைத்துவம்” என்பதைப் பலரும் தலைமைப் பதவிகளுடன் குழப்பிக் கொள்வது தான் என நினைக்கிறேன். நல்ல தலைமைத்துவம் என்பது பதவியும் அதிகாரமும் பற்றியதல்ல. அது கூட்டுப் பொறுப்புக்களை ஏற்பதுடன் அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிகளைப் பிறரது ஒத்துழைப்புடனும் கலந்தாலோசனையுடனும் முன்னெடுக்கும் ஆற்றல் பற்றியது. நல்ல தலைமைத்துவப் பண்புடையோர் பதவிகளில் இல்லாமலேயே பெருங் காரியங்களை நிறைவேற்ற இயலும். உயர்கல்வியின் பின்பு தொழில்கட்குச் செல்வோரை விட உயர்கல்வி வாய்ப்பின்றித் தொழில்கட்குப் போவோரே அதிகமானோராயுள்ளனர். அவர்களது தொழில்களின் தன்மைக்கமைய அவர்கள் தமது பணிகட்காகப் பயிற்றப்படலாம் அல்லது தொழிலின் போக்கிலேயே தம்மைப் பயிற்றிக் கொள்ளலாம். பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் எவரையும் தமது உற்பத்திப் பெருக்கத்திற்கோ லாபத்திற்கோ உதவுகிற முறையிற் பயன்படுத்துவதால் அங்கு ஒருவரது ஆளுமை விருத்தி ஒருபுறம் தொழிலின் தன்மையால் முடிவாகிறது. பல இடங்களில் ஒரு ஊழியரது சுயாதீனமான சிந்தனையுஞ் செயற்பாடும் ஊக்குவிக்கப்படுவது இல்லை எனலாம். தொழில் நிறுவனங்கள் இடப்பட்ட பணியைச் சரிவரச் செய்வதற்கு மேலாக எவரிடமும் எதையும் எதிர்பார்ப்பது குறைவு. அது நிருவாக, முகாமைத்துவப் பொறுப்புக்களில் உள்ளோரிடம் மட்டுமே நிறுவனங்கள் அவ்வாறு எதிர்பார்க்கின்றன. மற்றப்படி, ஊழியர்கள் பொதுப்பட உழைப்புக்கான மனித இயந்திரங்களாகவே கருதப்படுகின்றனர். இவ்வாறான சூழ்நிலை ஊழியரிடையே தமது தனிப்பட்ட நன்மைக்காக அல்லாது இடப்பட்ட பணிக்கும் மேலாக எதையுஞ் செய்யத் தூண்டாது.

சில தொழில் நிறுவனங்கள் உழைப்பாளிகளும் நிறுவனத்தின் பங்காளிகள் என்கிற உணர்வையோ நிறுவனத்தை ஒரு குடும்பமாகவும் உழைப்பாளிகள் அதன் உறுப்பினராகவும் எண்ணுகிற மனநிலையை திட்டமிட்டே உருவாக்குகின்றன. இது யப்பானிய முதலாளிய நிறுவனங்கள் நீண்ட காலமாகக் கடைப்பிடித்த ஒரு நடைமுறை. இது யப்பானிய நிலவுடைமைச் சமூகத்தில் இருந்து வந்த அரசவிசுவாசம், உயர்ந்தோரைப் பணிதல் போன்ற விழுமியங்கள் யப்பானிய முதலாளிய நிறுவனங்களால் தமது தேவைகட்கமைய முன்னெடுக்கப்பட்டன. முன்னேறிய தொழில் விருத்தி பெற்ற முதலாளிய நாடாகிய பின்பும் யப்பானிய முதலாளியம் நிலவுடைமைச் சமூகத்தின் நிலப்பிரபு-பண்ணையாள் என்கிற உற்பத்தி உறவில் இருந்து வந்த தனிப்பட்ட விசுவாசம் தொடர்பான சில கூறுகளை வலுவாகப் பேணியது. ஒரு முதலாளிய நிறுவனம் பணியாளர்களை வேலை நீக்கஞ் செய்ய வேண்டிய நிலைக்கு உள்ளாகும் வரை இந்த விதமான விசுவாசம் கேள்விக்கப்பாற்பட்டதாகவே இருக்கும். சில யப்பானியக் கம்பனிகள் இந்த விதமான அணுகுமுறையை அயல்நாடுகளில் உள்ள கிளைகளிலும் பயன்படுத்தியுள்ளன. யப்பானியச் சமூக அமைப்பில் ஆழ வேரூன்றியுள்ள சமுதாய விழுமியங்கள் இன்னொரு பண்பாட்டுச் சூழலில் அதே அளவுக்கு வெற்றியளிப்பதில்லை. எனினுஞ் சில உள்நாட்டு முகாமைத்துவ நிபுணர்கள் யப்பானிய முகாமைத்துவத்தின் சில பண்புகளை நமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதற்கு முயன்று வருகின்றனர்.

எவ்வாறாயினும் தொழில் நிறுவனங்கள் என்கிற அமைப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் அவற்றின் செயற்பாடுகளின் தன்மை சார்ந்தும், அவற்றுக்குரிய சமூகச் சூழல் சார்ந்தும், அதேவேளை, ஒவ்வொன்றுக்குமுரிய குறிப்பான இயல்புகளையொட்டியுஞ் சில நடத்தை நெறிகளும் விழுமியங்களும் அமைகின்றன. இவை எந்தவொரு தொழில் நிறுவனத்தினதும் அதிகார அடுக்கிற்கமைய அதன் ஊழியர்களின் நடத்தையை நெறிப்படுத்துகின்றன. சில தொழில்சார் நிறுவனங்களின் தொழிலாளர்கட்கான சமூக நலன் அமைப்புக்களும் விளையாட்டுக் கழகங்களும் உள்ளன. பலவற்றின் தொழிலாளர்கள் நிறுவனத்திற்குப் புறம்பாகவே அவ்வாறான அமைப்புக்களில் ஈடுபட இயலுமாகிறது.

ஊழியர்களின் ஆளுமை விருத்தியிற் தொழிற் சங்கங்களின் பங்கு முக்கியமானது. எவரும் தனது உரிமைகட்காகப் போராடுவதுடன் மட்டுமன்றிச் சக மனிதருக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராகவும் போராடுகிற மனப்பாங்கு தொழிற்சங்கச் செயற்பாடுகளின் மூலம் இயலுமாகிறது. தொழிற் சங்கங்களின் மூலம் தனிமனித நலன்களை ஒரு சமூக வர்க்கத்தினது நலன்களின் ஒரு பகுதியாக உணரும் வாய்ப்பு உருவாகிறது. இவ்விடத்து மாணவர் சங்கங்களைப் போலன்றித் தொழிற்சங்கங்கட்கு ஒரு நிலையான நீண்டகால இருப்பும் பார்வையும் உள்ளமை கவனிக்கத்தக்கது.

எவ்வாறாயினும் தொழிற்சங்கங்கள் தமது உறுப்பினர்களது அதிகாரத்துக்குட்பட்ட அமைப்புக்களாக அல்லாது அவர்களிடமிருந்து அந்நியப்பட்ட ஒரு அதிகாரமாகவோ நிருவாக இயந்திரமாகவோ மாறுகிற வாய்ப்பு அதிகம். அவ்வாறான சூழல்களிற் தொழிலாளரது வர்க்க உணர்வுக்கும் அது சார்ந்த ஆளுமை விருத்திக்கும் தொழிற் சங்கம் தீமை செய்யலாம். தொழிற்சங்கத் தலைவர்கள் கம்பனி அதிகாரிகள் போலவும் அவர்களை விட மோசமாகவும் அதிகாரத் திமிர்பிடித்தோராக மாறவும் இடமுண்டு. மனிதர் சுயவிருப்பின் பேரில் இணையும் அமைப்புக்களில் தொடர்ச்சியான விவாதங்களம் கலந்துரையாடல்களும் பலவேறு மட்டங்களிலும் தொடர்ந்தும் இருந்து வருவதன் முக்கியத்துவம் அந்த அமைப்புக்கள் சார்ந்தது மட்டுமல்ல, அதன் உறுப்பினர்களது ஆளுமை விருத்தி சார்ந்ததுமாகும்.

வளரும்

# இலங்கையில் இந்திய அமெரிக்க மேலாதிக்கப் போட்டியை மறைக்க சீனப் பூச்சாண்டி!

மே மாத முற்பகுதியில் லண்டன் டைம்ஸ் ஏட்டிலும் அதன் இணையத்தளத்திலும் இலங்கையின் போர் முயற்சிகட்கு உறுதுணையாக நிற்பதும் உலக நாடுகள் அனைத்தையும் விடப் பெருமளவில் பொருளாதார உதவி வழங்கி வருவதும் சீனா தான் என்று வலியுறுத்தும் ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. வழமைபாக முற்போக்கான ஏகாதிபத்திய விரோதத் தகவல் எதையுமே தமிழாக்குவதில் தமிழ் ஊடகவியலாளர்கட்கு அக்கறையில்லை. உலக நிகழ்வுகள் பற்றிய கட்டுரைகள் பெரும்பாலும் ஏதாவது இந்திய இணையத் தளத்திலிருந்து அப்படியே எடுத்தாளப்பட்டு உரிய நன்றி கூறல் இல்லாமல் "நன்றி - இணையம்" என்ற சொற்களுடன் வெளிவருகின்றன. மேற்கூறிய கட்டுரை 10-05-2009 ஞாயிறு தினக்குரலில் மிகக் கவனமாகத் தமிழாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான அக்கறை பிற விடயங்களிலும் இனிமேற் கொண்டு காட்டப்படும் என்று எதிர்பார்ப்போமாக.

மேற்படி கட்டுரை கட்டுரையாளரான ஜெரமி பேஜின் சொந்தச் சரக்கல்ல. லண்டன் டைம்ஸ் ஒரு இடதுசாரி விரோத ஏடு. சீனாவும் ரஷ்யாவும் சோஷலிஸத்திலிருந்து விலகிய பின்பும் அவற்றைப் பற்றிய குரோதம் பாராட்டுகிற கட்டுரைகள் தொடர்ந்தும் அதில் வருவதற்கான காரணம் அமெரிக்க-மேற்கு ஐரோப்பிய உலக மேலாதிக்கத்திற்கு அவை சவாலாக இருப்பது தான். ஜெரமி பேஜ் என்றுமே முற்போக்கான பத்திரிகையாளராக அறியப்பட்டவரல்ல. மேற்கூறிய கட்டுரைக்கான தகவல்கள் ஒட்டு மொத்தமாக பி.ராமன் எனப்படும் முன்னாள் றோ உளவு நிறுவன ஆணையாளரின் மூலம் பெறப்பட்டவை என்று கட்டுரை மூலம் தெரிய வருகிறது. இந்திய-சீன உறவைச் சீரகுலைக்கும் விதமாகச் சீனாவைப் பற்றிய செய்தித் திரிப்பை நோக்கமாகக் கொண்டு நடத்தப்படுகிற "ஆய்வு நிறுவனங்கள்" மூன்றிலாவது ராமன் முக்கிய பொறுப்பில் உள்ளார். அவற்றுக்கான இணையத்தளங்கள் உள்ளன. அவை வழங்கிய தகவல்களைப் பயன்படுத்தியே காலஞ் சென்ற டி.சிவராம் உட்பட்ட தமிழ்த்தேசியவாதிகள் தங்களுடைய 'ஆய்வுகளை' வழங்கினர். அவற்றின் ஆதாரத்தின் மீது அமைந்த அரட்டைகளும் அரை உண்மைகளும் மறுபடியும் மறுபடியும் ஊதிப் பெருப்பிக்கப்பட்டு உண்மைகளாக முன்வைக்கப்படுகின்றன.

தமிழிற் சீனா பற்றிய விமர்சனம் முன்வைக்கப்படும் போது பொதுவாகவும் ரஷ்யா பற்றியவை முன்வைக்கப்படும் போது இடையிடையிலும் அவை சோஷலிச நாடுகள், கம்யூனிஸ்ற் ஆட்சிக்கு உட்பட்டவை என்பதற்கு அழுத்தந் தெரிவிக்கப்படுவது வழமையாகி விட்டது. அதன் நோக்கம் விளங்கிக் கொள்ளக் கடினமானதல்ல. எவ்வாறு திரிபுவாதிகளதும் சமசமாஜிகளதும் தவறுகளைக் காட்டி நேர்மையான இடதுசாரிகளையெல்லாம் களங்கப்படுத்தி வந்துள்ளார்களோ அவ்வாறே முதலாளியம் வேரூன்றி விட்ட சீனாவையும் முற்றாகவே முதலாளிய நாடாகி அல்லற்பட்டு அதிலிருந்து மீளப் பொருளாதாரத்தை அரசின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அந்தரித்து நிற்கும் ரஷ்யாவையும் காட்டி அவற்றின் குறைபாடான நடத்தையைச் சோஷலிஸ நாடுகளது நடத்தையாக அடையாளங் காட்டுவது விஷமத்தனமன்றி வேறல்ல. அதேவேளை சீனாவும் முன்னாள் சோவியத் யூனியனும் சோஷலிஸத்திலிருந்து விலகியதை முன்னிட்டு அவற்றடன் கண்மூடித்தனமான பகைமை பாராட்டுகிற இடதுசாரிகள் உள்ளனர். சீன-சோவியத் முரண்பாடு இருந்து வந்த காலத்தில் ஒரு தரப்பை ஆதரித்து மற்றதை விமர்சித்தவர்களுட் சிலர் அக்காலத்தில் இருந்தவாறே தமது பழைய பகைமைகளைப் பேணிவருகின்றனர். இத்தகையோர் சீனாவையோ ரஷ்யாவையோ யார் குற்றஞ் சாட்டினாலும் அதற்கான காரணகாரியங்களை ஆராயாமல் அவற்றை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வதையுங் காணலாம்.

நாம் உலகத்தை எந்த நிலைப்பாட்டிலிருந்து நோக்குகிறோம் என்பதைச் சார்ந்தே உலக நிகழ்வுகள் பற்றிய நமது மதிப்பீடுகள் அமைகின்றன. நமது நிலைப்பாடு எதுவாக இருந்தாலும் உண்மைகளை மூடி மறைக்கவும் புனைவுகளை உண்மையென்று பரப்புரை செய்யவும் நாம் முற்படுவோமென்றால், முடிவில் நாம் நம்மையே ஏய்த்துக் கொண்டோராவோம். தமிழ்த் தேசியவாதிகள் சிலர் இலங்கைத் தமிழரின் பிரதான எதிரி சீனாவே என்று காட்டுவதற்காக ராமன் போன்றோரது தகவல்களையும் ஏகாதிபத்தியவாதிகளதும் இந்திய மேலாதிக்கவாதிகளதும் புனைவுகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இப் போக்கு அண்மைக் காலத்தில் மிகவும் அதிகரித்துள்ளது. எனினும் அனைத்தினதும் சாராம்சம் பின்வருமாறு எனலாம்.

1. சீனா இந்தியாவுக்கு எதிரான மேலாதிக்கப் போட்டியில் இறங்கியுள்ளது.
2. சீனா இந்தியாவிற்கெதிரான கடல் முற்றுகை ஒன்றுக்கு ஆயத்தப்படுத்துகிறது.
3. சீனா இலங்கைக்குப் பேரழிவு ஆயுதங்களை வழங்கித் தமிழ் இன ஒழிப்பை மும்முரமாக ஆதரிக்கிறது.
4. சீனா இலங்கையின் சரிந்து விழும் பொருளாதாரத்தை நிலை நிறுத்த உதவி அதன் மூலம் இலங்கை மீது பூரண ஆதிக்கஞ் செலுத்த முயலுகிறது.
5. மேற்கூறிய காரணங்களாலேயே இந்தியா இலங்கை அரசாங்கத்தின் பேரினவாதப் போருக்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

மேற்கூறிய அடிப்படையிலேயே இந்தியா தனது அண்டை நாடுகளின் அமைதியைக் குலைக்கும் விதமாகக் கடந்த நாற்பதாண்டுகட்கும் மேலாக நடந்து கொண்டமையையும் சிலர் நியாயப்படுத்துகின்றனர்.

சீனா இதுவரை எந்த நாட்டின் மீதும் மேலாதிக்கஞ் செலுத்தவில்லை. சீனா சோஷலிச நாடாக இருந்த போது வகுக்கப்பட்ட அதன் அயற் கொள்கையில் இதுவரை எந்த மாற்றமும் இல்லை. இனி மாறலாம் என்பது வேறு விடயம். சாத்தியப்பாடுகளை எல்லாம் சமகால உண்மைகளாகக் கருதுவது அறிவுடைமையல்ல.

தன்னுடைய கடற் பகுதியிலேயே எல்லைத் தகராறுகளைப் பேசித் தீரக்க வேண்டும் என்பது சீனாவின் நிலைப்பாடாகத் தொடருகிறது. இதுவரை தனது எல்லைப்புற நாடுகள் எதன் மீதும் மேலாதிக்கஞ் செலுத்தாத ஒரு நாடாகச் சீனா இருந்து வந்துள்ளது. எனவே இந்து சமுத்திர தென்னாசிய வலயத்தில் மேலாதிக்கப் போட்டி என்று சில இந்திய மேலாதிக்கவாதிகள் அலறுவது திருடனே எல்லாரையும் முந்திக் கொண்டு "திருடன்! திருடன்!" என்று கூவுவது போன்றதே.

**-மோகன் -**

ஆபிரிக்கக் கரையோராம் முதலாக மியான்மார் வரையிலான பகுதிகளில் உள்ள நாடுகளில் சீனா துறைமுகங்களின் அபிவிருத்திக்கு உதவி வந்துள்ளது. அதற்கு நோக்கங்கள் உள்ளன. அதை வெறுமனே சீன மேலாதிக்கமென்று மொட்டையாக முடிவு காணாமற், சாத்தியமான காரணங்கள் ஒவ்வொன்றையும் ஆராய்வது அறிவுடைமையாகும்.

சீனாவின் ஏற்றுமதிப் பொருளாதார வளர்ச்சியால் எண்ணெய் முதலாகப் பலவேறு மூலவளங்களை இறக்குமதி செய்கிற தேவை ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் சீனாவைச் சூழப் பல இடங்களிலும் வலுப்பட்டு வருகின்றன. அண்மையிற் கூடச் சீனக் கடற்பகுதியில் அமெரிக்க இராணுவக் கப்பல் ஒன்று அத்துமீறி நுழைந்து சீனக் கடற்படையாற் தடுக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டது. எனினும் அமெரிக்கா பிற நாடுகளின் கடற் பிரதேசங்களை மதிப்பதாக இல்லை.

இந்தியாவை அமெரிக்காவுக்குக் கீழ்ப்பட்ட ஒரு பிராந்திய மேலாதிக்க வல்லரசாக்குகிற முயற்சிக்கு இந்திய ஆட்சியாளர்கள் மிகவும் உடந்தையாகவே நடந்து வந்துள்ளனர். இந்தியா-இஸ்ரேல்-ஈரான் என்ற அடிப்படையில் அமெரிக்கா திட்டமிட்டு வந்துள்ள ஆசிய இராணுவக் கூட்டணிக்கு ஈரான் மட்டுமே இதுவரை தடையாக இருந்து வந்துள்ளது. இப் பின்னணியிற் சீனாவின் கடல் வணிகம் ஏதாவது காரணங் காட்டித் தடைகட்கு உட்படலாம. அத்தடை இந்து சமுத்திரத்தின் எப்பகுதியிலும் நிகழலாம். அவ்வா

> சீனா சோஷலிசத்திலிருந்து மாறி விட்டாலும் அதன் வெளிநாட்டுக் கொள்கை மேலாதிக்கப் போக்காக மாறவில்லை. சீனாவை எதிரியாகக் காட்டுவோர் மாக்சிச விரோதிகளும் அமெரிக்க – இந்திய மேலாதிக்க சார்பாளர்களுமேயாவர்.

றான நிகழ்வுகள் சென்ற நூற்றாண்டின் போர்கட்குக் காரணமாயிருந்துள்ளன. சீனா அவ்வாறான ஒரு சூழ்நிலையை மட்டுமன்றி அமெரிக்கா சீனாவுக்கு வேண்டிய கடல்வழிப் பாதைகளிற் தடைகளை விதிக்கக் கூடிய பல்வேறு சாத்தியப்பாடுகளை நாம் புறக்கணிக்க இயலாது.

சீனாவின் ஒரு பகுதியான தாய்வான் 1949 முதல் இன்னமும் அமெரிக்க ஆதிக்கத்தில் உள்ளது. திபெத்ததில் அமெரிக்கா பிரிவினைவாதிகளை ஊக்குவிக்கிறது. வடமேற்கில் மத அடிப்படையிற் தேசியவாதிகளைத் தூண்டி விடுகிறது. இவற்றையெல்லாம் கணிப்பிற் கொள்ளுகிற போது சீனா தன் பாதுகாப்புப் பற்றி எச்சரிக்கையின்றி இருக்க இயலாது என்றே விளங்கும்.

இதுவரை சீனா தனது பொருளாதாரச் செல்வாக்கை வலுப்படுத்துவதிலேயே முக்கிய கவனங்காட்டி வந்துள்ளது. அத்துடன் இந்து சமுத்திரம் பிராந்தியத்தில் அமெரிக்கா கடல்வழிப் பாதை எதையும் மறிக்க முற்பட்டாற் தனது கப்பல்கட்குத் துறைமுகங்களும் மற்றும் கடல்வழிகளும் பண்டங்களைக் கொண்டு செல்லத் தரை வழிகளும் தேவை என்கிற அடிப்படையிலேயே சீனா இப்பிராந்தியத்தில் உள்ள சில நாடுகளில் துறைமுகங்களை விருத்தி செய்ய உதவுவதன் மூலம் தனது கப்பல்கட்கான துறைமுக வசதிகட்கு ஒரு உத்தரவாதத்தைப் பெற முயலுகிறது. இவற்றில் எந்தத் துறைமுகந் தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட நாட்டை வற்புறுத்துகிற விதமான உடன்படிக்கை எதுவும் இல்லாததோடு சீனக் கடற்படைத் தளமாகப் பயன்படுத்தப்படுவதற்கான எந்தவிதமான சாடையுமே இல்லை.

சீனா இலங்கைக்கு அம்பாந்தோட்டைத் துறைமுக விருத்திக்கு வழங்குகிற கடனும் அதை நிர்மாணிக்கும் பணியும் முற்றிலும் வணிக அடிப்படையிலானவை. அந்தக் கடன்தொகை அங்கீகரிக்கப்பட்ட ஆண்டை வைத்து, இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகளில் சீனா யப்பானையும் மீறி விட்டது என்று ஜெரமி பேஜ் எழுதியிருந்தார். அவருடைய செய்தித் திரிப்புகளை மறுத்துச் சீனா வெளி அலுவல் அமைச்சு கடும் மறுப்புத் தெரிவித்திருந்தது.

எனினும் ராமன், பேஜ் போன்றோர் பரப்புகிற வதந்திகள் போய்ச் சேர இலக்குவைக்கும் பல இடங்களில் சீனாவின் மறுப்புப் பற்றியோ உண்மை நிலைமைகள் பற்றியோ அக்கறை காட்டப்படுகிறது இல்லை.

இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்காகப் பலவேறு நிதி வழங்கல்களை மேற்குலகு நிறுத்துவதாகக் கூறிச் சில நிதி வழங்கல் வசதிகளை இடைநிறுத்தினாலும் யப்பான் தொடர்ந்தும் நிதி வழங்கி வந்துள்ளது. இது அமெரிக்க ஆசியுடன் நடக்கிறதா, அல்லது அமெரிக்காவை மீறி நடக்கிறதா என்று நாம் சிந்திக்க வேண்டும்.

சீனா இலங்கைக்குப் பொருளாதார விருத்திக்கு உதவுவது பற்றிச் சீனப் போர் இலங்கையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் இந்தியா மேற்கொள்ளுகிற முயற்சிகள் பற்றிப் பேசுவதில்லை. சம்பூரில் இந்தியா நிறுவவுள்ள அனல்மின் நிலையம், மோதல்கள் வலுப்பெற்று இலங்கை ராணும் சம்பூரைப் பிடித்தவுடனேயே அங்கீகரிக்கப்பட்டது. அத்துடன் அப்பகுதி உயர்பாதுகாப்பு வலயமாகவும் அறிவிக்கப்பட்டது. வடமேற்குப் பகுதியில் இந்தியா எண்ணெய் அகழ்வுக்கு உடன்படிக்கை செய்ததை எதிர்க்காமல் சீனாவுடனான உடன்படிக்கைகளை எதிர்ப்போரது நோக்கங்கள் கவனத்துக்குரியன.

இலங்கையில் ராணுவ மேலாதிக்கத்திற்கான போட்டி அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையிலானதாகவே கடந்த பல தசாப்தங்களாக இருந்து வந்துள்ளது. கொலனியத்தின் இறுதிச் சுவடுகள் போன பின்பு இலங்கை மண்ணில் அடி பதித்த படைகள் இந்தியாவினதும் அமெரிக்காவினதும் அல்லாமல் வேறெந்த நாட்டினவையும் அல்ல. இவற்றில் இந்தியாவினது படைகள் 1971ல் நேரடியான குறுக்கீட்டுக்கு ஆயத்தமாய் இருந்தன. 1987ல் நேரடியாகக் குறுக்கிட்டன.

இந்தியா இலங்கையின் உள் அலுவல்களிற் குறுக்கிடுவதற்குச் சீனா மிரட்டல் காரணமாக இருக்கவில்லை. அது இப்போது ஒரு வசதியாக்கப்பட்டுள்ளதே ஒழிய உண்மையான காரணங்கள் வேறு. இலங்கையின் அணிசேராக் கொள்கை முற்று முழுதாக இருப்பதை இந்தியா விரும்பவில்லை. இந்தியாவின் தரப்பிலே இலங்கை நிற்க வேண்டும் என்ற நோக்கத்திற்கு முரணாக 1962 வரை எதுவும் நடக்கவில்லை. எனினும் இந்திய-சீன எல்லை மோதலின் போதும் 1971இல் இந்திய-பாக்கிஸ்தான் மோதலின் போதும் இலங்கை வகித்த நடுநிலையை இந்தியா வெறுத்தது. குறிப்பாக மேற்குப் பாக்கிஸ்தானில் இருந்து கிழக்குப் பாக்கிஸ்தானுக்கு (இன்று பங்களாதேஷ்) பாக்கிஸ்தான் விமானங்கள் இலங்கையில் எரிபொருள் நிரப்ப நின்று போனதை இந்தியா வெறுத்தது. எனினும் ஒரு நேச நாடு தனது ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குத் தனது படைகளைக் கொண்டு செல்ல உதவுவது இந்திய-பாக்கிஸ்தான் முரண்பாட்டில் ஒரு பக்கம் சார்வதாகி விடாது. எனினும் இந்தியாவின் மேலாதிக்கப் பார்வையில் அந்த நியாயம் விளங்கியிராது. எவ்வாறாயினும் இந்தியா இலங்கையின் உள் அலுவல்களிற் தலையிடுவதில் எச்சரிக்கையுடனேயே இருந்து வந்தது. ஆனாலும் தமிழ்த் தேசியவாதிகள் இந்த அதிருப்தியைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்தும் நோக்கத்துடனே இருந்தனர். இந்தியா இலங்கையிற் குறுக்கிடுவதற்கான சூழ்நிலை தமிழர் மீதான அக்கறையாலன்றி ஜே.ஆர்.ஜயவர்தன ஆட்சி அமெரிக்காவின் சார்பான திசையில் அயற் கொள்கையை நகர்த்திய போது ஏற்பட்டது. இந்தியா பற்றித் தமிழர் மனதில் உருவாக்கப்பட்ட உன்னதமான படிமம் 1987ல் தான் உச்சத்தை எட்டியது. ஆனால் 1988 அளவிலேயே அது நொறுங்கி விழுந்தது.

1987இல் இந்தியா இலங்கைத் தமிழருக்குச் செய்த துரோகத்திற்கு என்ன சீனத் தலையீடு காரணமாயிருந்தது என்று யாருமே சொல்வதில்லை. ஏனென்றால் சீனா 1952 முதல் எப்போதுமே இலங்கையுடன் நட்புறவைப் பேணி வந்தது. 1957இல் ராஜதந்திர உறவுகள் ஏற்பட்ட பின்பு அது வலுப்பட்டது. 1970களில் சீனா ஏகாதிபத்திய விரோத கொலனிய விரோத விடுதலைப் போராட்டங்களை வலுப்படுத்து முகமாகச் சில ஆபிரிக்க நாடுகட்குப் பெரிய பொருளாதார உதவிகளை வழங்கியுள்ளது. இவை எல்லாம் சீனாவின் மேலாதிக்க நோக்கிலானவை என்று யாராலுமே குற்றஞ்சாட்ட இயலவில்லை.

சீனாவின் அயற் கொள்கையில் சர்வதேச நிகழ்வுகளும் போக்குக்களும் முக்கியமான பங்களித்துள்ளன. எப்போதுமே அமெரிக்கா பற்றிய ஒரு எச்சரிக்கை உணர்வு இருந்து வந்துள்ளது. 1961க்குப் பிறகு சோவியத் யூனியனுடனான முரண்பாடு 1967இல் சோவியத் யூனியனுடனான செக்கோஸ்லவாக்கியாவுக்குப் படைகளை அனுப்பியதிலிருந்து வலுப் பெற்றது. சோவியத் யூனியனில் பிரெஷ்னெவ் ஆட்சி இருந்த காலம் முழவதும் சீன-சோவியத் உறவில் முறுகல் நிலை இருந்து வந்தது. 1980களில் தொடங்கிய நெகிழ்வு சோவியத் யூனியனின் உடைவின் பின்பு, சீனாவின் அரசியல் மாற்றங்களின் விளைவாகவும் ரஷ்யாவில் அமெரிக்காவின் ஆதிக்க முனைப்பு கடும் எதிர்ப்பைக் கண்டதன் பயனாகவும் ஒரு புதிய உறவை வலுப்படுத்தியுள்ளன.

அமெரிக்கா உலகின் மிகப் பெரிய ராணுவ வல்லரசாக உள்ளது. அதன் ராணுவத் தளங்கள் அமெரிக்க எல்லைகட்கும் அப்பால் வெகு தொலைவிற் பலவேறு நாடுகளில் உள்ளன. இப்போது இந்திய மேலாதிக்கம் அதன் கூட்டாளியாகி விட்டதோடு அதன் அயல்நாடுகளது உள் அலுவல்களில் தீவிரமாகக் குறுக்கிடுகிறது. இக் குறுக்கீடுகள் மூலம் சார்க் அமைப்பு என்பதும் இந்திய மேலாதிக்கத்தின் ஒரு கரமாக மாற்றப்பட்டு வருகிறது. இதை எல்லாம் மூடி மறைக்கவே சீன மிரட்டல் என்பது சிலரால் முன்னெடுக்கப்படுகிறது. இதில் முக்கியமானது என்னவென்றால் இந்திய அரசாங்கமோ அமெரிக்காவோ குற்றஞ் சாட்டுகிற விதமாகச் சீனா இதுவரை எந்த நாட்டின் உள் அலுவல்களிலுங் குறுக்கிட்டதில்லை. சீனாவின் "முத்துமாலை" எனப்படும் இந்து சமுத்திரப் பிராந்தியத் துறைமுக வசதிகளின் விருத்திக்கான உதவி பற்றி இதுவரை முற்குறிப்பிட்ட விஷமிகளை விட வேறு எவரும் குறிப்பாக எந்த நாட்டின் அரசாங்கமுமே விமர்சிக்கவுமில்லை ராணுவ நோக்கங் கற்பிக்கவும் இல்லை. அதற்கான வாய்ப்பும் ஆதாரங்களும் இருந்திருந்தால் இந்தியாவும் அமெரிக்காவும் அதைப்பற்றி வெளிவெளியாகப் பேசத் தயங்கி இரா.

தொடர்ச்சி 15 ம் பக்கம்

# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## அன்னியத் தலையீட்டுக்கு வாய்பிளந்து காத்திருப்போருக்கு நேபாளத்திலிருந்து ஒரு செய்தி

உள்நாட்டு அனுகுமுறைகளில் இழைக்கப்பட்ட தவறுகள் மட்டுமன்றி, இந்திய பிராந்திய மேலாதிக்கத்தையும் அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களையும் நம்பி ஏமாந்து நடுத்தெருவுக்கு வந்துள்ள அவலத்தையே இன்று தமிழ்த்தேசியவாதம் எதிர்கொண்டு நிற்கின்றது. இலங்கையில் மாபெரும் மனிதப் பேரவலம் நடந்து முடிந்திருக்கிறது. தமிழ் மக்கள் சொல்லொனாத் துயரங்களை தொடர்ந்து அனுபவிக்கிறார்கள். ஆனால் இன்னமும் அன்னியத் தலையீடு பற்றிய மாயைகள் ஒழிவதாய் இல்லை. மேலை நாடுகள் பற்றிய எதிர்பார்ப்புக்களும் எவ்வளவு தூரம் பயனற்றவையோ, இந்தியா பற்றியும் தமிழ் நாட்டின் அரசியற் கட்சிகள் பற்றியுமான எதிர்பார்ப்புக்கள் அவ்வளவு தூரம் பயனற்றவையே. அன்னியத் தலையீடு என்று நாம் எதற்காக ஏங்குகின்றோம்? எந்தத் தலையீட்டின் முடிவிலும் ஏமாறுவோர் தமிழராகவே இருப்பர் என்பதை இனியாவது விளங்க வேண்டும். இல்லாவிடின் இப்போது போலவே இதுபோன்ற இன்னொரு பேரவலத்தைத் தடுக்க முடியாது போகலாம்.

நேபாள பிரதமர் பிரசண்டா பதவி விலகியிருக்கிறார். நேபாளத்தில் மக்களாட்சி மலராமல் பார்த்துக் கொள்ளும் பணிகள் செவ்வனே நடக்கின்றன. அன்னியத் தலையீட்டுக்காக ஏங்குவோருக்கு நேபாளத்தில் நடந்து கொண்டிருப்பது நல்லதொரு பாடம்.

நேபாளத்தில் பிரசண்டா தலைமையிலான மாவோயிஸ்ட் கூட்டணி அரசு இராணுவ தளபதி ஜெனரல் ருக்மாங்கா கடாவலிடம் அரசின் உத்தரவை மீறி, ராணுவத்துக்கு ஆள் தேர்வு நடத்தியது, ஓய்வு பெற்ற எட்டு இராணுவ ஜெனரல்களை மீண்டும் பணியில் அமர்த்தியது, தேசிய விளையாட்டுகளில் இராணுவம் பங்கேற்க மறுத்தது ஆகியவை குறித்து விளக்கம் கேட்டது. விளக்கத்தை இராணுவ தளபதி வழங்காததையடுத்து பிரதமர் பிரசண்டா தலைமையில் மந்திரிசபையின் சிறப்புக் கூட்டம் நடைபெற்று அதில், இராணுவ தளபதி பதவியில் இருந்து ஜெனரல் ருக்மாங்கா கடாவலை நீக்குவது என்று முடிவு செய்யப்பட்டது. அவருக்கு அடுத்த இடத்தில் உள்ள லெப்டினன்ட் ஜெனரல் குல் பகதூர் இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டார். பிரதமரின் இந்த முடிவுக்கு இந்தியா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன. முடிவை மாற்றச் சொல்லி பிரசண்டாவை எச்சரித்தது இந்தியா. ஆனால் தனது முடிவில் உறுதியாக இருந்தார் பிரசண்டா. தொடர்ந்து நெருக்குவாரங்கள் இந்தியாவிடமிருந்து வந்து கொண்டே இருந்தன. பிரசண்டா அசையவில்லை. நேபாள ஜனாதிபதி ராம் பரண் யாதவவை இந்த முடிவை ஏற்க மறுக்கும்படி இந்தியா அறிவுறுத்தியது. அதேபோலவே நேபாள ஜனாதிபதி முடிவை ஏற்க மறுத்ததோடு நில்லாமல் அரசியலமைபிற்கு முரணான வகையில் பதவி நீக்கப்பட்ட இராணுவ தளபதியை மீள இராணுவ தளபதியாக நியமித்தார். இதை எதிர்த்து பிரதமர் பிரசண்டா பதவி விலகினார். மனச்சாட்சியுடனும் நேர்மையுடனும் எடுக்கப்பட்ட முடிவு அது. தனது பதவி விலகல் உரையில் பிரசண்டா "நாற்காலி ஆசைக்காக வெளிநாட்டவரின் தயவை எதிர்நோக்கிய காலம் முடிந்து விட்டது. தேசத்தின் கௌரவத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கு எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராகுமாறு நாட்டுப் பற்று கொண்டவர்களைக் கேட்டுக் கொள்கிறோம். மாபெரும் மக்கள் போராட்டத்தில் தங்கள் உயிரை அர்ப்பணித்திருக்கும் பத்தாயிரக்கணக்கான மக்களின் குருதியின் மீது நின்று கொண்டு, அந்நியக் கடவுளர்களின் முன் நாம் தலைவணங்க மாட்டோம்." என்று தெரிவித்தார்.

நாடு முழுவதும் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ள நிலையில் நேபாள ஜனாதிபதி தனது நிலையிலிருந்து வாபஸ் பெறும்வரை நாடளாவிய ரீதியில் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுமென மக்களும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வரும் மக்கள் அமைப்புக்களும் தெரிவித்துள்ளன. இது இப்படி இருக்க நேபாளத்தில் மீண்டும் ஒரு அரசியல் குழப்ப நிலை உருவாக மாவோவாதிகள் தான் காரணம் என்ற பிரச்சாரம் முன்னெடுக்கப்படுகிறது. எமது தமிழ் ஊடகங்களும் இதையே திரும்பத்திரும்ப சொல்கின்றன. இந்த முழுக் குழப்ப நிலைக்கும் இந்தியாதான் முழு முதல் காரணம். நேபாளத்தில் இந்திய மேலாதிக்கத் தலையீடுகள் அப்பட்டமாக இடம் பெற்றிருக்கின்றன. மன்னராட்சியையும் நேபாள முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளையும் பாதுகாத்து நிலை நிறுத்த இந்திய அமெரிக்க ஆளும் வர்க்கங்கள் சதா முயன்று வந்துள்ளன. அமெரிக்காவின் 'சி.ஐ.ஏ.' இந்தியாவின் 'றோ" போன்ற உளவு அமைப்புகள் நேபாளத்தில் தமது கைவரிசைகளைக் காட்டியே வருகின்றன. அவற்றை எல்லாம் முறியடிக்கும் வகையில் மாவோவாதிகளின் தலைமையிலான வெகுஜன அரசியல் மார்க்கம் உறுதியானதாக இருந்து வந்திருக்கின்றது. மாவோவாதிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து ஏராளமான முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. இவை அனைத்தையும் மாவோவாதிகள் வெற்றிகரமாக முறியடித்து முன்னேறியிருக்கிறார்கள். அண்மைய இந்தியத் தலையீடு மிகவும் நேரடியானது.

நேபாளத்தில் புதிய அரசொன்றை அமைப்பதற்கான சதித்திட்டத்திற்காக நேபாளத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களை வாங்கியும் விற்றும் மிகக் கேவலமான செயலில் இந்தியா ஈடுபட்டுள்ளதாக் பிரசண்டா நேரடியாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். மாவோவாதிகள் அற்ற புதிய அரசை உருவாக்க இந்தியா படாதபாடுபட்டது. இதன் ஒரு கட்டமாக நேபாள எம்.பி.க்களை வாங்கியும் விற்றும் நேபாளத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அரசியல் கட்சிகள் இந்திய உதவியுடன் ஈடுபட்டன, மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகளும் தலைமைத்துவம் வகிப்பதற்கு பொருத்தமற்ற அரசியல் கட்சிகளுமே வெளிநாடுகளின் தந்திரோபாயமான ஆலோசனைகளின்படியே செயற்பட்டு வந்தன. மாவோவாதிகள் தவிர்ந்த ஏனைய எல்லோரையும் ஒரு அணியில் திரட்டும் பணியில் நேபாளத்துக்கான இந்தியத் தூதர் ராகேஷ் சூட் மிகவும் மும்மரமாக ஈடுபட்டார். இந்தியா தனது நலனுக்குப் பாதகம் விளைகின்ற போது எந்தவொரு தலையீட்டையும் யாருக்கெதிராகவும் செய்யத் தயங்காது. இது இந்தியாவுக்கு மட்டுமல்ல ஏனைய ஏகாதிபத்திய மேலாதிக்க நோக்கம் கொண்ட நாடுகளுக்கும் பொருந்தும்.

இப்போது இலங்கையிலும் இந்தியா தீர்த்து வைக்க வேண்டும் என்ற மன்றாட்டம் தொடங்கியிருக்கிறது. இந்திய இலங்கைத் தமிழர் சார்பாகக் குறுக்கிடும் என்கிறவர்களே அது போர் நிறுத்தத்தையும் அமைதியையும் கொண்டுவரும் என்றார்கள். இன்று அவர்களே மாபெரும் மனிதப்பேரவலத்தின் பின்னணியில் இந்தியா தேசியஇனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்கிற மாயையையும் கட்டமைக்கிறார்கள். சோனியாவும், மன்மோகனும், நாராயணனும் மீண்டும் மீண்டும் கதிமோட்சம் தரும் கடவுளர்களாக சித்தரிக்கப்படுகிறார்கள். இந்தியாவில் அதிகாரத்திலுள்ளவர்கள் தனிமனிதர்களல்ல. அதிகாரம் ஒரு ஆளும் வர்க்கத்திடம் உள்ளது. அதை இந்திய அரசு செயற்படுத்துகிறது. இந்தியாவின் பாதுகாப்பு என்பது அந்த வர்க்கத்தின் இருப்பைப் பற்றியது. இந்தியாவின் நலன்கள் எனப்படுவன, அந்த வர்க்கத்தின் நலன்களைக் குறிக்கின்றன. இந்தியாவின் ஆளும் வர்க்கத்திற்குத் தன்னுடைய நலன்களைப் பேணிக்கொள்ள எந்தவிதமான அயல் உறவுகள் தேவை என்று தெரியும். அந்த அடிப்படையிலேயே சர்வதேச உறவுகள் விருத்தி பெறுகின்றன. இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கக் கனவு பிரித்தானியாவின் தென்னாசிய மேலாதிக்கக் கனவின் தொடர்ச்சியாகவே இருந்து வந்துள்ளது. இதை மறுக்க இயலாது. இன்று இந்தியா நேபாளத்தில் அரங்கேற்றியிருப்பது இதன் ஒரு பகுதிதான். இந்தியா பற்றியும் அன்னியத் தலையீடு பற்றியும் நெஞ்சாரப் பொய்யுரைக்கிறவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். சொல்லக்கூடியது ஒன்றுதான். போதும் நிறுத்துங்கள் உங்கள் பொய்களை. மக்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய தருணம் இது. தவறுமிடத்து இன்னொரு தருணம் வராமலேயே போகலாம்.

## வடகொரியா அனுக்குண்டு பரிசோதனை அமெரிக்கா அலறுவது எதற்காக?

வடகொரியா அண்மையில் நிலத்திற்கு அடியிலான அனுக்குண்டு பரிசோதனையை நடத்தியுள்ளதாகவும் இது உலகத்திற்கு மிகப் பெரும் ஆபத்தானது என்றும் அமெரிக்கா அபாய ஓலம் வைத்துள்ளது. ஏற்கனவேயும் வட கொரியா சக்திவாய்ந்த ஏவுகணைப் பரிசோதனைகளை நடாத்தியுள்ளதாகவும் அமெரிக்காவும் அதனது கூட்டாளிகளும் அபாயச் சங்கு ஊதி வருகின்றனர். உலக சமாதானத்தினதும் உலக மக்களினதும் ஏகபோகப் பாதுகாவலர்கள் தாமே என்பது போலவே அமெரிக்க மேற்குலக ஆட்சித் தலைவர்கள் வடகொரியாவிற்கு எதிரான கடும் கண்டன ங்களைத் தெரிவித்து வருகின்றனர். இதன் வழியிலேயே ஈரான் மீதான அனு ஆயுதக் குற்றச் சாட்டையும் முன் வைத்து வருகின்றனர்.

அணுக்குண்டுகளை முதலில் உற்பத்தி செய்ததும் அவற்றை மற்றொரு நாட்டின் மீது போட்டு மனிதப் பேரவலத்தை உருவாக்கிய ஒரே நாடு அமெரிக்காதான். அதன் பின்பே பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா என்பன அணுக்குண்டுகளை வைத்துக் கொண்டனர். இச்சூழலிலேயே சீனா தனது சொந்த முயற்சியால் அணுக்குண்டு பரிசோதனைகளில் வெற்றி பெற்றது. ரஷ்யா அமெரிக்காவை மிஞ்சும் விதத்தில் அனுவாயுதப் பரிசோதனையிலும் உற்பத்தியிலும் ஈடுபட்ட வேளை அமெரிக்கா அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அணுவாயுத ஒப்பந்தம் செய்யப்படுவதை வற்புறுத்தி வந்தது. ரஷ்யாவை கட்டுப்படுத்துவதுடன் ஏனைய நாடுகளும் அனுவாயுத உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுவதையும் தடுக்கும் உள்நோக்கமாகக் கொண்டதே அமெரிக்காவின் திட்டமாகும். சீனாவிற்குப் பின் இந்தியாவும் அதனைத் தொடர்ந்து பாக்கிஸ்தானும் அனுக்குண்டுப் பரிசோதனைகளை நடாத்தி அதில் வெற்றியடைந்தன. அமெரிக்காவின் எதிர்ப்பு வெறும் கண்துடைப்பாகவே இருந்து வந்தது.

ஏற்கனவே ஈரான் மீது அணு ஆயுத உற்பத்திக் குற்றச் சாட்டு சுமத்தி கடும் எதிர்ப்பை அமெரிக்க - மேற்குலக நாடுகள் தெரிவித்து வரும் சூழலிலேயே ஆசிய நாடான வடகொரியா தனது அணுப் பரிசோதனையை நடாத்தியிருக்கிறது. அதுவும் ஏற்கனவே நடைமுறையில் கடைப்பிடிக்கப்படும் நிலத்திற்கு அடியிலான பரிசோதனையை மட்டுமே செய்துள்ளது. வடகொரியா இறைமையையும் தன்னாதிக்கமும் கொண்ட ஒரு நாடு. தனது நாட்டின் சுதந்திரம் சுயாதிபத்தியத்தைப் பாதுகாக்க எத்தகைய முற்பாதுகாப்பு நடவடிக்கையிலும் ஈடுபட அந்நாட்டிற்குப் பூரண உரிமை உண்டு. அமெரிக்காவிற்கு உள்ள பிரச்சினை யாதெனில் வடகொரியா இன்றுவரை சிறிய நாடாயினும் சோஷலிச நாடாகத் தொடர்வது தான். கொரியத் தொழிலாளர் கட்சியின் தலைமையில் நாட்டை விடுதலை செய்து இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் முழு நாட்டையும் சோஷலிசப் பாதையில் முன்னெடுத்துச் செல்லவிருந்த தருணத்திலேயே அமெரிக்க ஏகாதிபத்தியம் கொரிய தீபகற்பத்தில் கால் பதித்தது.1950 களில் கொரிய மக்கள் வீரம் மிக்க விடுதலை யுத்தத்தில் தோழர் கிம் இல் சுங் தலைமையிலான தொழிலாளர் கட்சியின் வழிகாட்டலில் போராடினர். அப்போராட்டத்தில் மூக்குடைப்பட்ட அமெரிக்கா கொரிய நாட்டை வடக்கு தெற்கு எனப் பிரித்து தெற்கில் தனது பொம்மை ஆட்சியை நிறுவியது. வட கொரியா சோசலிசப் பாதையில் வளர்ச்சி கண்டது. கொரிய மக்களின் விருப்பமும் அபிலாஷையும் பிரிக்கப்பட்ட கொரியா ஒரே தேசமாக இணைய வேண்டும் என்பதேயாகும். அமெரிக்கா தென்கொரியாவில் ராணுவ விமானத் தளங்களை வைத்து வட கொரியாவை அடித்து வீழ்த்துவதையே நோக்கமாகக் கொண்டு செயலாற்றி வருகிறது. அதற்காக ஒவ்வொரு தருணத்தையும் பயன்படுத்தி வந்துள்ளது.

ஆனால் வட கொரிய மக்களும் அதன் சோசலிச ஆட்சியும் அமெரிக்காவின் ஆணைக்கும் அச்சுறுத்தல்களுக்கும் அடிபணிய மறுத்தே வருகிறார்கள்.. அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் இந்தியாவும் பாகிஸ்தானும் வைத்திருக்கும் அணுக்குண்டுகளால் உலகத்திற்கு ஆபத்து இல்லையாம். ஏன் இஸ்ரேலில் அமெரிக்க நிறுத்தியுள்ள அணு ஆயுதங்களால் மத்திய கிழக்கிற்கு அபாயம் இல்லையாம். ஆனால் ஆசியாவில் வடகொரியாவும் ஈரானும் அணுவாயுதம் செய்து கொள்வதால் ஆபத்தாம். இதுதான் ஏகாதிபத்திய உலக மேலாதிக்க நியாயம்.

## ஏகாதிபத்திய உலகில் மக்களை ஒன்றுதிரட்டலும் போராடுதலும்

## இறுதியாய் சில குறிப்புகள்: . அருந்ததி ராய்

எதிர்ப்புகளுக்கான உத்திகளை வடிவமைத்துக் கொள்ளுவதைப் பற்றிய விவாதங்கள் ஏதும் இன்றைய உலகில் நடைபெறவில்லை. எதிர்ப்புகளைக் எப்படிக் காட்டுவது என்று வழிமுறைகளைத் தேர்ந்தெடுப்பது மக்களின் கையில் மட்டுமில்லை. இது அரசாங்கத்தின் கையிலும் இருக்கிறது. எக்கச்சக்கமான ராணுவ பலத்துடன் அமெரிக்கா, ஈராக்கை ஊடுருவி ஆக்கிரமித்து வைத்திருக்கும்போது, அதற்கான எதிர்ப்பை ஒரு முறையான ராணுவத்திடமிருந்தா எதிர்பார்க்க முடியும்? அப்படியே முறையான ராணுவ எதிர்ப்பாகவே இருந்தாலும் அதுவும் தீவிரவாதம் என்றே அழைக்கப்படும். விந்தை என்னவென்றால், அமெரிக்காவின் ஆயுதங்களும், நிகரில்லா வான்படை மற்றும் சுடுதிறன் ஆகியவையும், பயங்கரவாதத்தை நிர்ப்பந்திக்கின்றன. செல்வமும் வலிமையுமில்லா மக்கள், தம் உத்திகளாலும் திருட்டுத்தனத்தாலும் நிரவுகிறார்கள். நம்பிக்கையிழந்தும், முரட்டுத்தனமாக ஒடுக்கப்பட்டும் இருக்கும் இந்தக் காலகட்டத்தில் அரசாங்கங்கள் வன்முறையற்ற போராட்டங்களை மதிக்கவில்லையென்றால் அது வன்முறைக்கான உரிமையைத்தான் வழங்குவதாகும். வன்முறையற்ற வகையில் தெரிவிக்கப்படும் மாற்றுக் கருத்துக்களின்பேரில் மாற்றங்களைக் கொண்டு வராத எந்த அரசும் பயங்கரவாதத்தைக் கண்டிப்பது நம்புதற்குரியதன்று. ஆனால் இத்தகைய வன்முறையற்ற எதிர்ப்பியக்கங்கள் நசுக்கப்படுகின்றன. மக்களை ஒன்று திரட்டுதலோ அல்லது ஒரு நிறுவனமோ எதுவாயிருந்தாலும் சரி, அவை விலைக்கு வாங்கப்படுகின்றன, உடைக்கப்படுகின்றன அல்லது அலட்சியப்படுத்தப்படுகின்றன. இதே நேரத்தில் அரசுகளும் - ஊடகங்களும் - திரைப்படங்களும், நேரம், அவர்கள் மேல் குவியும் கவனம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி, பயங்கரவாதத்துக்கெதிரான போரின் மீது கொண்ட மதிப்பு எல்லாவற்றையும் பகட்டாகச் செலவிடுகின்றன. இவையெல்லாம் சேர்ந்து வன்முறையைத் தெய்வீகமாக்கிவிடுகின்றன.

இது நமக்குச் சொல்லும் சேதி நிலைகுலையச் செய்வதும் ஆபத்தானதும் ஆகும். இச்சேதி என்னவென்றால்: நீ பொதுமக்களின் துன்பத்தை வெளியே கொண்டு வர விரும்பினால் வன்முறையே வன்முறையற்ற வழியை விட ஆற்றல் மிக்கது. பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையேயான பிளவு மேலும் வளரும் இவ்வேளையில், இருக்கின்ற வளங்களைக் கைப்பற்றுவதும் ஆளுவதுமே பெரும் மூலதனக்காரர்களுக்கு மிக முக்கியமானதாகிவிடுகிறது. இது அமைதியின்மையைத்தான் வளர்க்கும். பேரரசின் மாற்றுப் பக்கத்திலே இருப்பவர்களுக்கு இந்தச் சிறுமைப்படுத்தப்படுதல் பொறுக்க முடியாததாயிருக்கிறது. அமெரிக்காவால் ஈராக்கில் கொல்லப்படும் ஒவ்வொரு குழந்தையும் நம் குழந்தை. அபுக்ரெய்பிலே சித்ரவதை செய்யப்பட்ட ஒவ்வொருவரும் நம் தோழர். அவர்களுடைய அலறல் நம்முடையது. அவர்கள் சிறுமைப்படுத்தப்பட்டபோது நாமும் சிறுமையடைந்தோம். ஈராக்கிலே போராடும் அமெரிக்கச் சிப்பாய்கள் இருக்கிறார்களே, பெரும்பாலும் ஏழ்மையிலிருந்தும் சிற்றூர்களிலிருந்தும் வந்த தன்னார்வலர்கள். அவர்களும் ஈராக்கியர்களைப் போலவே இக்கொடு நிகழ்வுக்குப் பலியாடுகளே. இப்போர்வீரர்கள் தமக்கென்றில்லாத ஒரு வெற்றிக்காக சாகச் சொல்லப்படுகிறார்கள்.பெருலாபக்காரார், வங்கியாளர்கள், அரசியல்வாதிகள், நீதிபதிகள், தளபதிகள் போன்ற பெரியோர்கள் மேலிருந்தபடி கீழே நம்மைப் பார்த்துத் தலையை முடியாதென ஆட்டுகிறார்கள், "வேறு வழியில்லை" என்கிறார்கள். போர் நாயை அவிழ்த்து ஏவி விடுகிறார்கள். அப்புறம் என்ன நடக்கிறது, ஆப்கானிஸ்தானின் அழிவுகளிலிருந்தும், ஈராக், செச்னிய இடிபாடுகளிலிருந்தும், ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன, காஷ்மீர வீதிகளிலிருந்தும், கொலம்பியாவின் மலை, வெளிகளிலிருந்தும், ஆந்திரா, அஸ்ஸாம் காடுகளிலிருந்தும், சிலீரிடும் இந்தப் பதில்தான் வருகிறது, 'பயங்கரவாதத்தைத் தவிர வேறு வழியில்லை".

பயங்கரவாதம், கிளர்ச்சி, ஆயுதப் போராட்டம், எப்படி வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள். அது ஆபத்தானதாக, அசிங்கமானதாக, மனிதத்தன்மையற்றதாக தெரியலாம். ஆனால் உண்மை அதுவல்ல, எந்தவிதமான எதிர்ப்பையும் தெரிவிக்க முடியாத நிலை உருவாகி வருகிறது. எனவே எதிர்ப்புணர்ச்சியின் வெளிப்பாடு வன்முறையைத் தேர்ந்தெடுப்பது தவிர்க்கவியலாததாகிறது. ஆனால் போர் உண்மையில் அப்படித்தான். சட்டபூர்வமான முறையில் வன்முறைகளை நிகழ்த்த அரசாங்கத்துக்கு மட்டுந்தான் ஏகபோக உரிமை இருக்கிறது என்பதைத் தீவிரவாதிகள் நம்புவதில்லை.

மனித சமுதாயம் ஒரு பயங்கரமான இடத்துக்குப் பயணிக்கிறது. நிச்சயமாக பயங்கரவாதத்துக்கு மாற்று உண்டு. அதன் பெயர் நீதி. அணு ஆயுதங்களாலோ, பரந்த மேலாதிக்கத்தாலோ, டெய்சி கட்டர் குண்டுகளாலோ மோசடித்தனமான ஆட்சிக் குழுக்களினாலோ, நீதியை விலையாகக் கொடுத்து அமைதியை வாங்க முடியாது. ஒரு சிலரின் மேலாதிக்கத்துக்கும் பெரும்பான்மைக்குமான ஆசைக்கு, சுயமரியாதைக்கும் நீதிக்கும் ஏங்குவோரின் விஞ்சும் வலுவினால் பதிலடி கொடுக்கப்படும். அது அழகானதா அல்லது ரத்தம் தோய்ந்ததா, என்ன மாதிரியான போராட்டம் என்பதெல்லாம் நம்மைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

தமிழ் வடிவம் - ஏகலைவா

முற்றும்

# சாதியம் பற்றிய சாரமற்ற ஆய்வு நூல்




சாதியின்மையா சாதிமறைப்பா? காலிங்க டியூடர் டி சில்வா, பி.பி.சிவப்பிரகாசம், பரம்சோதி தங்கேஸ், குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை, 2009, ப. 220 + xxi. (விலை குறிப்பிடப் படவில்லை)

ஆங்கிலத்தில் எழுதப்பட்டுத் தமிழாக்கப்பட்டுள்ள இந்த நூல் இரண்டு தலித்திய ஆய்வு நிறுவனங்களின் அனுசரணையுடன் வெளிவந்துள்ளது. இந் நூல் அறிமுகம் தவிர, பொதுவாக இலங்கையிலும் சிங்களச் சமூகத்திலும் "இலங்கையிலுள்ள இந்தியத் தமிழ்த்" தோட்டத் தொழிலாளரிடையிலும் உள்ள சாதிப்பாகுபாடுகள் பற்றியும் நகர்ப்புறத் தீண்டாமை என்ற தலைப்பில் கண்டி நகரச் சுத்திகரிப்புத் தொழிலாளர்களது நிலைமைகள் பற்றியும் ஐந்து கட்டுரைகளையும் இறுதியில் முடிவுரையையும் சிபாரிசுகளையுங் கொண்டது. மூன்று பின்னிணைப்புக்கள் உள்ளன. இந்த ஆய்விற் பெரும்பகுதி கண்டி, நுவரெலிய மாவட்டங்களில் உள்ள இரு இடங்களிலும் இரத்தினபுரியில் ஒரு பெருந்தோட்டத்திலும் யாழ் குடா நாட்டில் மல்லாகத்திலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் தெரிவுகள் எவ்வாறு ஒரு முழுமையான பார்வையை வழங்குமென்பதற்கான விளக்கம் நூலிற் தரப்படவில்லை. இந்நூல் வெளிநிதியுதவியுடன் செயற்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வின் தொகுப்பே என்று தான் கருத வேண்டியுள்ளது.

இலங்கையிற் சாதிப்பாகுபாடு பற்றிய கட்டுரை கட்டுக் கோப்பற்றும் போதிய திட்டமிடலின்றியும் சில விடயங்கள் பற்றிய நீண்ட விவரணங்களையும் முக்கியமான சில பற்றி வெகு சுருக்கமாகவும் மேலோட்டமாகவும் பிற சிலவற்றைத் தொடாமலும் போகிறது. இந் நூலில் இந்தியத் தமிழர் என்ற பதம் திரும்பத் திரும்பப் பயன்படுவதன் நோக்கம் நூலின் இரண்டு தமிழ்ச் சக ஆசிரியர்கட்கும் விளங்காமலிருக்குமோ அல்லது அவர்கட்கு அது உடன்பாடானதா? இவ்விடயம் தமிழாக்கியோருக்கும் அதைச் செம்மைப்படுத்த உதவிய பல்கலைக்கழக ஆசிரியர்கட்கும் முக்கியமானதாகத் தெரியவில்லை என்பது என் மனதில் எழுந்த ஒரு கேள்வி.

சிங்களச் சாதிகள் சிலவற்றைப் பற்றிய தகவல்கள் தவறாகவோ குழப்பமாகவே வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக துறாவ என்பது கள்ளிறக்கும் சமூகத்தினரைக் குறிக்கும். ஆனால் நூலில் சாராயம் தயாரித்தல் எனத் தரப்பட்டுள்ளது. ஹுனு (சுண்ணாம்பு) உற்பத்தி செய்யும் சாதியினரின் பேர் குனு (குப்பை) என்று தரப்பட்டுள்ளது. சாதி நீக்கஞ் செய்யப்பட்டோரே சாதியப் பாகுபாட்டால் அதிகம் பாதிக்கப்பட்டோராயும் பத்துக்கும் அதிகமான மாவட்டங்களில் வாழ்வோராயும் இருக்கையில் ஆய்வு கண்டி மாவட்டத்தில் உள்ள மூன்று கிராமங்கட்கு வரையறுக்கப்பட்டுள்ளது. எனினும் நூல் சிங்களவரிடையே சாதி அடையாளஞ் செயற்படுகிறதைக் கூறுகிற அளவுக்குச் சாதி நீக்கஞ் செய்யப்பட்டோரின் நிலை பற்றியோ இன்னமும் சாதியப் பாகுபாட்டாற் பாதிக்கப்பட்டோரின் நிலை பற்றியோ போதிய கவனங் காட்டியதாகத் தெரியவில்லை. கட்டுரையின் குறைபாடுகளை மொழிபெயர்ப்பின் செம்மையின்மை மேலும் மோசமாக்குகிறது.

யுத்தத்தாற் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் சாதிப்பாகுபாடு என்ற கட்டுரை, சாதி முறைக்கு எதிரான கிளர்ச்சி இந்தியாவில் நடைபெற முன்னமே யாழ்ப்பாணத்தில் நடந்தது என்று கூறப்பட்டுள்ளது. இது எவ்வளவு தூரம் உண்மை என்பது கேள்விக்குரியது. வெகுஜனனும் இராவணாவும் 1990 அளவில் எழுதிய நூலின் முதலாவது பதிப்பில் வெளிவந்த தகவல்களை 2004ஆம் ஆண்டு ஒரு கட்டுரையாசிரியரே பல்வேறு ஆதாரங்களுடன் பட்டியலிட்டதாகவும் கூறப்படுகிறது. 1966ம் ஆண்டு தொடக்கி வைக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பங்களிப்பும் அதை வழி நடத்திய கம்யூனிஸ்ற் (சமவுடமை?) கட்சியின் பங்களிப்பும் வெறுமனே 1968ல் நடந்த கோயில் நுழைவுப் போராட்டமாக ஓரங்கட்டப்பட்டுள்ளது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பேரே குறிப்பிடப்படவில்லை. ஒரு அகதி முகாமில் சேகரித்த தகவல்களின் அடிப்படையிலான தகவல்களைக் கொண்ட கட்டுரை என்றால் அதை அப்படியே அடையாளப்படுத்தி எழுதியிருக்கலாம். மாறாக முழுப் பிரதேசமும் பற்றிய ஆய்வு என்கிற மயக்கத்திற்குத் தேவையில்லை. எனினும் யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதியம் இன்னமும் உயிரோடு உள்ளது என்பதையும் விடுதலைப் போராட்டம் அதை முடிவுக்குக் கொண்டு வரவில்லை என்பதையும் கட்டுரை வலியுறுத்துவது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

மலையகத்தில் சாதி பற்றிய கட்டுரையில் பல உயர்நிலை இடைநிலைச் சாதியினர் பண்மையிலும் அடிநிலைச் சாதியினர் பெருமளவும் ஒருமையிலும் (மொட்டை வெள்ளாளர், ரெட்டியார், தச்சர், வண்ணார், பறையன், பள்ளன், சக்கிலியன்) வருவது ஏனென்று விளங்கவில்லை. இக்கட்டுரையில் இந்திய வம்சாவளித் தமிழர் என்ற அடையாளம் வற்புறுத்தப்படுவதும் கவனிக்கத்தக்கது. இன்று சாதி அரசியல் மலையகத்தில் வளர்க்கப்பட்டு வருவது பற்றிக் கட்டுரையில் எவ்விதமான குறிப்பும் இல்லை. நான்கு தோட்டங்களிற்கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டதும் ஒரு தோட்டம் (றொசெல்ல) பற்றிய தகவற் குறிப்பு மட்டுமே கட்டுரையில் உள்ளது.


கண்டியிலுள்ள நகரச் சுத்திகரிப்புத் தொழிலாளரது நிலைமைகள் பற்றிய கட்டுரை. எம்.சி., எம்.ரி. என இரண்டு வகையான குடியிருப்புக்கள் விவரிக்கப்படுகின்றன. இந்த எழுத்துக்கள் எதைக் குறிக்கின்றன என்ற அக்கறையில்லாமலே கட்டுரை தமிழாக்கப்பட்டுள்ளது. கட்டுரையிலுள்ள அட்டவணைகளில் உள்ள சில தகவல்கள் தமக்குள் முரண்படுகின்றன. தரப்பட்டுள்ள படங்கள் முழுமையற்றும் கட்டுரைக்குப் பயனற்றும் உள்ளன. ஒரு குறிப்பிட்ட குடியிருப்புப் பகுதி என்ற வகையிற் புதிய தகவல்கள் உள்ள போதும் ஒரு கட்டுரை என்ற வகையிலும் நூலின் ஒரு பகுதியாகவும் நோக்குகையில் இக் கட்டுரை மிகவும் பலவீனமானதும் நூலின் தலைப்புக்குப் பொருந்தி வராததுமாகும்.

நூலைப் படித்து முடித்த பிறகு இது என்.ஜி.ஓ. நிதி கொண்டு நடத்தப்பட்ட ஒரு ஆய்வின் அவசரக் கோலமான ஒரு தொகுப்பாகவே தெரிகிறது. இந்த நூலுடன் தொடர்புள்ளவர்கள் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தோர். இவ்வாறான ஒரு கனதியான விடயத்தை ஏனோ தானோ என்ற விதமாகச் செய்துள்ளமை வருத்தத்தக்கது. மொழிபெயர்ப்பும் சொற்பிழைகளும் கவலை தருவன. நூலின் தோற்றம் எடுப்பாக உள்ளது என்பதே நூலின் மிகச் சிறப்பான அம்சம்.

**சீவா**

**தாயகம் – கலை இலக்கிய சமூக விஞ்ஞான காலாண்டு இதழ் ஏப்பிரல் – ஜீன் 2009 வெளிவந்துள்ளது. அதில் எழுதப்பட்ட ஆசிரியர் தலையகத்தினை அதன் முக்கியத்துவம் கருதி இங்கு மீள் பிரசுரம் செய்கின்றோம். பல்வேறு கருத்துச் சுவையும் கலைத்துவ அம்சங்களும் கொண்ட தாயகம் சஞ்சிகையைப் படியுங்கள். விலை ரூபா 50 தொடர்புகளுக்கு 152-1/6 ஹல்ஃப்டோப் வீதி, கொழும்பு 12.**

# புதிய திசைக்கான தேவை




மக்கள் அல்லற்பட்டு அழுது புலம்புகின்றனர். போரின் நிச்சயமின்மைகளை விடப் போரின்மையின் நிச்சயமின்மைகள் கொடுமையாக உள்ளன. இன்றைய அவலத்திற்குச் சிங்களப் பேரினவாதத்தின் அளவுக்குத் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் அனைத்தும் விலக்கின்றிப் பொறுப்புக் கூற வேண்டியனவாய் உள்ளன. தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் மட்டுமன்றிப் பிற தேசிய, மதச் சமூகப் பிரிவுகளையும் பிளவுபடுத்துவதில் அவர்களது தலைமைகள் அளித்த பங்கு கணிசமானது. போர் உக்கிரமாகி மக்கள் இன்னலுற்று உயிர் தப்ப வழியின்றி அல்லாடிக் கொண்டிருந்த போதும் மாறி மாறிப் பழி சுமத்துகிற அரசியல் நடந்ததே ஒழியப் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பது பற்றியும் அவர்களது தன்மானமுள்ள வாழ்வுக்கு உத்தரவாதம் தேடுவது பற்றியும் எந்த விதமான அக்கறையுங் காட்டப்படவில்லை.

இன்னமும் தூர இடங்களில் உள்ள அதிகார பீடங்களின் குறுக்கீடு பற்றிய எதிர்பார்ப்புகட்குக் குறைவில்லை. தமிழ் நாட்டில் நடைபெறுகிற ஈழத் தமிழர் ஆதரவு நாடகங்கள் உணர்ச்சிவசப்பட்ட நல்லவர்களது உயிரைத் த[illegible]குளிப்புக்களிற் பறிக்கின்றன. ஏமாற்றுக்கார அரசியல் தலைவர்களது பதவிகளைக் காப்பாற்றுகிற முயற்சிகளின் பகுதியாகவோ இன்னொரு ஏமாற்றுக் கும்பலை அதிகாரத்தில் அமர்த்தவோ தான் தமிழ் மக்களின் அனுதாபமும் கோபமும் திசை திருப்பப்படுகின்றன.

புலம்பெயர்ந்த தமிழர் இடையிலும் பல குழப்பமான போக்குக்களே காணப்படுகின்றன. ஒருமித்த நோக்குடன் ஒரு குறைந்தபட்ச வேலைத் திட்டம் தமிழகத்திலும் இல்லை, புலம்பெயர்ந்தோரிடையிலும் இல்லை. நாம் இதன் காரணங்களைத் தேடு வோமாயின் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைப் போராட்டத்திற்குள்ளே அவற்றிற் பெரும் பகுதியைக் காணுவோம். தமிழ்த் தேசியம் தன்னை யாருடன் அடையாளப்படுத்திக் கொண்டு வந்துள்ளது என்பது முதலாக விடுதலை பற்றி முன்வைக்கப்பட்ட மக்கள் அரசியல் மறுப்பு, மக்கள் போராட்ட மறுப்பு, மக்கள் அதிகார மறுப்பு அணுகுமுறை வரை அனைத்துமே தமிழ் மக்களைத் தனிமைப்படுத்திப் பலவீனப்படுத்தியுள்ளன.

தமிழ் மக்களுக்கு ஏற்புடைய நியாயமான ஒரு தீர்வைப் பற்றி நாம் சிந்திக்கிற போது அத் தீர்வு நாட்டின் சகல சமூகங்களது பிரச்சினைகட்கும் நியாயமான தீர்வாக அமைய வேண்டிய தேவையைப் பற்றியுஞ் சிந்திக்க வேண்டும். அதை அடைவதற்கான நட்புச் சக்திகளை நாம் அடையாளங் காண வேண்டும். நமக்குள்ளே இருக்கிற சகல சமூக ஒடுக்குமுறைகளையும் நீக்குவது பற்றியுஞ் சிந்திக்க வேண்டும்.

ஒரு போரின் முடிவு போராட்டத்தின் முடிவல்ல. போராட்டம் தொடரும். ஆனால் அது கடந்த காலத் தவறுகளிலிருந்து கற்பதன் மூலமும் சமூக நீதிக்கும் விடுதலைக்குமான பிற போராட்டங்களுடன் கைகோத்துச் செல்வதன் மூலமுமே வெற்றிப் பாதையிற் போக முடியும். போரைக் காட்டியே அதிகாரத்தைப் பேணி வந்த ஆட்சியாளர்கள் போரின் முடிவுடன் தீர்வுகளைத் தரப் போவதில்லை. தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டவற்றைப் போலச் சிங்கள முஸ்லிம் மலையகத் தமிழ் மக்களிடமிருந்தும் பல உரிமைகள் பறிக்கப்பட்டு வருகின்றன. அவற்றைப் பற்றிய கவனத்தைத் திசை திருப்பத் தமிழரை எதிரிகளாகக் காட்டி முழு நாட்டிலும் அடக்குமுறையைத் திணிக்கும் அபாயம் உள்ளது. எனவே தான் தமிழ் மக்கள் குறுகிய சிந்தனைகளினின்று விடுபட்டுத் தங்களது உரிமைகட்கான போராட்டத்தை முழு நாட்டினதும் சனநாயக, மனித உரிமைகட்கும் பொருளாதாரச் சுதந்திரத்திற்கும் மீட்சிக்குமான ஒரு பெரிய போராட்டத்தின் பகுதியாக்குவது பற்றிச் சிந்திக்க வேண்டிய வேளை வந்து விட்டது. தமிழ் மக்களின் கண்ணீரை அந்நியர்களோ புலம்பெயர்ந்தோரோ துடைத்து விட முடியாது. தமது கைகளாலேயே தமது கண்ணீரைத் துடைத்துத் தமது கால்களிலேயே நின்று போராடத் தமிழ்ச் சமூகம் ஆயத்தப்படுத்தப்பட வேண்டும். அவர்களது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முழு நாட்டினதும் விடுதலைக்கான போராட்டமாக விரிவுபடுத்துவதை விடச் சகல மக்களுக்கும் நன்மை தரக்கூடிய போராட்டப் பாதை வேறு இல்லை.

- ஆசிரியர் குழு -

13 பக்க தொடர்ச்சி

**இலங்கையில்..........**

சீனா இலங்கைக்குப் பொருளாதார உதவி வழங்குவதாலும் ஆயுதங்களை வழங்குவதாலுமே இலங்கை அரசாங்கத்தால் தனது பேரழிவுப் போரை முன்னெடுக்க இயலுமாக உள்ளது என்பது ஜெரமி பேஜின் கட்டுரையின் சாராம்சம் எனலாம். ஆனால் இலங்கை அரசாங்கப் படைகள் பயன்படுத்தி வருகிற பேரழிவுப் போர்க்கலங்களில் ஏகப் பெரும்பான்மையானவை எங்கிருந்து வந்தன என்பதற்கான விபரங்களை டைம்ஸ் கட்டுரையாளரோ அவரது தகவல்களின் தோற்றுவாயான ராமனோ தரவில்லை. தர விரும்பவும் மாட்டார்கள். அவை மேறகுலகினதும் இந்தியாவினதும் கபட நாடகத்தைத் தோலுரித்துக் காட்டும் என்பதே அதற்கான காரணமாகும்.

சீனா இலங்கைக்குக் கடற்படைக்கான விசைப்படகுகள், ராடார் கருவிகள், விமானங்கள் என்பனவற்றையும் சிறிய வகையான ஆயுதங்களையும் விற்றுள்ளது. இது சரியா பிழையா என்பது உரு கேள்வி. ஆனாற் சீன ராணுவ உபகரணங்கள் கொண்டே தமிழர் அழிக்கப்படுகின்றனரா என்பது இன்னொரு கேள்வி. சீனா தனது பாதுகாப்புக்காகவும் ஏகாதிபத்திய, கொலனிய, மேலாதிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான விடுதலைப் போராட்டச் சக்திகட்கும் பாதிக்கப்பட்ட நாடுகட்கும் ஆயுதங்களை வழங்குவதும் சரியானதோ இதையே சீனா 1970கள் வரை செய்தது. எனினும் சீனா முதலாளியப் பாதையில் போகத் தொடங்கிய பின்பு ஆயுத உற்பத்தி பாதுகாப்பு என்பதற்கும் அப்பால் வணிக நோக்கிலும் நடைபெறுகிறது. இது சில முன்னாள் சோஷலிஸ நாடுகளின் சீரழிவின் போது தொடங்கிய ஒரு போக்காகும். இதை மாக்ஸிய லெனினிஸவாதிகள் விமர்சித்தே வந்துள்ளனர். எனினும் இவ் விடயத்தில் சீனாவையோ ரஷ்யாவையோ தனித்து நோக்கி விமர்சிப்பது தவறானது.

இலங்கை உட்படப் பலவேறு நாடுகளின் இடையிலும் நாடுகட்குள்ளும் போரை மூட்டி அதன் மூலம் தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயலுகிற நாடுகளின் வரிசையில் சீனா உள்ளடங்[illegible]. எனினும் தனது நேச நாடு ஒன்றின் பாதுகாப்புக்கு என்று சீனா வழங்குகிற ராணுவத் தளவாடங்கள் உள்நாட்டுக்குப் போருக்கோ ஒரு சமூகத்திற்கு எதிரான ஒடுக்குமுறைப் போருக்கோ பயன்படாத முறையில் சீனா கட்டுப்பாடு எதையும் விதிக்க இயலாது. எனவே தான் சீனா உலக ஆயுதச் சந்தையில் முன்வரிசையில் இல்லாவிடினும் அதன் ஆயுத விற்பனை சோஷலிஸ, மனித விடுதலைக் கண்ணோட்டங்களில் விமர்சனத்து க்குரியதாகிறது. மறுபுறம் இந்திய, அமெரிக்க மேலாதிக்கங்கள் தமது ராணுவச் செயற்பாடுகள் மூலமும் பிற குறுக்கீடுகளின் மூலமும் சீனாவுடன் உறவுடைய நாடுகளைத் தமது ஆதிக்க மண்டலங்கட்குள் கொண்டு வர முற்படுகிற போது சீனாவும் தனது தேசிய நலன்களின் பேரில் அங்கு இழுபடுகிறது. அதனால் அது சரின நடத்தையாகி விடாது. எனினும் சீனா ஆயுதம் வழங்குவதாலேயே இந்தியா ஆயுதம் வழங்குகிறது என்கிற வாதம் உண்மைகளைத் தலைகீழாகப் புரட்டிப் போடுவதாகும்.

அமெரிக்கா உலகளாவிய முறையில் ஒவ்வொரு மூன்றாமுலக நாடுகட்கும் எதிரான ஒரு மிரட்டலாக உள்ளது என்பதையும் அது உலகின் பலவேறு பகு திகளிலும் தனது படைகளை நீண்ட காலத்திற்கோ குறுகிய காலத்திற்கோ தொடர்ந்தும் நிலைநிறுத்தி வருகிறதா என்பதையும் தென்னாசியாவின் சிறிய நாடுகட்கு இந்தியா ஒரு பெரிய மிரட்டலாக வளர்ந்து வந்துள்ளதா என்பதையும் நாம் முதலில் விசாரிக்க வேண்டும. அதன் அடிப்படையில் சீனாவின் நடத்தையை விளங்கிக் கொள்வதும் சிமர்சிப்பதும் கூடப் பொருத்தமாயிருக்கும்.

ராமன் போன்றோரின் பொய்ப் பிரசாரங்கட்கு எளிதாக எடுபடுவோரைவிட அவ்வாறான பொய்த் தகவல்களை வலிந்து தேடிப் பரப்புரை செய்வோர் மூலம் ஏமாற்றப்படுவோர் அனேகர் என நம்புகிறேன். ஏனெனில் ராமனுடைய நோக்கங்களை எளிதாக விளங்கிக் கொள்ளலாம். அவை மறுவர்த்தம் பெற்று வழமையான ஊடகங்கள் மூலம் வெளிவருகிற போது அவற்றுக்கு ஒரு நடுநிலைத் தோற்றம் உருவாகிறது.

சீனாவைத் தமிழர் நம்புவதாலோ நம்பாததாலோ அவர்களது உரிமைகட்கும் விடுதலைக்குமான போராட்டங்களிற் பெரிய பாதிப்பு இருக்கப் போவதில்லை. ஆனால் இந்தியாவினதும் அமெரிக்காவினதும் குறுக்கீடுகளின் இயல்பு வேறுபட்டது. அவற்றை நம்புவதா விடுவதா என்பதற்கு நடைமுறை முக்கியத்துவம் உள்ளது. தமிழ் மக்கள் தம்மை விட யாரையுமே அதிகம் நம்பாமல் இருப்பது பாதுகாப்பானது. அவர்கள் நம்பக்கூடிய சக்திகள் யாரென் அவர்களது போராட்ட அரசியல் எவ்வாறு விரிவடைகிறது என்பதே தீர்மானிக்கும். அவை நிச்சயமாக எந்த மேலாதிகக வல்லரசாகவும் இரா என்பது மட்டும் உறுதி.

*REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA*

ஏப்ரல் 2009

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org



## புரட்சிகர மே தினம் 2009





## மலையகம் அட்டனில்





## யாழ்ப்பாணம் புத்தூரில்














## உலக நாடுகளில்









வெளியீடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.